## நக்கல் நமசிவாயம்




Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 126 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (20.11.2022) ஹிஜ்ரி-1444, ரபிஉல் ஆகிர் - 25, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8


விலை ரூ.130



## கோட்டா விரட்டப்பட்டது எப்படி?

### அதிர்ச்சித் தகவல்களை வெளியிடும் விமல்

06 ஆம் பக்கம்



## 22 வருட சிறைவாசத்தின் பின் விடுதலையானார் ரகுபதி சர்மா

(த.யுவராஜ்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, 22 வருடங்கள் புதிய மகஸின் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த பிரம்மஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டில் எதுவித நிபந்தனைகளுமின்றி பொது மன்னிப்பு வழங்கி கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, 22 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த இவருக்கு கடந்த 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி 300 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அன்றைய தினம் அவரது மனைவி சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டார். அத்துடன் 2015ஆம் ஆண்டு...

02 ஆம் பக்கம்

# டிசம்பர் 9இல் புதிய கெபினெட்!

## எதிர்க்கட்சியின் முக்கிய புள்ளிகளுக்கு அமைச்சுப் பொறுப்புகள்

(நா.தினுஷா)

அமைச்சரவை மறுசீரமைப்பை டிசம்பர் 9ஆம் திகதி மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை டிசம்பர் 8ஆம் திகதி நிறைவேற்றிய கையோடு மறுநாள் புதிய அமைச்சரவையை நியமிக்கும் ஜனாதிபதி, இதில் எதிர்க்கட்சியில் இருந்துவரும் பிரமுகர்களுக்கு முன்னுரிமையளிக்கவுள்ளார்.

அதேசமயம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களில் எவருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவது பற்றி வரும் வாரம் அக்கட்சியின் தலைவர்களுடன் பேசி இறுதி முடிவை ஜனாதிபதி எடுக்கவுள்ளாரென ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## 90 பெண்கள் ஓமானில் சித்திரவதை

### ஓட்டமாவடியில் தாயொருவரின் கண்ணீர்க் கதை



(கனகராசா சரவணன்)

இலங்கையிலிருந்து எனது மகளை டுபாயில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவித்த வெளிநாட்டு...

02 ஆம் பக்கம்

## தினக்கூலியானார் ஜனாதிபதி ரணில்

### ஸ்ரீதரன் எம்.பி. சாடல்

(நா. தினுஷா)

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதாரத்தை நிவர்த்திப்பதற்கான திட்டங்கள் பற்றி பேசப்படவில்லை. கடனூடாகவும் யாரிடமாவது நிதி திரட்டி நாட்டைக் கொண்டு நடத்தலாம் என்று எண்ணி அன்றாட காட்சி போன்றே இந்தப் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதீடு அன்றாட காட்சியாக அமைந்துள்ளது. ஜனாதிபதியும் ஒரு தினக்கூலியாக மாறிவிட்டார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2023 நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான...

02 ஆம் பக்கம்

## கற்றல் உபகரணங்களின் விலை சடுதியாக உயர்வு


### கட்டணத்தைக் குறைக்க அரசு உத்தேசம்

செஸ் வரி திருத்தம் காரணமாக அத்தியாவசிய பாடசாலை உபகரணங்களின் விலையில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தால் அதனை மாற்றியமைக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில்...

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



சம்பந்தர் அண்ணருக்கு அண்மையில் இந்தப்பத்தியூடாக முன்வைக்கப்பட்ட யோசனை அவரின் கவனத்துக்கு போயிருக்கிறது எண்டு நினைக்கிறம்.

ரணிலோட பேசப்போக முதல் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள் அனைத்தையும் ஒண்டு திரட்டி பேசவேண்டிய அவசியம் பற்றி கடந்த மூண்டு கிழமையாக பேசியிருந்தோம்.

ரணிலோட பேசுறதை விடுவம். முதல்ல தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்த்தரப்பின் நிலைப்பாடு என்ன எண்டு ஒருத்தனுக்கும் தெரியாது.

தமிழரசுக்கட்சி ஒரு நிலைப்பாடு!
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாடு!
உதிரிக்கட்சிகள் ஒரு நிலைப்பாடு!
மலையக கட்சிகள் இன்னொரு நிலைப்பாடு!

ஆனால், இவர்கள் அனைவரும் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழர்களின் நிரந்தர அரசியல் தீர்வு பற்றிதான் பேசுகிறார்கள்.

சம்பந்தர் அண்ணர் காலங்கடந்து செய்த ஒரு காரியத்தை சரியாக செய்திருக்கவேணும்.


தமிழ்க் கட்சிகளுக்கான அழைப்பை முறையாக நேர்த்தியாக கொடுத்திருக்கவேண்டும்.

சுமந்திரன் மற்றும் மாவை சேனாதி அண்ணர் ஊடாகத்தான் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக சொல்லுகினம்.
உவை இரண்டுபேரும் தான்...

11 ஆம் பக்கம்

## இலங்கையைச் சேர்ந்த சிறுமி பிரித்தானியாவில் சாதனை

### நுண்ணறிவில் மேதை நிலையென புகழாரம்



பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட அரியானா தம்பரவ ஹேவகே என்றழைக்கப்படும் பத்து வயது மாணவியொருவர் நுண்ணறிவு பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவரின் சாதனை, அறிவியலாளர் ஐன்ஸ்டீனை விட புத்திசாலி என்று...

02 ஆம் பக்கம்



## பெண்களை வலுப்படுத்த விரைவில் சட்டமூலம்

### ஆறு மாதங்களுக்குள் பூர்த்திசெய்யுமாறு ஜனாதிபதி ரணில் ஆலோசனை

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்துவது தொடர்பாக தயாரிக்கப்படும் சட்டமூலத்தை அடுத்த வருடத்தின் ஆறு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தற்போதைய செயலாற்றுகை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

02 ஆம் பக்கம்

## பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் ஐ.நாவுக்கு

### இராதா எம்.பி. ஹட்டனில் தெரிவிப்பு

(எஸ். கணேசன்)

மலையக மக்களின் பிரச்சினைகள் அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் உள்வாங்கப்படவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
மலையக மக்கள் எதிர்கொள்ளும்...

02 ஆம் பக்கம்

## மாணவர் பேரணி மீது கண்ணீர்ப் புகை

(நா. தினுஷா)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிரிதம்ம தேரர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு 90 நாட்களாகின்றன. இந்நிலையில், அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் எதிர்ப்புப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த பேரணியின்போது, பிரதமர் அலுவலகத்துக்கு அருகில் வைத்து மாணவர்கள் மீது...

02 ஆம் பக்கம்



## 22 வருட...

மேன்முறையீடு செய்யப்பட்டது.

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் பிரம்மஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா தனது விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கு விண்ணப்பித்துள்ளார். இவரின் விண்ணப்பத்தை பரிசீலித்த ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததுடன், அம்மையாரின் அனுமதியுடனும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரிலும் எதுவித நிபந்தனைகளுமின்றி உடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

சிறையிலிருந்து நேற்று விடுதலையாகிய பின்னர் பிரம்மஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"எனது 22 வருட கால சிறைவாசத்திலிருந்து ஜனாதிபதி எதுவித நிபந்தனைகளுமின்றி என்னை விடுதலை செய்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு இணங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரும் அனுமதி வழங்கியமையுடன், நீதி அமைச்சரும் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

நான் சிறையில் இருந்தபோதும் எனது ஆன்மீகக் கடமைகளைச் செய்வதற்கு அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர், செயலாளர் மற்றும் பிரதித் தலைவர் தனபாலன் ஆகியோரும் எனக்கு பேருதவியாக இருந்துள்ளமையுடன், எனது விடுதலைக்காக அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு இன்றைய இந்த விடுதலையை உறுதிப்படுத்தினார்கள்.

முக்கியமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகங்கள், உணர்வாளர்கள் அனைவரும் எனது விடுதலைக்கு தங்களால் இயன்ற ஆதரவை வழங்கியுள்ளனர்.

குறிப்பாக கனடாவில் உள்ள நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் ஏற்பாட்டாளர் ரோய் சமாதானம், லண்டனைச் சேர்ந்த மனிதநேய செயற்பாட்டாளர் ராஜன் ஆசீர்வாதம் போன்றவர்களுடன் ஏனையவர்களும் எனது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியுடன் அவ்வப்போது பேசி வந்தார்கள்.

எனது இந்த விடுதலைக்கு முழுமையான காரணம் சிறைத்துறை அதிகாரிகளும் சிறைத் தலைமை செயலகமுமாகும்.

ஜனாதிபதி எனது ஆவணங்களை முழுமையாகப் பரிசீலித்து எனது விடுதலைக்கான ஒழுங்குகளைச் செய்து தந்தார். எனக்காக அவ்வப்போது நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் மனிதநேய அமைப்புகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" - என்றார்.

# ஐ.நா. அதிகாரிகள் யாழுக்கு விஜயம்!



ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் யாழ். மாநகரசபைக்கு வருகை தந்தனர். பின்னர் முதல்வருக்கும் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சபையின் அரசியல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் விவகாரத் திணைக்கள ஆசிய-பசுபிக் திணைக்களத்திற்கான பணிப்பாளர் பீட்டர் டியூ, அரசியல் விவகார அதிகாரி அல்மா சலியு, இலங்கைக்கான ஐக்கிய நாடுகளில் வதிவிடப் பிரதிக்குழு ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

இதில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள், யாழ். மாநகரசபையினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திகள், புலம்பெயர்ந்த தமிழர்களினால் மாநகரசபைக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் யாழ். மாநகரசபையின் ஆணையாளர், ஜெயசீலன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் இல்ல சிரமதானம்

***(கனகராசா சரவணன்)***



மாவீரர் தினத்தை முன்னிட்டு அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தை துப்பரவு செய்யும் பணிகளை கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசிய முன்னணி முன்னேடுத்துள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடக்கு-கிழக்கில் உள்ள மாவீர் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 4 மாவீரர் துயிலும் இல்லங்களும் துப்புரவு செய்யப்பட்டு விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

## இலங்கையைச் சேர்ந்த...

போற்றப்படுகிறது. அரியானா, மென்சா என்ற நுண்ணறிவு பரீட்சையில் பங்குபற்றி 162 புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ளார். இது 'மேதை நிலை' என்று கருதப்படுகிறது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங், புத்திசாலித்தனத்தின் அளவுகோல்களாக கருதப்படுகிறார்கள். இருவருமே நுண்ணறிவு தேர்வில் 160 புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில், அரியானா நுண்ணறிவு தேர்வின் உயர் சமூகமாக கருதப்படும் மென்சாவின் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

## 90 பெண்கள்...

வேலைவாய்ப்பு முகவர்நிலையம், அவரை ஓமானுக்கு கொண்டு சென்று விற்பனை செய்துள்ளது. அங்கு சித்திரவதை செய்யப்பட்டுவரும் எனது மகள் உட்பட விற்பனை செய்யப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த 90 பெண்களை காப்பாற்றி மீட்டுத்தருமாறு மட்டக்களப்பு ஓட்டமாவடி பாலைநகரைச் சேர்ந்த 51 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயாரான முகமது இஸ்மாயில் சித்திக்நிசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பாலைநகரைச் சேர்ந்த 22 வயதுடைய ஒரு பிள்ளையின் (2 வயது) தாயாரான முகமது அஸீம் பாத்திமா ஹமீதியாவை கணவர்விட்டுச் சென்றதுடன் வறுமையின் காரணமாக அவர் வெளிநாட்டு வீட்டுப் பணிபெண்ணாக செல்வதற்கு முடிவு செய்து களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த உதவி முகவர் ஒருவர் மூலம் கொழும்பிலுள்ள ஒரு பிரதான முகவரிடம் தனது கடவுச்சீட்டை வழங்கியள்ளார்.

அவர்கள் டுபாயில் காரியாலயத்தில் துப்பரவு வேலைக்கான வெற்றிடத்துக்கு அனுப்புவதாக தெரிவித்த நிலையில், கடந்த மார்ச் 03 ஆம் திகதி கொழும்பில் பயிற்சி இருப்பதாக அழைக்கப்பட்டதையடுத்து, அவர் அங்கு சென்று மார்ச் 06ஆம் திகதி அவரை ஓமானுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனது மகளை ஓமானில் சித்திரவதை செய்கின்றனர். அவருடன் அங்கு 90 பேர் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டுவருதாக எனது மகள் வட்ஸ் அப் மூலம் காணொளி அனுப்பியுள்ளார். எனவே, மகளையும் அங்குள்ள 90 பேரையும் முதலில் காப்பாற்றி மீட்டுத்தர வேண்டும்.

எனவே இளம் பெண்பிள்ளைகளை கொண்டு சென்று ஆடு, மாடு போல விற்பனை செய்பவர்களை கைதுசெய்ய வேண்டும். இந்தக் குழந்தைகளுக்கு தாய்வேண்டும். எனவே, அவரை மீட்டுத்தாருங்கள் என கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார்.

## கற்றல் உபகரணங்களின்...

இடம்பெற்றபோது விசேட கூற்றை முன்வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

செஸ் வரி மாற்றத்தால் பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வு குறித்து சிறப்பு விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"பாடசாலை கற்றல் உபகரணங்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் கிடைக்கப்பெறுவதில் பாதிப்பு ஏற்பட்டால் அவற்றின் கட்டணத்தை மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளோம்" - இவ்வாறு இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம், இம்மாதம் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் செஸ் வரியில் திருத்தங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட மக்களின்...

பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த தினங்களில் ஐ.நா. பிரதிநிதிகளை நானும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், எம்.உதயகுமார் எம்.பியும் சந்தித்து கலந்துரையாடியபோது மலையக மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பில் கருத்துகளை பகிர்ந்துகொண்டோம்.

வடக்கு, கிழக்குக்கு அப்பால் வாழ்கின்ற மலையக மக்களுக்கு அடிப்படை பிரச்சினைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. எனவே, இவர்களையும் கருத்திற் கொண்டு இவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர்களிடம் வலியுறுத்தினோம்.

இதற்கு பதிலளித்த அவர்கள் எதிர்வரும் ஆண்டு ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்வாங்கப்படவுள்ளதாக உறுதியளித்தனர்.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் புதிதாக குறிப்பிடுவதற்கு எதுவும் கிடையாது. மக்கள் நலன் சார்ந்த எந்த விடயங்களும் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் இல்லை. மாறாக மக்களுக்கு சுமை ஏற்றுகின்ற வரவு-செலவுத்திட்டமே இது.

இந்த வரவு-செலவுத்திட்டம் மக்களின் மீது மேலும் சுமைகளை ஏற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், ஏற்கனவே பொருளாதார ரீதியில் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது.

மக்கள் எதிர்பார்த்த எந்த விடயங்களையும் ஜனாதிபதி உள்வாங்கவில்லை. அத்தோடு, மலையகத்தை பற்றி ஒரு வார்த்தை கூட இந்த வரவு-செலவுத்திட்டத்தில் அவர் கூறவில்லை.

பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதன் பிறகு, உணவுத் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு போன்ற விடயங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டோர் மலையக மக்களே. எனவே, இதனை கருத்திற்கொண்டு மலையக மக்களுக்கு தேவையானவற்றை அறிந்து புதிய திட்டங்களை எதுவும் அவர் முன்வைத்திருக்கலாம் என இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## மாணவர் பேரணி...

பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன.

இந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்டவர்களி காலி வீதியினூடாக பயணத்து, ப்ளவர் ரோட்டில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்துக்கு அருகில் பயணித்துக்கொண்டிருந்தபோதே இவ்வாறு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளபட்டுள்ளன.

இதேவேளை, பேரணியை தடுத்து நிறுத்துவதற்காக பெருமளவு பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த பிரதேசத்தில் வீதித் தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

## பெண்களை...

மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் என்பன இணைந்து பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைக்காகத் தயாரித்துவரும் இந்தச் சட்டமூலத்தின் ஆரம்ப செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குக் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவை தொடர்பில் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுடன் இணைந்து செயற்படுவதற்கு பெண்கள் மற்றும் பாலின சமத்துவம் குறித்த தனியான நிறுவனமொன்றை அமைப்பதற்கான ஆரம்பகட்டத் திட்டங்களை நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, இதனை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழியளித்தார். அத்துடன் சட்டம் மற்றும் கொள்கைகளைத் தயாரிக்கும்போது சகல நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு அதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்குத் தேவைப்படும் ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி அவசியமாகவிருந்தால், தூதரகங்கள் மூலம் அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள், பாலின சமத்துவம் குறித்த தொடர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறும் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்துக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

நாடாளுமன்றப் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்துக்கு வருகை தந்தமை தொடர்பில் ஜனாதிபதிக்கு நன்றிகளைத் தெரிவித்த ஒன்றியத்தின் தலைவி நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, தமது ஒன்றியத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார்.

அத்துடன், சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்னவும் தமது ஒன்றியத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினார்.

பெண்களின் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்துக்கான தனியான ஆணைக் குழுவொன்றை நியமிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். அத்துடன், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் உட்பட ஏனைய தேர்தல்களிலும் பெண் வேட்பாளர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன், மாகாணசபைத் தேர்தலில் தற்போதுள்ள பெண்களுக்கான 25 வீத இட ஒதுக்கீட்டை குறைக்க வேண்டாம் என உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததுடன், அவ்வாறான எதிர்பார்ப்பு எதுவும் இல்லையென்றும் ஜனாதிபதி பதிலளித்தார்.

பெண் பொலிஸ் அதிகாரிகளுக்குக் காணப்படும் வெற்றிடங்களைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். அத்துடன், பொலிஸ் நிலையங்களில் பெண்களின் முறைப்பாடுகள் முன்வைக்கப்படும்போது அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்துவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கொண்ட தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குச் செல்வதைத் தடுப்பது, சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் குறித்த விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## தினக்கூலியானார்...

நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தினால் நாட்டு முன்னேற்றம் கிடைக்குமென, அவருக்கு ஆதரவான ஒருசில உறுப்பினர்களே கூறுகிறார்கள். அடுத்த ஆண்டில் எவ்வளவு வருமானம் வரபோகிறது, அதன் எல்லை என்ன, அந்த தொகையை எவ்வாறு செலவு செய்யப்போகிறது, பற்றாக்குறையாக எவ்வளவு வரப்போகிறது என்பது தொடர்பான எதிர்வுக்கூறலே வரவு-செலவுத்திட்டமாகும். ஆனால், ஜனாதிபதியும் ஒரு தினக்கூலியாக மாறிவிட்டார். அன்றாடக் காட்சி போன்றே ஜனாதிபதி இந்த பாதீட்டை சமர்ப்பித்துள்ளார் என்று நான் எண்ணுகிறேன்.

நாளாந்தம் யாரிடமாவது கடன் வாங்கி அல்லது யாராவதும் தரம் வைத்து இந்த நாட்டை கொண்டு நடத்தலாம் என்பதே ஜனாதிபதி கனவு காண்கிறார். நாட்டில் ஒரு பேரண்ட பொருளாதாரத்தையோ அல்லது நுண் பொருளாதாரத்தையோ நாட்டில் உருவாக்குவதற்கான திட்டங்கள் எதனையும், பொருளாதார பார்வையில் செய்யவில்லை.

குறிப்பாக, விவசாயத்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய மாற்றங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த பாதீட்டில் மீண்டும் யுத்தத்துக்கான அல்லது பாதுகாப்புப் படைகளுக்கான நிதி குவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் இல்லாத குண்டுச் சத்தங்கள் இல்லாதவொரு நாட்டில் ஏன் பாதுகாப்பு பிரிவுக்காக இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? அதிலும், கிட்டத்தட்ட 75 சதவீதமான படைவீரர்கள் வக்கிலும் கிழக்கிலும் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் நிலங்களையே இவர்கள் அங்கு கைபற்றியிருக்கிறார்கள்.

உதாரணமாக குறிப்பிடுவதானால் மயிலிட்டி பிரதேசத்தில் மக்கள் விவசாயம் செய்ய வேண்டிய 3 ஆயிரம் ஏக்கர் காணிகளில் இன்று படையினர் விவசாயம் செய்து வருகிறார்கள். வடக்கு , கிழக்கில் இவ்வாறு படையினர் வசம் இருக்கும் காணிகள் அவர்களின் பண்ணைகளாக இருக்கின்றன. இதற்காகவா இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

இந்த நிதியை விவசாயிகளுக்காக ஒதுக்கி அவர்களுக்கான உள்ளீடுகளை வழங்கி அவர்கள் முன்னேற்றமடைவதற்கான ஒரு முறையை உருவாக்கியிருந்தால், இந்த நாடும் முன்னேறியிருக்கும். இந்த நிதி ஒதுக்கீட்டை இராணுவத்தையும், இராணுவத்தின் பலன்களையும் தக்கவைப்பதற்கானவொரு சூழ்ச்சி வலையாகவே கருதத் தோன்றுகிறது. இது மீண்டும் நாட்டில் யுத்தத்தை அடிகோலுகின்ற, பயத்தை ஏற்படுத்துமொரு ஒரு செயற்பாடாகவே அமைந்துள்ளது.

அரச இயந்திரத்தை இயக்கமுடியாமல் இந்த அரசாங்கம் தடுமாறுகிறது. ஜனாதிபதி உள்ளிட்ட எம்.பிக்களால் நாட்டின் இயக்கு சக்தியை ஏன் பொருளாதார ரீதியாக கொண்டுவர முடியவில்லை. அதற்கு காரணம் பௌத்த மேலாதிக்க சிந்தனையும் இனவாத சிந்தனையும் ஆகும். இந்த சிந்தனைகள் இருக்கும் வரை ஒருகாலமும் உங்களின் பொருளாதார சிந்தனைகளை மேலோங்க விடாது.

நிமல், மஹிந்தானந்த போன்ற எம்.பிக்கள் நித்திரையிலிருந்து எழுந்து வந்து பேசுவது போல் கருத்து வெளியிடுகிறார்கள். தமிழ்க் கட்சிகளெல்லாம் ஒன்றிணைந்து வாருங்கள். தீர்வுகளை வழங்குவதாக கூறுகிறார்கள். தற்போதைய நிலைமையில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பது நிமல் சிறிபால டி சில்வா போன்றோருக்கு நன்றாக தெரியும். இவர்கள் உலகத்தை ஏமாற்றும் முயற்சிகளையே முன்னெடுத்து வருகிறார்கள் என்றார்.


FEMALE AIR TICKETING STAFF

Experienced
( IATA will be added advantage) or
Fresher-01 no
Male Sales Manager , Sales Executive
(Male/Female)
interested candidates please share your
CV along with Colour picture in whatsapp

Contact Information
0777 781 275 , +971507 524 688
ALFA TRAVEL & TOURISM
D/F3/U8, Sirimuthu Uyana Fl, Colombo - 14












# 2023 வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கு மேலும் சுமை



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க 2022 நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியை முன்கொண்டுபோக முடியாதபடி மக்கள் எதிர்ப்பு வலுவடைந்ததால் ஜூலை 09ஆம் திகதி நாட்டைவிட்டு ஓடவேண்டி ஏற்பட்டதால் புதிய ஆட்சிமாற்றம் ஏற்பட்டு அதன் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்ற பின்னர் இவ்வாறு புதிய அரசாங்கம் என்றவகையில் ஏற்கனவே 2022 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு இடைக்கால வரவு-செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ள நிலையில், இரண்டாவது முறையும் நிதி அமைச்சர் என்றவகையில் நாடாளுமன்றத்தில் தோன்றி அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார். ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கின்றபோது நாட்டின் பணவீக்கம் எந்தவிதமான மாற்றமுமின்றி 67 சத வீதத்திற்கும் அதிகமானதாகும் என்று சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவிப்பு செய்திருந்தது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான மீண்டும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இவ்வாறானதொரு நிலையில், அசுர வேகத்தில் உயர்வடைந்துகொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்த 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலாவது ஏதாவது நிவாரணங்கள் இருக்கும் என்று மக்கள் எதிர்பார்த்த நிலையில், எந்தவிதமான நிவாரணமும் இல்லாத மொட்டை வரவு-செலவுத் திட்டமாக இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்ததெனலாம். சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்படி அரசாங்கத்தின் 2023 டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான மொத்த வருமானம் எவ்வளவு என்பது பற்றி எந்தவிதமான தெளிவையும் காணமுடியவில்லை. ஆனாலும் 2023ஆம் ஆண்டு ஜனவரிமுதல் டிசம்பர் மாதம் வரையான உத்தேச செலவினம் 78 இலட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபா (78,85 பில்லியன்).

இந்தத் தொகையில் 4,320 கோடி ரூபா சுகாதாரத்துறைக்கும், 5,400 கோடி ரூபா கல்விக்கும், 3,670 கோடி ரூபா பாதுகாப்பு செலவினத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதேநேரம் கடுமையான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் என்ற நிலையில் வாழும் சுமார் 68 இலட்சம் மக்கள் போதுமான வறுமை நிவாரணத்தை எதிர்பார்த்தாலும் அவர்களுக்கான எந்தவிதமான நிவாரணங்களும் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், உத்தேச அரச வருமானமாக 2023ஆம் ஆண்டுக்கு 90 ஆயிரம் கோடி ரூபாய்வே எதிர்பார்க்கப்படுகின்றது. 2022ஆம் ஆண்டு இந்த வருமானம் 87 ஆயிரத்து 500 கோடி ரூபாவிலிருந்து அடுத்த ஆண்டு சற்று உயர்வடையலாம் என்ற எதிர்பார்ப்பில் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த துண்டு விழும் தொகையை எங்கிருந்து சமாளிப்பது, எவ்வாறு திரட்டுவது என்பதே அரசாங்கத்தின் முன்னுள்ள பாரிய சவாலாகும்.

உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன் எடுப்பதா, வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் எடுப்பதா அல்லது நாட்டின் சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதா என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், ஏற்கனவே இவ்வருடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகளுக்கு மாதாந்தம் 2,500 ரூபா, போசாக்கு குறைபாட்டினால் துன்பப்படும் குடும்பங்களுக்கு 10,000 ரூபா கொடை, சமுர்த்தி கொடுப்பனவு 7,500 ஆக உயர்வு மற்றும் வறுமையிலுள்ள 7,26,000 குடும்பங்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு என்பவைகளே 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வறுமையில் நிலையில் வாடும் மக்களுக்கான நிவாரணங்களாக உள்ளன.

ஆனாலும் 2021ஆம் ஆண்டு நடுப்பகுதியில் 13 வீதமாக இருந்த பணவீக்கம் இப்போது 67 வரையில் உயர்வடைந்து பொருட்களின் விலைகள் சுமார் 300 – 400 வீதம் வரையில் உயர்வடைந்து வாழ்க்கைச் செலவு சுமையை தாங்கமுடியாமல் திண்டாடும் மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் இல்லை. இந்தளவுக்கு வாழ்க்கைச் செலவு உயர்வடைந்திருந்தாலும் அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளங்களில் அல்லது வருமானத்தில் எந்தவிதமான அதிகரிப்பும் இல்லை. நாளுக்கு நாள் மக்கள் மீது வாழ்க்கைச் செலவு சுமை அதிகரித்தவண்ணம் உள்ளது.

எவ்வாறாக இருந்தாலும் தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குவதால் இப்படியான ஒரு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் நிவாரணங்களை எதிர்பார்க்க வில்லை என்பதை ஆளும் கட்சி பங்காளிகளாக இருக்கின்ற பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். இருந்தாலும் முன்னைய கோட்டாபய மற்றும் ராஜபக்ஷ யுகத்திற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தி ஆட்சியைக் கவிழ்த்தது தொடர்ந்தும் பொருளாதார கஷ்டங்களை அனுபவிப்பதற்காக அல்ல. நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலாகும். மக்கள் நிவாரணங்களை கோரவில்லை என்பதற்காக அரசாங்கம் தான்தோன்றித்தனமான முறையில் மக்களை இருக்கின்ற கஷ்ட நிலையை உணராமல் மேலும் நெருக்கவும் நசுக்கவும் கூடாது.

வரவு-செலவுத் திட்டத்தில் மும்மொழியப்பட்ட சிலவகையான இறக்குமதிப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளின் அதிகரிப்பு காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகள் உயர்வடைந்துவிட்டன. 18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் வரிக் கோவையொன்று திறக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டமையானது, மேற்குலக நாடுகளைப்போன்று சாதாரணமான உழைப்பாக இருந்தாலும் அதிலும் வரிகள் மூலம் அரசாங்கம் ஒரு தொகையைப் பெற முயற்சி செய்கின்றது என்பது தெளிவாகின்றது. ஆனாலும் இலங்கையை - ஐரோப்பிய நாடுகளை அல்லது அபிவிருத்தியடைந்த நாடுகளை முன்மாதிரியாக அரசாங்கத்திற்கு வருமானம் இல்லை, பணம் தேவை அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை என்ற அடிப்படையில் நிவாரணங்களை வெட்டியும், சலுகைகளை இரத்துசெய்தும் உச்சநிலையில் வரிகளை அறவிட்டும் நசுக்க முற்படுவது ஆபத்தான அறிகுறியாகவே அமையும்.

**உள்நாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் நெருக்குதல்கள், நிபந்தனைகள் தொடர்பாக பெரும் சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது. குறித்த நிபந்தனைகளை வெளியிடுமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்ற நிலையில், அவற்றை உடன்பாடு எட்டும் வரையில் வெளியிட முடியாது என்று அரசாங்கம் மறுத்து வருகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் அந்த நிபந்தனையை வெளியிட்டால் அது பாரிய நெருக்கடியை உருவாக்கலாம் என்று அரசாங்கம் அஞ்சுகின்றது.**

நாட்டின் பொருளாதாரத்தில் செழிப்பு ஏற்பட வேண்டும். மக்களது வாழ்க்கையில் சுபீட்சம் மலர வேண்டும், வாழ்க்கைச் செலவு சுமைகள் குறைவடைந்து நிம்மதி மலர வேண்டும். அதற்காக பதவியில் அமர்ந்துள்ள ஆட்சியாளர்கள் தேவையான அரசியல் பொருளாதார மீட்சி தந்திரோபாயங்களை முன்வைத்து அரச செலவினங்களை குறைக்க வேண்டும், பழையபடி ஊழல்கள் இடம்பெறாது ஆட்சியிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆட்சியாளர்களாலும் அதிகாரிகளாலும் மேற்கொள்ளக்கூடிய ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும், நாட்டின் வளங்களை குறிப்பிட்ட ஒரு குடும்பம் அல்லது ஆட்சியாளர்கள் சூறையாடக் கூடாது என்று எதிர்பார்க்கின்றனர்.

ஏற்கனவே வரையறை இல்லாமல் நாட்டின் வளங்களை குறுகிய ஒரு குடும்பத்தோடு நெருக்கமான தரப்பு சூறையாடியதாலும் வெளிநாடுகளில் குவித்ததாலும் நாடு இத்தகைய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது. அதே மோசடிக் கும்பலில் இருந்த ஒருசிலரே தேசாபிமானிகளாக தோன்றி இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தயவால் மீண்டும் அமைச்சர் பதவிகளைப் பெற்று சுகபோகம் அனுபவித்து வருகின்றனர். அவ்வாறு அமைச்சர் பதவிகளை அனுபவிக்கும் வாய்ப்பு இல்லாமல்போனவர்களில் இன்னும் ஒரு பிரிவினர் வேறொருவகை தேசப்பற்றாளர்களாக மாறி சுயாதீனமாக செயற்படுவதாக கூறிக் கொண்டு எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக் குழுவினர் பலதரப்பு ஆய்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் அவதானிப்புகளின் பின்னர் இலங்கைக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கோடி ரூபா வரையிலான (290 பில்லியன் அமெரிக்க டொலர்) கடன் உதவியை வழங்க முன்வந்திருக்கின்றது. அதுவும் தற்போது வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்யவல்ல நான்கு வருட காலப்பகுதிக்குள் கட்டம் கட்டமாக வழங்கப்படும் கடன் நிவாரணமாக இந்த நாணய நிதியத்தின் உதவித் திட்டம் அமைய இருக்கின்றது. அதற்காக சில நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. ஆனாலும் அண்மையில் ஜனாதிபதி எகிப்துக்கு விஜயம் மேற்கொண்டபோது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிகளையும் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை செய்திருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையில் உள்நாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் நெருக்குதல்கள், நிபந்தனைகள் தொடர்பாக பெரும் சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது. குறித்த நிபந்தனைகளை வெளியிடுமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்ற நிலையில், அவற்றை உடன்பாடு எட்டும் வரையில் வெளியிட முடியாது என்று அரசாங்கம் மறுத்து வருகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் அந்த நிபந்தனையை வெளியிட்டால் அது பாரிய நெருக்கடியை உருவாக்கலாம் என்று அரசாங்கம் அஞ்சுகின்றது. நிவாரணங்களை வெட்டுதல், வரிகளை அதிகரித்தல், இலவச சலுகைகள், கொடுப்பனவுகளை குறைத்தல் உட்பட பலவிதமான நிபந்தனைகள் உட்பட்டிருந்தால் அவை நாட்டுக்குப் பாதகமாக அமையலாம். அந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதை இடைநிறுத்திவிட்டால் துண்டு விழும் தொகையை சமாளிப்பது பெரும் கஷ்டமாக உள்ள நிலையில், நாடு மேலும் நெருக்கடியை எத்ர்நோக்கும் என்ற அச்சம் நிலவுகின்றது.

ஏற்கனவே கடன் வழங்கியிருக்கும் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி அந்த நாடுகளின் கடன்களை மீளாய்வுசெய்து அறவிடும் கால எல்லையை நீடிக்கச்செய்ய அல்லது கடனுக்கான வட்டியை அல்லது கடனில் ஒரு பகுதியை வெட்டி குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும், அவ்வாறு செய்யும்போது அது தொடர்பான விதப்புரைகளை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு சிபாரிசு செய்யும் போது குறிப்பிட்ட 290 கோடி அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்கப்படும் என்பதே நிபந்தனையாகும்.

இதற்கிடையில் ஆளும் கட்சி தரப்பிற்குள் ஒருவிதமான சலசலப்பு ஏற்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. டிசம்பர் மாதம் 08ஆம் திகதி இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறவிருக்கின்றது. எதிரணி உட்பட ஆளும் கட்சியோடு சம்பந்தப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் போக்கில் அதிருப்தி கொண்டவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடித்து ஆட்சியை நெருக்கடிக்குள்ளாக்கும் திட்டங்களை வகுத்து வருகின்றனர் என்ற தகவல்களும் கசிந்துகொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் மீண்டும் களத்திற்கு வந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தம் வசம் கைப்பற்றும் முயற்சிகளும் தொடர்வதோடு சமகி ஜனபல வேகயவின் சில உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை வாய்ப்பாக பயன்படுத்தி ரனிலின் பக்கம் சரியும் வாய்ப்பும் இருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தோடு நெருக்கமாக இருந்த இந்த அரசாங்கத்தில் வெட்டபட்ட 06 உறுப்பினர்கள் அங்கு குழப்பம் காரணமாக சஜித் அணியோடு சேர முன்வந்துள்ளமையும் வரவு-செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பில் குழப்ப நிலை இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.



தமிழன் வாரவெளியீடு
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 20, 2022

# அபுதாபியில் அந்தரிக்கும் இலங்கைப் பெண்கள்!

இலங்கைப் பெண்கள் பலர் அபுதாபியில் பாலியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவது தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளதுடன், அந்த விடயம் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்துள்ளது.

ஓமானுக்குப் பணிப்பெண்களாகச் சென்றுள்ள 12 பெண்கள் மாயமாகியுள்ளதாகவும் அவர்கள் பாலியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை குறித்தும் வெளியான தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பணத்துக்காக விற்பனை செய்யப்படுவது தொடர்பிலும் செய்திகள் கசிந்துள்ளன.

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்களை விற்பனை செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண்கள் சுற்றுலா விசா மூலம் அபுதாபிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுடைய கடவுச்சீட்டுகள், கையடக்கத் தொலைபேசிகள் ஆகியன பறிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தரகர்களால் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அபுதாபியிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய தொழிற்பிரிவு அதிகாரிகள் அந்த வீட்டுக்குச் சென்றுள்ளனர். எனினும், அந்தப் பெண்கள் வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தூதரகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி அந்தப் பெண்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விசாரணை நடத்திவருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனித விற்பனை மற்றும் ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமரக்கோன் பண்டா தெரிவித்தார்.

இந்த ஆட்கடத்தல் நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, ஹெட்டர் அப்புஹாமி ஆகியோர் கடந்த வியாழக்கிழமை சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

“சுமார் பன்னிரண்டு பெண்கள் அபுதாபிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கிருந்து ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அங்கு பகிரங்கமாக ஏலத்தில் விடப்பட்டு பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காக விற்கப்பட்டனர்”

இவ்வாறு காவிந்த ஜயவர்தன எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, இந்த விடயத்தை அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுசெல்லவுள்ளதாக குறிப்பிட்டார்.

இவ்வாறான ஆட்கடத்தல்கள் நீண்டகாலமாக இடம்பெறுவதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவ்வாறாயின் இதற்கு எதிராக இத்தனை காலமும் நடவடிக்கை எடுக்கப்படாமைக்குக் காரணம் என்ன?

பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் சுமை காரணமாக மலையகத்தைச் சேர்ந்த பெரும்பாலான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்கின்றனர். அவ்வாறாயின் அவர்களுடைய நிலைமை அங்கு கேள்விக்குறியாக்கப்படுகிறது.

மிகச் சிறந்த புலானாய்வுத்துறையினர் இலங்கையில் இயங்குகின்றபோதிலும், அவர்களால் இந்த விடயத்தை கண்டுபிடிக்க முடியாமையை இயலாமையென்றுதானே அடையாளப்படுத்த முடியும்?

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பல இலட்சக்கணக்கான பெண்கள் தொழில்வாய்ப்புக்காக சென்றுள்ளனர். தங்களுடைய குடும்பத்தின் வறுமைநிலை கருதி பல்வேறு சிரமங்களையும் பொறுத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுடைய உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களில் பொறுப்புள்ள அரசாங்கம் அதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இந்த விடயம் பேசப்பட்டமையானது வரவேற்கத்தக்கது. ஆனால், அத்தோடு நிறுத்தப்பட்டுவிடாது ஆரோக்கியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கடந்த காலங்களில் பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்றன. ஆயினும், எந்தவொரு அரசாங்கமும் முறையான திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் தொழிலாளர்களிடமிருந்து அந்நாட்டுப் பணத்தை பெற்றுக்கொள்ள திட்டமிடல்களை மேற்கொள்ளும் அரசாங்கம், அவர்களின் நலன் குறித்து அக்கறைகொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

வறுமையைப் போக்குவதற்காக பணிப்பெண்களாகச் செல்வோர் எதிர்கொள்ளும் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தனியொரு அலகு உருவாக்கப்பட்டு அது திறம்பட நடத்தப்படுவதை உறுதிசெய்வது அவசியமாகும்.

அபுதாபியில் பெண்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் ஆராயும்போது அவர்கள் சுற்றுலா விசாவிலேயே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இலங்கையில் இயங்கும் மோசடி மிகுந்த முகவர் நிலையங்களால் ஆசைவார்த்தை காட்டி பெண்கள் ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறு மிக நீண்ட காலமாகவே பெண்கள் ஏமாற்றப்பட்டுவருகிறார்கள்.

அந்த நாட்டுக்குச் சென்ற பின்னர் அங்கு என்னசெய்வதென தெரியாமல் தூதரகங்களின் உதவியைப் பெறுவதற்கு வழிமுறைகளும் அறியாமல் அல்லல்படுகின்றனர். இந்த நிலைமை கவலைக்குரியது.

அப்பாவிப் பெண்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் இதனைத் தவிர்க்காது, காலந்தாழ்த்தாது விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். இல்லாவிட்டால் சொந்த மக்களை துன்புறுத்தப்படும்போது வேடிக்கை பார்த்த அரசாங்கம் என்ற அவப்பெயர் வரலாற்றில் இடம்பிடிக்கும் என்பதை மறுக்க முடியாது.

# ‘மாற்றத்தை நோக்கிய பயணம்’ மலையகத்திற்கும் அவசியம்!



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்



## மலையகத் தொழிற்சங்க அரசியல் ‘சொந்த பந்தங்களின் கூடாரம்’

மலையக மக்கள் நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டில் மாத்திரமல்ல, வடக்கு - கிழக்கிலும் தெற்கிலும் பரந்து வாழ்கின்றனர்.

இதற்கும் அப்பால் புலம்பெயர்ந்த நிலையில், பல்வேறு நாடுகளில் பெருமளவில்



இல்லாவிட்டாலும் கணிசமானோர் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழும் மலையக மக்களிடையே தாம் ஓரணியில் அணி திரட்டப்பட வேண்டும் என்ற போக்கு அண்மைக்காலமாக மேலோங்கிக் காணப்படுகின்றது. இதற்கென தமக்கான திட்டவட்டமான அடையாளம் தேவை என்ற வேட்கையுடன் இன்றைய தலைமுறை காணப்படுகின்றது. ஏனெனில், தேசிய ரீதியில் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம் என்பதை மலையகம் ஆழமாக உணர்வதன் வெளிப்பாடாகும்.

- மலையகத் தமிழரா?
- இந்தியத் தமிழரா?
- இந்தியா வம்சாவளித் தமிழரா?

போன்ற சொற்பதங்களுக்குள் தமது அடையாளத்தை இன்றைய தலைமுறை தேடிக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தில் இருந்து குடிபெயர்ந்து 200 வருட வரலாற்றைத் தொட்டு நிற்கும் இவ்வேளையில் இலங்கையில் வாழ்கின்ற சுமார் 15 இலட்சம் மக்களின் அடையாளம் குறித்த தேடலில் மலையகம் இறங்கியுள்ளது.

இந்த ஒட்டுமொத்த மக்களின் இன அடையாளத்தை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ‘இந்தியத் தமிழர்’ என்றே வரையறுத்துள்ளனர். குடித்தெகை மதிப்பீட்டில் மாத்திரமல்ல, பல்வேறு அரச ஆவணங்களிலும் ‘இந்தியத் தமிழர்’ என்ற சொற்பதமே உத்தியோகபூர்வ இன அடையாளமாக இன்றுவரை உள்ளது.

இதற்கெதிராக ‘மலையகத் தமிழர்’ என அழைக்கப்பட வேண்டும் என்ற கோஷம் 1965 க்குப் பிறகு முன் வைக்கப்பட்டதன் விளைவு காலப் போக்கில் எழுத்து வடிவில் ‘மலையகத் தமிழர்’ என்ற சொற்பதம் வழக்கத்தில் வந்தது. இன்று ‘மலையகத் தமிழர்’ சொற்பதத்தையே பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் பெரும்பாலும் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் ‘மலையகத் தமிழர்’ என்பது அரச அங்கீகாரம் பெற்ற அடையாளமாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

மலையக மக்களில் கணிசமானவர்கள் குடித்தொகை கணக்கெடுப்பின் போதும் வாக்காளர் பட்டியல்களில் பெயர்களைப் பதிவுசெய்யும் போதும் மற்றும் பல்வேறு ஆவணங்களிலும் தம்மை ‘இலங்கைத் தமிழர்’ என்றே பதிவு செய்யத் தொடங்கினர். இதனால் இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை தேசிய ரீதியில் குறையத் தொடங்கியது.

இது ஒருபுறம் இருக்க, மலையகம் தனது இன அடையாளத்திற்கான சொற்பதத்தைத் தேடத் தொடங்கவே மலையகத்திற்கு வெளியில் வாழும் மலையக மக்களும் தமக்கான அடையாளம் குறித்த தேடுதலில் இறங்கியுள்ளனர்.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் வாழும் மலையக மக்கள் கடந்த காலங்களில் மலையக அடையாளத்தைப் புதுப்பித்துக் கொண்டபோதும், அரசியலில் தமிழ்த் தேசியத்தின் பிரிக்க முடியாத அங்கமாகவே தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர். அது மாத்திரமல்ல, விடுதலைப்போராட்டத்தின் பங்காளராகவும் இருந்து அளப்பரிய தியாகங்களை செய்துள்ளனர்.

ஆனால், அண்மைக் காலமாக, குறிப்பாக போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியத்திற்குள் இருந்து ஓரங்கட்டப்பட்ட நிலையில், அதாவது தமிழ்த் தேசியம் மலையக மக்களை உள்வாங்க மறுத்ததன் விளைவு வடக்கு - கிழக்கு வாழ் மலையக மக்கள் தமக்கான அடையாளம் குறித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். தற்போது ‘வடக்கு மலையக மக்கள்’ என்ற அமைப்பைத் தோற்றுவிக்கத் தலைப்பட்டுள்ளனர். இது தமிழ்த் தேசியம் மலையக மக்களை அரவணைத்துச் செல்ல தவறியதின் எதிர்விளைவாகும். வடக்கில் வாழ்கின்ற மலையக மக்களைப் போன்று கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்திற்கு அப்பால் செல்லத் தொடங்கிவிட்டனர். ஒற்றுமைப்பட வேண்டிய காலத்தில் தமிழ்த் தேசியத்தை சிதறடிக்க தமிழ்த் தலைமைகளே வழியமைத்துவிட்டமை துரதிர்ஷ்டமே.

### இணையவழிக் கலந்துரையாடல் உருவாக்கிய அதிர்வலை

மலையக அடையாளம் குறித்த இணைய வழிக் கருத்தாடல்கள் மலையக நலன் விரும்பிகளால் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த இணைய வழிக் கலந்துரையாடல்கள் மலையக அரசியலில் பல்வேறு அதிர்வலைகளை உருவாக்கியுள்ளன. மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை தற்காலிகமாகவேனும் ஒன்றிணைப்பதில் இந்தியத் தூதரகம் வெற்றி கண்டுள்ளது. இந்தியத் தூதரகத்தின் அனுசரணையின்றி மலையக தொழிற்சங்க அரசியலில் இந்த ஒன்றிணைவு சாத்தியமாகி இருக்காது.

### மலையகத் தலைமைகள் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்

மலையக தொழிங்சங்க அரசியல் தலைமைகளின் ஒன்றிணைவினால் மலையகத்தில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பார்களாயின் அது பகல் கனவாகவே இருக்கும். ஏனெனில், இவர்கள் அனைவரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. இவர்களுக்கும் இவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் பிரதேச சபை ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான ஏணியே மலையக மக்கள். இதற்கும் அப்பால் தேசியக் கட்சிகளுக்கு மலையக வாக்குகளை வாரி வழங்கும் ‘தரகர்கள்’ அதற்கு ஈடாக தமக்கு அமைச்சுப் பதவிகளையும் தாம் சார்ந்தவர்களுக்கு உயர் பதவிகளையும் பெற்றுக் கொடுப்பதே இவர்களின் அரசியல் பேரம். மலையகத் தலைமைகளின் இந்தப் பேரங்களில் வாக்களித்த மலையக மக்களுக்கு ஒன்றுமில்லை.

ஆட்சிபீடம் ஏறும் தேசியக் கட்சிகள் அமைக்கும் அரசாங்கத்தில் பங்காளிகளாவது, அமைச்சுப் பதவிகளைப் பெறுவது, சுகபோகங்களை அனுபவிப்பது, இறுதியில் “இவர்களால் மலையகத்திற்கு ஏதும் பிரயோசனமில்லை. இவர்களுடனான உறவை நாங்கள் அறுத்துக் கொள்கின்றோம்” என்று கூறி இன்னொரு கூட்டணிக்குத் தாவுவது, அடுத்த தேர்தல்வரை கூட்டு, பிறகு அதே பல்லவி... என மலையக தொழிற்சங்க அரசியல் சுழன்று கொண்டிருக்கின்றது.

### மலையகம் குறித்த தூரநோக்கோ சிந்தனையோ திட்டங்களோ இல்லை

மலையகத் தலைமைகளிடம் மலையகம் குறித்த தூர நோக்கோ சிந்தனையோ திட்டங்களோ இல்லை. இவர்கள் இன்றும் தெழிற்சங்க பாணியிலேயே அரசியல் நடத்துகின்றனர்.

### தேசியக் கட்சிகளின் ஊதுகுழல்

மொத்தத்தில் ஆட்சிபீடம் ஏறும் தேசியக் கட்சிகளின் ஊதுகுழலாகவே மலையகத் தலைமைகள் செயற்படுகின்றன. இதுவே இவர்களது இணக்க அரசியல்.

அதேவேளையில் மலையகத் தெழிற்சங்க அரசியல் ‘சொந்த பந்தங்களின் கூடாரம்.’ அங்கு மாற்றானுக்கு இடமில்லை. நேர்மை, நாணயத்திற்கு கிஞ்சித்தும் இடமில்லை. மலையகத் தொழிற்சங்க அரசியல் கட்டமைப்பே ஊழலுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது.

- எனவே, “மலையகத் தொழிற்சங்க அரசியலில்



ஒட்டுமொத்தமாக மாற்றம் அவசியம்.”

- மலையகத் தொழிற்சங்க அரசியலில் புதிய இரத்தம் பாய்ச்சப்படவேண்டும்.
- மலையகம் புதிய பாதையில் பயணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.
- மலையகம் ஊழலற்ற அரசியல் பயணத்தில் பயணிக்கவேண்டும்.
- மலையக மக்களின் இருப்பு, பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- மலையக தொழிங்சங்க அரசியல் சொந்த பந்தங்களுக்கு அப்பால் ஜனநாயக மயமாகுதல் வேண்டும்.
- மலையக இளைஞர் சமூகத்தின் எதிர் காலத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

மலையகத்தில் மாற்றம் நோக்கிய பயணத்தில் மலையகத்தின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து கொள்ளவேண்டும். தென்னிலங்கையின் மாற்றத்திற்குள் மலையகத் தலைமைகள் பயணிக்கட்டும். மலையகத்தின் மாற்றத்தை நோக்கி மக்கள் அணி திரளவேண்டும்.

Email: vathevaraj@gmail.com

# தமிழ் முற்போக்கு கூட்டணி – ஐ.நா. அரசியல் துறை பணிப்பாளர் பீட்டர் டியூ குழு கொழும்பில் சந்திப்பு



தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான கூட்டணி தூதுக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் துறை பணிப்பாளர் பீட்டர் டியூவை சந்தித்தது.

கூட்டணி பிரதித் தலைவர் வெ. இராதாகிருஷ்ணன், எம்.பி. உதயகுமார் ஆகியோர் கூட்டணி தலைவர் மனோ கணேசனுடன் கலந்துகொண்டனர். ஐ.நா. சபையின் சார்பாக இலங்கையின் ஐ.நா. நிரந்தர பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் அதிகாரிகள் அரசியல் துறை பணிப்பாளர் பீட்டர் டியூவுடன் கலந்துகொண்டனர்.



இந்திய வம்சாவளி மலையகத் தமிழரது அரசியல் கோரிக்கைகள் தொடர்பிலும், ஐ.நா. உலக உணவு திட்டம் மற்றும் உலக வங்கி ஆகிய சர்வதேச அமைப்புகள், உணவின்மை மற்றும் வறுமை ஆகியவற்றால் பின்தங்கிய நலிவுற்ற மக்களாக கணக்கெடுத்து அடையாளப்படுத்தியுள்ள பெருந்தோட்ட மக்கள் மற்றும் நகர பாமர மக்கள் தொடர்புகளிலும் ஐ.நா. அதிகாரிகளுக்கு விளக்கி கூறப்பட்டன. இச்சந்திப்பின் போது, தமிழ் முற்போக்கு கூட்டணி தொகுத்துள்ள, இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் தேசிய அரசியல் அபிலாஷை ஆவணம், பணிப்பாளர் பீட்டர் டியூவுக்கு, கூட்டணித் தலைவரால் வழங்கி வைக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு, தென்னிலங்கையில், வாழும் சிறுபான்மை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான சவால்கள் தொடர்பில் ஆராய விரும்புகின்றோம் என கொழும்பில் உள்ள ஐ.நா. காரியாலயம் விடுத்துள்ள அழைப்பின் பேரில் இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.




★ ரணிலின் பட்ஜெட்டைத் தோற்கடிக்கக் கூடாதென்பதில் பொதுஜன பெரமுன உறுதி

★ அமெரிக்கக் குடியுரிமையுடன் இலங்கையில் அரசியல் செய்யப்போகும் பெசில்

★ உள்ளூராட்சித் தேர்தலுக்கு வாய்ப்புகள் உள்ளனவா?

★ பட்ஜெட் குறித்து ரணிலிடம் அதிருப்தி வெளியிட்ட மனோ எம்.பி.

★ மாணவர்களுக்கு பாதணிகளை தன் கையால் அணிவித்த சுமந்திரன் எம்.பி.



இலங்கையில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள பின்புலத்தில், 2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் கடந்த 14ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்ஜெட்டை முன்வைத்து, நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். டிசம்பர் 8ஆம் திகதி மாலை பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பு இடம்பெறும்.

கொரோனா பெருந்தொற்றை அடுத்து ஏற்பட்ட முடக்கம், சுற்றுலாத்துறை வீழ்ச்சி உள்ளிட்ட காரணங்களால் இலங்கையின் பொருளாதாரம் ஆட்டம் கண்டது. அதன் பின்னர் அரசியல் நெருக்கடியும் தலைதூக்கியதால் நிலைமை மோசமானது.

கடனை மீளச் செலுத்த முடியாத நாடு, வங்குரோத்து அடைந்த நாடு என இலங்கை சர்வதேச மட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், கடும் சவால்களுக்கு மத்தியிலும் பட்ஜெட் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது 45 வருடகால நாடாளுமன்ற அரசியல் பயணத்தில் நிதி அமைச்சராக, ஓர் ஆண்டுக்குரிய முதலாவது வரவு - செலவுத்திட்டத்தை இம்முறை முன்வைத்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிவகித்தபோது, இலங்கையின் 24ஆவது நிதியமைச்சராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, இடைக்கால பட்ஜெட்டை முன்வைத்திருந்தார். எனினும், முழு ஆண்டுக்குரிய பட்ஜெட்டை முன்வைப்பது இதுவே முதன்முறையாகும்.

1977ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற அரசியல் பயணம் ஆரம்பமானது. பிரதியமைச்சர், அமைச்சர், பிரதமர் எனப் பதவிகளை அவர் வகித்திருந்தாலும், சுமார் 44 ஆண்டுகளுக்குப் பிறகே அவருக்கு நிதியமைச்சுப் பதவி கிட்டியது.

இலங்கையின் முதலாவது நிதியமைச்சர் ஜே.ஆர்.ஜயவர்தன. இலங்கை அரசியல் வரலாற்றில் நிதியமைச்சுப் பதவியை வகித்தவர்களில் ரொனி டி மேல் (ஐக்கிய தேசியக் கட்சி) 12 தடவைகள் வரவு - செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ 11 தடவைகள் முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தைத் தோற்கடிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று சொன்னாலும், அப்படியொன்று நடக்க வாய்ப்பில்லையென்றே தெரிகிறது. இன்று அமெரிக்காவிலிருந்து இலங்கை வரும் பெசில் ராஜபக்ஷ கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார். அவர் தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்யாமல் நாடாளுமன்றுக்கு வெளியிலிருந்து அரசியல் வேலைகளை செய்யவுள்ளார். பட்ஜெட்டை வெற்றிபெறச் செய்யும் நடவடிக்கைகளை அவர் முன்னெடுப்பார் .

பட்ஜெட்டை பொதுஜன பெரமுன தோற்கடிக்க முயற்சிகளை எடுத்தால் அது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துமெனக் கருதும் பெசில் அதனை பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்ற ஆதரவளிப்பார் என்று தெரிகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒன்றுக்கு செல்லவேண்டிவரலாம் என்று பெசில் தமது உறுப்பினர்களை அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டை சமர்ப்பித்த பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்தில் எம்.பிக்கள் பலரும் ரணிலை சூழ்ந்துகொண்டனர். "எப்படி ஹர்ஷா பட்ஜெட்?" என்று ஹர்ஷ டி சில்வா எம்.பியிடம் கேட்டார் ரணில்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருவர் சமர்ப்பித்த பட்ஜெட்டை எப்படி நாங்கள் எதிர்க்கமுடியும்?" என்று அதற்கு ஹர்ஷ பதில் கொடுத்தபோது ரணில் சத்தமாக சிரித்தார்.

"இது டயானாவின் பட்ஜெட். டொலர் பெறுவதற்காக அவர் கூறிய யோசனைகளை முன்வைத்திருக்கிறோம்..." என்று ரணில் கூற, "ஆம், கஞ்சா ஏற்றுமதிக்கு நீங்கள் அனுமதி வழங்க முயற்சிக்கிறீர்கள்" என்று எம்.பிமார் கூறினர்.

அதேவேளை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ரணிலை சந்தித்து பட்ஜெட் குறித்தான தனது அதிருப்தியை வெளியிட்டார்.

"இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய பிரிவினராக உலக வங்கி, ஐ.நா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன அறிவித்துள்ள பெருந்தோட்ட மக்கள், நகர ஏழை மக்கள் ஆகியோருக்கு நிவாரணங்கள் அறிவிக்காதது ஒன்று... ஆனால், இப்படியான பாமர மக்கள் பற்றி உங்கள் உரையில் குறிப்பிடக்கூட தவறி விட்டீர்கள் ஜனாதிபதி அவர்களே..." என்று பட்ஜெட் முடிந்தபின் அவரிடம் நேரடியாக சொன்னார் மனோ.

**தேர்தல் ஒன்று வருமா ?**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை 2023ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதிக்குள் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

இதற்கமைய டிசம்பர் 9ஆம் திகதிக்கு பிறகு தேர்தல் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.



ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விமல் வீரவன்ச தலைமையிலான உத்தர லங்கா சபாகய, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, அநுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்படி சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது உரிய காலப்பகுதிக்குள் உள்ளாட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் எதிரணிகளின் கூட்டுப் பிரகடனம் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், தேர்தலை பிற்போடும் அரசியல் முயற்சியை தோற்கடிக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வேளையிலேயே மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

மார்ச் 20ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்படுவதாக இருந்தால் டிசம்பர் 9 மற்றும் ஜனவரி 9 இற்கு இடைப்பட்ட காலத்தில் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

தேர்தலை பிற்போடுமாறு அரச தரப்பில் இருந்து தனக்கு எவ்வித அழுத்தமும் வரவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார். எனவே, உரிய காலத்தில் தேர்தல் நடக்கும் என நம்புகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டார்.

மேற்படி கூட்டுப் பிரகடனத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, முன்னிலை சோசலிஷக் கட்சி என்பனவும் கைச்சாத்திட்டுள்ளன.

அதேவேளை, உள்ளாட்சி சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு முற்பட்டால் நீதிமன்றத்தை நாடுவோம் எனவும் எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் தேர்தல் பிற்போடப்படலாம் என எதிரணிகள் அஞ்சுகின்றன.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டும். அவை நிறுவப்படும்வரை தற்போதைய உறுப்பினர்கள் பதவியில் நீடிப்பார்கள். எனினும், தேர்தல ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமித்து, அதனூடாக தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையை ஆளுங்கட்சி முன்னெடுக்கலாம் என்ற சந்தேகமும் எதிரணிகளுக்கு உள்ளன. எனவே, தற்போதுள்ள உறுப்பினர்களை, தேர்தல் ஆணைக்குழுவில் தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சியும் இடம்பெறுகின்றது.

**மஹிந்தவின் பிறந்தநாள்**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 77ஆவது பிறந்தநாள் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

பிறந்த நாளையொட்டி அதற்கு முதல்நாளே இலங்கைக்கான சீனத் தூதுவர் மஹிந்தவை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தமை விசேட அம்சமாகும். இலங்கைக்கான சீனத்தூதுவர்



பதவியேற்று இதுவரை நான்கு தடவைகள் மஹிந்தவை சந்தித்துள்ளார். அந்த சந்திப்பு நடந்தபோதெல்லாம் அவர் மஹிந்தவை சீனா வருமாறு அழைப்பு விடுத்தார். அந்த வேண்டுகோளை ஏற்ற மஹிந்த விரைவில் தாம் சீனா வருவதாக சீனத் தூதுவரிடம் உறுதியளித்தார்.

இம்முறை மஹிந்தவின் பிறந்தநாளையொட்டி பிக்குமார் ஆயிரம் பேருக்கு தங்காலையில் தானம் வழங்கப்பட்டது. இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடுகளை செய்திருந்தது.

**சுமந்திரனின் பெருந்தன்மை**

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் நிதியுதவியில் இடம்பெற்ற மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மாணவர்களுக்கு பாதணியை அணிவித்தார்.

பாதணிகளை மாணவர்களுக்கு வழங்கும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட சுமந்திரன், மாணவியொருவர் சப்பாத்துக் காலுறை மட்டும் அணிந்து வந்திருந்ததைக் கண்டார்.


அதனால் மாணவர்களுக்கு புதிய சப்பாத்துகளை தானே அணிவிக்கவேண்டுமென நிகழ்வு



ஏற்பாட்டாளர்களைக் கேட்டுக்கொண்ட சுமந்திரன் எம்.பி. அதன்படி மாணவர்களுக்கு மேடையில் முழந்தாளிட்டு சப்பாத்துகளை அணிவித்தார். சுமந்திரனின் இந்த செயலை அங்கிருந்த பலரும் சிலாகித்துப் பேசிக்கொண்டனர்.

**ஆர்.சிவராஜா**
mesivaraj@yahoo.com

## வணக்கமடா தம்பி சுமந்திரன்...




என்னடியப்பு சுகமா இருக்கிறியே... உனக்கொரு கடுதாசி ஒண்டை அனுப்ப வேணும் எண்டு கன நாளா யோசிச்சனான். இண்டைக்குத்தான் எனக்கு நேரம் கிடைச்சிருக்கு. நானும் தம்பியை மாதிரி உவர் விக்கினேசுவரன் ஐயா மாதிரி 2009 ஆம் ஆண்டுவரை ஒரு பிக்கல் பிடுங்கலும் இல்லாமல் கொழும்பில நானும் என்ரை வேலையும் எண்டு என்ரைபாட்டில தான் இருந்தனான். இப்ப நானும் தம்பியை மாதிரி அங்கை இஞ்சை எண்டு அலமலந்துகொண்டு திரியிறதிலை உண்ணாணவடா ஒண்டுக்கும் நேரம் இல்லாமல் இருக்கு. உந்த 2009 வரேல்லை எண்டால் நாங்கள் எங்கடை பாட்டில இருந்திருப்பம் எல்லே என்ன நான் சொல்லுறது..

உண்ணாணவடா தம்பி ரெண்டு மூண்டு நாளைக்கு முந்தி நீ உந்த பெடி பெட்டையளுக்கு குனிஞ்சு குனிஞ்சு சப்பாத்துப் போட்டதைப் பாத்துப்போட்டு மலாரடிச்சுப் போனன். இக்கணம் தம்பிக்கு நாரிப் பிடிப்பு வந்தால் எவ்வளவு கஷ்டம்..? ரணிலிட்டை முந்தி நல்லாட்சிக் காலத்தில குனிஞ்சு குனிஞ்சு முண்டு குடுத்து நிண்ட மாதிரி எல்லே நிக்கப் போறாய் எண்டு சரியான கவலையாப் போட்டுது. ஏனடியப்பு உனக்கு உந்தத் தேவையில்லாத வேலை..? எவ்வளவு வேலையளை நிமிந்து நிண்டு கொண்டு செய்யிறனி... பேந்தேனடியப்பு உந்தத் தலை குனியிறவேலை எல்லாம் செய்து கொண்டு திரியிறாய்..? ஆரவன் தம்பிக்கு உந்த ஐடியாவைத் தந்தவன் எண்டு தெரியேல்லை. தெரிஞ்சா அவனை நாக்கைப் பிடுங்கிற மாதிரி நாலு கேள்வி கேக்க வேணும்.

எனக்கெண்டா நீயடாப்பா முந்தி ஒருக்கா பயிர் விளைஞ்ச நிலத்தைப் பேந்து ரக்ரறாலை உழுது மறுத்து விளையாடின விளையாட்டுத்தான் நல்லாப் பிடிச்சிருக்கு. ஏனெண்டு தெரியுமே... அங்கை நீயடாப்பா நிமிந்து எல்லே நிண்டனி. அதுமாதிரி என்னவோ ஒரு ஊர்வலத்திலை லவுட் ஸ்பீக்கர் கட்டின பட்டாவை தலையில ஒரு துண்டு கட்டிக்கொண்டு ஓடின விளையாட்டும் எனக்குப் பிடிச்சு இருந்தது. ஆனால், என்ரை வீட்டம்மா உன்னைப் பாக்க என்னவோ பழைய பாத்திரங்கள் வாங்கிற ஆள் மாதிரி இருக்கெண்டு பகிடிவிட்டவ. எனக்கெண்டால் அவ அப்பிடிச் சொன்னது துண்டாரப் பிடிக்கேல்லைக் கண்டியோ... ஏனடியப்பு ஒருத்தரும் உனக்கு உந்த சிறிதரன், கஜேந்திரன் மாதிரி மம்பட்டி பிடிச்சுக்கொண்டு திரியச் சொல்லி சொல்லேல்லையே...



அது சரி, தம்பியின்ரை கோடு கச்சேரி வேலையள் எல்லாம் எப்படிப்போகுது..? உனக்கென்னடாப்பா... கோர்ட் கேசுகளில வாதாடுறதில விண்ணன் எண்டபடியால கேசுகள் வாறதில எந்த குறையுமிருக்காது எண்டு நினைக்கிறன். பணப்புழக்கமும் பரவாயில்லாமல் இருக்கும்தானே... என்ன இந்த தமிழ் அரசியலில இருந்து மாரடி மாரடி எண்டு எவ்வளவு மாரடிச்சாலும் கடைசில நேர விரயமும் டென்ஷனும் தான் மிச்சம் எண்டாலும் சமூகப்பொறுப்பு ஒண்டை நினைச்சுக்கொண்டு புலிவாலை பிடிச்ச கதையா உந்த அரசியலை விடவும் முடியாமல் தொடர்ந்தும் பிடிச்சுக்கொண்டே இருக்கிறதா எண்டும் யோசிச்சுக் கொண்டிருப்பாய் எண்டு நினைக்கிறன்... இனி உந்த தமிழ் அரசியல் விளையாட்டு மருமோள் வந்த பிறகு வீட்டிலையும் பிடிக்குமோ என்னவோ தெரியேல்லை. என்னதான் நீயடாப்பா உன்ரை குரு விக்கினேசுவரன் ஐயாவோட போட்டி எண்டாலும், உந்தப் பிள்ளையளின்ரை விசயத்தில நீங்கள் ரெண்டு பெரும் உங்கட அரசியலைக் கலக்காமல் விட்டது ஒரு பெரிய விஷயம் கண்டியோ...

அம்மாவாண எனக்கு எண்டால் உன்னில வலு பிடிப்பு, மதிப்பு, மரியாதை எப்பவும் இருக்குது கண்டியோ... ஏன் தெரியுமே..? நீ நினைச்சா உந்த நீலன் திருச்செல்வம் அல்லது உந்த யூ.என்.பியில பேமஸா இருந்த கே.என்.சொக்ஸி போல கொழும்பு அரசியல் கட்சியொண்டில தேசியப் பட்டியலுக்குள்ளால வந்து எம்.பி. ஆகி இருந்திருக்கலாம்... ஆனா, உன்ரை கோதாரி பிடிச்ச கெட்ட காலமோ என்னவோ தெரியேல்லை, தமிழ்ச் சனங்களுக்கு எதாவது செய்ய வேணும் எண்டு வீம்பு பிடிச்சு வந்து உங்கினைக்க கண்ட கிண்டவங்கள் எல்லாரிட்டையும் பேச்சும் ஏச்சும் வாங்கிக்கொண்டு திரியிறாய்.

உங்கை ரெண்டாயிரம் ஆண்டுவாக்கில தேப்பன்ரை விதையுக்கை ஒழிச்சுக் கிடந்ததுகள் எல்லாம் முகநூலிலை அரசியல் பேச வெளிக்கிட்டு, உன்னைக் கிழி கிழி எண்டு கிழிக்குதுகள். உன்ரை அறிவு என்ன, ஆற்றல் என்ன எண்டு உந்தக் கோதாரி விழுவாருக்குத் தெரியுமே... உன்ரை பல்மொழி ஆற்றலையும் சட்ட அறிவையும் அனுபவத்தையும் வைச்சுக்கொண்டு நீ எத்தினை பெரும்பான்மை அரசியல்வாதியளுக்கும் வெளிநாட்டுத்தூதுக் குழுக்களுக்கும் தமிழற்றை பிரச்சினையளின்ரை சிக்கல் பக்கல்களை விளக்கப் படுத்தினனி எண்டு உவட்டையளுக்குத் தெரியுமே... மற்ற கூட்டமைப்பு ஆக்கள் உம்மாண்டி மாதிரி உந்தக் கூட்டங்களிலை இருக்க, நீ எல்லே உந்த விசயங்களை விளங்கப்படுத்திறனி. உண்ணான எனக்கு உது பிடிச்சிருக்கு .

உண்ணாண உந்த கூட்டமைப்பில கொஞ்சம் விஷயமுள்ள ஆள் நீரதான்ராப்பா. இராசதந்திர இங்கிலீஸ் தெரியும் எண்டதால மட்டுமில்ல... அதுக்கப்பால பிறத்தியாரோடை, குறிப்பா வெளிநாட்டுக்காறரோடை தமிழற்றை பிரச்சினைகளை கதைக்கேக்கை சில இராசதந்திர விஷயங்களை கையாள வேணும்... அதுக்கு கொஞ்சம் நுட்பம் தெரியவேணும் கண்டியோ... அது உன்னட்டைத் தாராளமாக் கிடக்கு. உங்கினைக்க உள்ள கன தமிழ் எம்.பிமார் நல்லா வீர வசனங்கள் பேசுவினம்... ஆனா, யதார்த்தத்தை உவையால எதிர்கொள்ள முடியாது மட்டுமில்லை, நாசூக்காக கதைக்க வேண்டிய விசயங்களை எப்பிடிக் கதைக்கிறது எண்டும் அவைக்குத் தெரியாது எண்டது எனக்கு வடிவாத் தெரியும்...

ஆனால், ஒரு விஷயம் எனக்குப் பிடிக்கேல்லை என்னது எண்டால் முந்தி நீ தமிழ் ஏரியா வழியை போகேக்கை ஆரைக் கொலைக் குற்றம் சாட்டினியோ, அந்த அதிரடிப்படையக் காவலுக்குக் கொண்டு போனதும், பேந்து உன்னைக் கொலை செய்ய முயற்சி செய்தவை எண்டு போட்டுக் கொஞ்சத் தமிழ்ப் பெடியளை பயங்கரவாத தடைச் சட்டத்திலை மறியல் வைச்சுப் போட்டு, பேந்து உந்த சட்டத்தை எடுக்க வேணும் எண்டு ஊர் ஊரா ஊர்வலம் போனது எல்லாம் எனக்குத் துண்டாரப் பிடிக்கேல்லைக் கண்டியோ... அதை நான் உனக்கு சொல்லாம வேறை ஆர் சொல்லுறது சொல்லு பாப்பம்..?

உங்கை கூட்டமைப்புக்குள்ள உனக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிற ஆக்கள் எல்லாருக்கும் நீயே பல விஷயங்களுக்கு தனிப்பட்ட ரீதியில உதவியிருக்கிறது இந்த பேரம்பலத்துக்கு நல்ல வடிவாத் தெரியும்... பேப்பர்காறங்களுக்கு ஒரு பிரச்சினையெண்டா நீயே முன்னுக்கு நிப்பாய்... பேந்து உவங்களே அதே பேப்பரில உன்னை விமர்சிப்பாங்கள்... கூட்டமைப்பு ஆட்களுக்கு தமிழ் மக்களின்ர பிரச்சினைய தீர்க்க ஏதும் செய்யலாமா எண்டு யோசிக்கிறதை விட இப்ப சுமந்திரனை கட்சியிலேர்ந்து வெளியேத்தோணும் எண்ட யோசினைதான் பெரிசா இருக்குது போல... என்ன செய்யுறது..?

அட தம்பி டேய்... கனடாவுக்குப் போன கப்பலில உள்ள ஆக்கள் தங்களுக்குள்ள அடிபட்டு சண்டை பிடிச்சுத்தானாம் கப்பல் கவிண்டது எண்டு கேள்விப்பட்டன்... 45 நாட்கள் கப்பலில ஒற்றுமையா போக முடியேல்ல தமிழனுக்கு... பேந்து என்னண்டு காணும் தனிநாடு எடுத்து ஒறுமையா இருப்பினம்..? ஆ தற்செயலா தனிநாடு கிடைச்சிருந்தா நிலைமை என்ன எண்டு ஒருக்கா யோசிச்சுப்பார்...

சரி, அரசியல் கட்சியெண்டால் சதிவேலைகளும் கழுத்தறுப்புகளும் காலை வருகிற வேலையளும் காட்டிக் கொடுப்புகளும் இருக்கத்தான் செய்யும்... அதைவிடுவம்... ஆனால், தம்பி... சம்பந்தன் ஐயாவின்ர பக்கமும் கொஞ்சம் விட்டுக்கொடுப்பு இருக்க வேணும் எல்லே... உந்த தகவலை நீ அவரிட்டை ஒருக்கா சொல்லிவிடன்... உந்த வயசில கட்சி வேலையள சாம் ஐயாவால செய்ய முடியாத நிலைமை... அப்படியான நேரத்தில உதை நீ செய்யப்போனா உனக்கெதிரா சண்டைக்கு வறாங்கள்... ஐயா கட்சி மாநாட்டைக் கூட்டி தனக்கு பதிலா சுமந்திரன் வேலையப் பார்ப்பார் எண்டு அறிவிச்சால் ஒரு சோலியும் இல்லைத்தானேடாப்பா... என்ன நான் சொல்லுறது.. சரி, உன்னைப் பிடிக்காத ஆக்கள் கூட்டமைப்பை விட்டுப்போட்டு வெளியே போய் தனிச்சு எலெக்சன் கேக்கட்டும். ஆனால், அவங்கள அப்பிடிச் செய்யமாட்டாங்கள் எண்டது சின்னப் பிள்ளைக்கும் விளங்கும் கண்டியோ...

இன்னொண்டும் சொல்லுறன். தம்பி டேய்... தமிழரசுக்கட்சிய புனரமைச்சு எடுங்கோடாப்பா... இளைஞர் அணியில் உள்ள ஆக்கள் இளைஞரா இருக்கோணும் எண்டதுபோல செயற்குழுவில் இருக்கிற ஆக்களும் செயல்வீரரா இருக்கோணும்... சேடம் இழுக்கிற ஆக்களை வைச்சுக் கொண்டு என்ன செய்யிறது..? உங்கினைக்க உதுக்குள்ள இருக்கிற ஆக்களப் பார்த்தா எனக்கு பொத்துக்கொண்டு வருகுதடா தம்பி. கூட்டமைப்பில பாதிப்பேர் இந்தியாவோட நிக்கினம். சில நேரங்களில நீ கிறிஸ்தவ ஆள் எண்டு நினைச்சு எரியுறாங்களோ தெரியேல்ல... உங்கடை கட்சியின்ரை முந்தின தலைவர் தந்தை செல்வநாயகம் ஐயாவும் கிறிஸ்டியன் ஆள்தான் எண்டது உவைக்கு தெரியுமோ தெரியேல்ல..!

எனக்கும் உன்னில கன விமர்சனங்கள் இருக்குது... கடந்த காலங்களில நீ புலியளை கண்டபடி விமர்சிச்சது எண்டு தொடங்கி சம்பந்தன் ஐயாவை கைக்குள்ள தலையாட்டிப் பொம்மையா வச்சிருக்கிறது வரை விமர்சனங்கள் இருக்குது கண்டியோ... ஆனா, நாங்கள் இப்ப இருக்கிற நிலைமையில அப்புக்காத்து ஒராள்... அதுவும் விலைக்கு யாராலயும் வாங்க முடியாத ஒரு ஆள் இருக்க வேணும்... கட்சிக்குள்ள உன்னை விட்டா வேற ஆரும் அப்படி இருக்கிறதா எனக்கெண்டால் தெரியேல்ல... மற்றப் பக்கம் பொன்னம்பலத்தாரின்ரை பேரன் இருந்தாலும் தமிழரசுக்குள்ள நீதான் உருப்படியா இருக்கிறாய்... நான் இதைச் சொல்லுறன் எண்டு போட்டு இக்கணம் என்னோடையும் கோவிப்பாங்கள்... வருத்தம் மாற கசப்பு மருந்தையும் குடிக்கத்தான் வேணுமெண்டால் குடிக்கத்தான் வேணும் எண்டமாதிரி, உண்மைய சொல்லத்தான் வேணுமெண்டா நான் ஆருக்கும் பயப்பிடாமல் நெத்திக்கு நேரை சொல்லிப்போடுவன்...

என்னவோடா பெடி நீ எல்லாத்தையும் சகிச்சுக்கொண்டு... முக்கியமா உந்த தமிழரசு மூத்த தலைகளின்ரை தொல்லைகளையும் புறுபுறுப்புகளையும் மற்ற ஆக்களின்ரை கழுத்து அறுப்புகளையும் தாங்கிக்கொண்டு நீ போக வெளிக்கிட்ட பயணத்துக்கு என்ரை வாழ்த்துகள்... பிறகு ஒருக்கா ஆறுதலா கடுதாசி ஒண்ட எழுதுறன்... விளங்கிச்சோ..?

நன்றி
வணக்கம்
இப்படிக்கு பேரம்பலம்

பிற்குறிப்பு - ஒரு விஷயம் கேட்க வேணும் எண்டு நெச்சனான். பேந்தும் மறந்து போட்டன். நீ யாழ்ப்பாணத்தில அடிக்கடி மோட்டச் சயிக்கிள்ளை முந்தி நான் கொம்படியான் ஊரியான் பாதையில வெட்டி வெட்டி ஓடின மாதிரி ஓடுறாய் எண்டு ஆக்கள் பறையினம். ஆனா சயிக்கிள் ஒரு நாளும் ஓடுறது இல்லையாம். பேந்து பெடியள் படம் எடுத்து முகநூலிலை போட்டு சுமந்திரன் சயிக்கிளிலை ஏறிப்போட்டார். சயிக்கிள் கட்சிக்காரருக்கு சப்போர்ட் எண்டு கதைகட்டிப் போடுவாங்கள் எண்டு பயமாம்... மெய்யே சங்கதி..? அடிக்கடி நீ ஒரு நல்ல லோயர் எண்டு காட்டிப்போடுறாய் ஐஸே. அதுசரி, மோட்டச் சயிக்கிளிலை தனியப் போகப் பயம் எண்டால் ஒரு அதிரடிப் படைக்காறனையும் பின்னாலை எத்தலாம் எல்லே...

# கோட்டா விரட்டப்பட்டமை சர்வதேச சதியே!



## விமல் வீரவங்ச கூறும் புதிய தகவல்கள்

- ராஜபக்ஷ குடும்பத்தாருக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட முரண்பாடு இருக்கவில்லை.
- ஜனாதிபதி பதவிக்கு சஜித்தை விட கோட்டா பொருத்தமானவர்.
- குடும்ப அரசியலில் ராஜபக்ஷக்களுக்கு இருக்கும் தீரா பேராசையினால் ஏற்படப் போகும் விளைவுகளையும் சமூகம் எவ்வாறு பார்க்கும் என்பது தொடர்பில் சிந்திக்காமலும் செயற்பட்டதாலேயே இன்று அவர்களுக்கு இந்த நிலைமை.
- மக்களின் எதிர்ப்பு கடுமையான சந்தர்ப்பத்தில் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் எலெயினாடெப்லிட்ஸ், கோட்டாவை அடிக்கடி சந்தித்துள்ளதுடன், கோட்டாவுக்காக பிரார்த்தனை ஜெபம் செய்துள்ளார்.
- கலவரத்தை தொலைக்காட்சியில் பார்த்ததாலேயே கோட்டா உயிர் தப்பினார்.

தொகுப்பு - நா.தினுஷா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சி செய்யப்பட்டிருந்ததாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் உத்தர லங்கா சபையின் தலைவருமான விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

குறித்த நேர்காணலின் முழு விபரம் வருமாறு;

**உங்களின் தலைமையில் 11 அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துடன், முழு நாடும் சரியான பாதையில் என்ற கூட்டணியொன்றை உருவாக்கியிருந்தீர்கள். இந்தக் கூட்டணியில் வாசு மற்றும் கம்மன்பில ஆகியோரை மாத்திரமே அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இவர்களில் எத்தனை பேர் உங்களுடன் இருக்கிறார்கள்?**

இந்தக் கூட்டணியை கடந்த மார்ச் மாதம் 02ஆம் திகதி அறிவித்தோம். மார்ச் மாதம் 03ஆம் திகதி எங்கள் மூவரையும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். இந்த 11 கட்சிகளில் ஏழு கட்சிகளை உள்ளடக்கிய வகையிலேயே உத்தர லங்கா சபை உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சியிலிருந்த காலப்பகுதியிலேயே இந்தக் கூட்டணியை உருவாக்கியிருந்தோம். அவர்களுக்கு ஏற்றவாறு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி, பின்னர் அவர் ஜனாதிபதியானதும் அவர்களின் பிரச்சினைகள் மறைந்துவிட்டன. அதாவது, பெசில் ராஜபக்ஷவின் செயற்பாடுகளினால் அவருடன் முரண்படும் சிலரும் இருந்தார்கள். அவர்களில் சிலர் தற்போது எங்களுடன் இல்லை.

சுதந்திரக் கட்சி ஒருபுறம் நெருக்கடி நிலையிலேயே இருக்கிறது. அதன் காரணமாகவே உத்தர லங்கா சபையுடன் சுதந்திரக் கட்சியை இணைத்துக்கொள்வதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுக்கவில்லை. எதிர்வரும் தேர்தல் காலகட்டங்களில் மேலும் சில கட்சிகளை எங்களுடன் இணைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

**ஆரம்பத்தில் 11 கட்சிகளுடன் நீங்கள் கூட்டணி அமைக்கும்போது ராஜபக்ஷக்களுடன் தனிப்பட்ட முரண்பாடு உள்ளவர்களும் உங்களுடன் இணைந்துகொண்டார்கள் அல்லவா?**

வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டவர்களே அந்தக் கூட்டணியில் இணைந்துகொண்டார்கள். உண்மையில், எங்களுக்கும் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கும் தனிப்பட்ட முரண்பாடு இருக்கவில்லை. ஆனால், பெசில் ராஜபக்ஷவினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இழப்புகள் குறித்து எங்களின் மத்தியில் கடுமையான விமர்சனங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இது தனிப்பட்ட முரண்பாடுகளுக்கப்பால் அரசியல் முரண்பாடாக அந்த நேரத்தில் உக்கிரமாக இருந்தது.

**நீங்கள் உள்ளிட்ட உங்களின் அணிக்கு அன்றிருந்த வரவேற்பு இன்றும் இருக்கிறதா?**

எங்களுக்கான ஆதரவு அதிகரிக்கிறதே தவிர, குறைவடையவில்லை. நாளுக்கு நாள் எங்களுக்கான மக்களின் ஆதரவு அதிகரித்தே வருகிறது. மாவட்ட மட்டத்திலான எங்களின் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

**நீங்கள் கூறுவதுபோன்று உங்களுக்கான மக்கள் ஆதரவு அதிகரித்திருக்கிறது என்றால், அநுராதபுரம் மற்றும் கண்டி பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புகளில் எதிர்ப்பை அவதானிக்கக்கூடியதாக இருந்ததே?**

அநுராதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புக்கு மூவர் வந்தார்கள். கூச்சலிட்டு, தேங்காய் அடித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்கள். அது தலைப்புச் செய்தியாகவும் மாறியது. கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலும் நால்வர் கலந்துகொண்டு அங்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர். மற்றையவர் லஹிரு கலபத்தி. அவரின் தந்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார். மூன்றாவது நபர் முன்னிலை சோஷலிசக் கட்சியின் உறுப்பினரான தனஞ்ஜய ரத்நாயக்க. இவர்களுடன் மேலும் இருவர் இருந்தார்கள். பலவந்தமாக அரசியல் தீர்மானங்களை எடுக்கவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். உத்தர லங்கா சபையினால் நாட்டுக்கு எந்தப் பலனும் இல்லை என்றால் எதற்காக இவ்வாறான அடாவடித்தனம் செய்கிறார்கள் என்பது புரியவில்லை.

**"பொய்கூறி மக்களை ஏமாற்றி விட்டார்கள். கோட்டாவை ஆட்சியில் அமர்த்தி நாட்டை சீரழித்துவிட்டார்கள். உத்தர லங்கா சபையை அமைத்து மீண்டும் நாட்டை சீரழித்துவிட்டார்கள். தற்போது அடுத்த ஐந்து வருடங்களை தம்வசப்படுத்த முயற்சிக்கிறார்கள்." இது, அநுராதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் குழப்பம் ஏற்படுத்தியவர்களின் கருத்து?**

முன்னிலை சோஷலிசக் கட்சியினர் இவ்வாறு கூறாமல் வேறு எதைக் கூற முடியும். ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதைத் தவிர, வேறு காரணங்கள் இல்லை. கோட்டாவை ஆட்சிபீடம் ஏற்றினார்கள் என்று சுட்டிக்காட்டுகிறார்கள் என்றால், சஜித்தை ஆட்சிக்கு கொண்டுவரவில்லை என்பதே அவர்களின் மறைமுக வாதம். சஜித்தை ஆட்சிக்கு கொண்டுவராததன் கவலையே அங்கு தென்பட்டுள்ளது.

**அவ்வாறெனில் ஐக்கிய மக்கள் சக்தியினரும், முன்னிலை சோஷலிசக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எவ்வாறு ஒருங்கிணைந்தார்கள்?**

முன்னிலை சோஷலிசக் கட்சிக்கும் சரத் பொன்சேகாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் போன்றே சரத் பொன்சேகா தற்போது செயற்படுகிறார். 1978, 79ஆம் ஆண்டுகளிலிருந்தே குமார் குணரத்னம் மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துவந்துள்ளன. அந்த காலகட்டத்தில் படைவீரர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு உயிர் காவுகொள்ளப்படாதவர் என்றால், அவர் குமார் குணரத்னமாகத்தான் இருக்கவேண்டும்.

**இந்தக் குற்றச்சாட்டுகளையே சமூகமயப்படுத்தப்படலாம் அல்லவா?**

இந்த விடயங்கள் புதிதல்ல. கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்ததாலேயே தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் முன்னாயத்தமாக கலந்துரையாடி தீர்மானம் எடுத்தும், அரசாங்கத்தின் உள்ளக ரீதியாக போராடியும் அதற்கான பிரதிபலன்கள் இல்லாமையினாலேயே அரசாங்கத்திலிருந்து வெளியேறினோம்.

அமைச்சுகள் மீதும், பதவிகள் மீதும் பேராசை வைத்திருந்தால் எச்சரிக்கையான கருத்துகளை நாங்கள் வெளியிட்டிருக்க மாட்டோம். அவ்வாறெனில், மனசாட்சியை பூட்டிவிட்டு கோட்டாவை ஜனாதிபதியாக்கினோம், பொருளாதார நெருக்கடி வரப் போகிறது, ஆனால், அதற்குரிய நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள், கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டுவந்ததால் இந்த விடயங்களை வெளிப்படையாக பேசுவது முறையல்ல. இந்த நிலைமையின் மத்தியில் தொடர்ந்து பயணிப்போம் என்று கூற இருந்தது. அவ்வாறிருந்தால் மாத்திரமே நாங்கள் தவறானவர்கள். நாங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய நம்பிக்கை எங்களால் நியமிக்கப்பட்ட தலைவரினால் சீர்குலைக்கப்படும்போது, அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கான தைரியம் எங்களுக்கு இருந்தது.

**உங்களின் அரசியல் வரலாற்றில், நீங்கள் எடுத்த தவறான அரசியல் தீர்மானம் என்று எதனைக் குறிப்பிடுவீர்கள்?**

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று தீர்மானித்தது எனது தவறான முடிவென்று நான் உள்ளிட்ட அனைவரும் கூறுகிறார்கள் என்றால், அதற்கு எதிர்மறைபொருள் சஜித் பிரேமதாசவையே நீங்கள் வெற்றியடையச் செய்திருக்க வேண்டும் என்பதாகும். அந்த முட்டாள்தனமான தீர்மானத்திலும் பார்க்க கோட்டாவை ஜனாதிபதியாக்கியது சிறந்தது என்பதே எனது நிலைப்பாடாகும்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியல்வாதியாகவும், அரச தலைவராகவும் தோல்வியடைந்துவிட்டார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அவர் கொள்ளையடிக்கவில்லை. அதேபோன்று, அரச நிதியை சீரழிக்கவும் இல்லை. அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதனை மறுக்கவில்லை. இருந்தபோதும் அரசியல்வாதி என்ற அடிப்படையில் பலவீனமானவர். குடும்பத்துக்குள்ளே பணயக் கைதியாகி, பெசில் ராஜபக்ஷ கூறும் விடயங்களுக்கமைய தீர்மானங்களை மேற்கொண்டு, பி.பீ.ஜயசுந்தரவை தலைக்குமேல் வைத்து அவர் கூறும் அனைத்தையும் நம்பி ஏமாந்துவிட்டார். இதுபோன்ற நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களினாலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டது.

இரட்டைப் பிரஜாவுரிமைக்கு இடமளித்ததே முதலாவது தவறு. அங்கிருந்தே சகல பிரச்சினை களும் ஆரம்பமாகின. பெசிலுக்கு மீண்டும் இலங்கைக்கு வரவேண்டிய அவசியம் இருந்திருந்தால், கோட்டா தனது இரட்டைக் குடியுரிமையை நீக்கிக்கொண்டது போன்று அவரும் இரட்டைக் குடியுரிமையை நீக்கிக்கொண்டிருக்க வேண்டும். அப்படியொரு அவசியம் அவருக்கு இல்லை என்றால், பெசிலுக்கு ஏற்றவாறு நாட்டின் சட்டத்திட்டங்களை மாற்றியமைக்க முடியாது.

**ஆனால், அன்று நீங்களும் இரட்டைக் குடியுரிமை தொடர்பான தீர்மானங்களுக்கு ஆதரவளித்திருந்தீர்களே?**

ஆட்சி பொறுப்பேற்ற ஒரு வருடத்துக்குள் இரட்டைப் பிரஜாவுரிமையை நீக்குவதாக கோட்டா கூறியிருந்தார். கோட்டா ஏமாற்றி விட்டார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இருந்தாலும், வேறொரு முறையில் அந்த விடயத்தை செய்து முடித்துவிட்டோம். 22ஆவது திருத்தம் தொடர்பான யோசனை சமர்ப்பிக்கப்பட்டபோது, ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் இந்தத் திருத்தத்துக்கு எதிராகவே கருத்துகளை வெளியிட்டு வந்தார்கள். ஆனால், நாங்களே இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தோம். அதன்பின்னரே, அந்தத் திருத்தத்துக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**நாட்டில் மீண்டும் ராஜபக்ஷக்களின் குடும்பம் ஆட்சிக்கு வருவதற்கு 2019ஆம் ஆண்டின் பின்னர் நீங்களும் முக்கிய பங்களிப்பைச் செய்திருந்தீர்கள். இதுதொடர்பில் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள்?**

நாட்டில் நிலவிய யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவருவதற்கு முக்கியத்துவம் வழங்கிய தலைவர் என்ற கௌரவம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கிறது. அதனை ஏற்றுக்கொண்டதாலேயே அந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்கினோம். அவ்வாறான, எச்சரிக்கை நிறைந்த தீர்மானத்தை எடுக்க துணிந்த நபரொருவரை வரலாற்று ரீதியாக தோற்கடிக்கும்போது, எதிர்காலத்தில் வரும் தலைவர்கள் கூட அவ்வாறான இக்கட்டான தீர்மானங்களை எடுக்க முன்வரமாட்டார்கள்.

குடும்ப ஆட்சியினால் தோல்வியையும் சந்தித்துள்ளோம். இருந்தபோதும் இவ்வாறானதொரு அரசியல்வாதி அதிகாரத்தில் இருக்கும்போதே ஓய்வு பெற்றுச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாடு எங்களுக்கு இருந்தது. அதற்குக் காரணம், எதிர்காலத்தில் வரும் தலைவர்கள் தீர்மானமிக்க முடிவுகளை எடுப்பதற்கானதொரு முன்னுதாரணமாக இருக்குமென நாங்கள் நம்புவதாலாகும்.

கடந்த அமைச்சரவையில் ராஜபக்ஷக்களின் குடும்பத்தில் மூவரே இருந்தார்கள். ஆனால், இம்முறை அமைச்சரவையில் ராஜபக்ஷக்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்தது. எனவே, கடந்த காலங்களில் அவர்கள் எதையும் புதிதாக கற்றுக்கொள்ளவில்லை என்பதே தெளிவாகத் தெரிகிறது. அதன் காரணமாகவே அவர்களின் விதி இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**ஆனால், இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருந்த வரவேற்பும் இல்லாமல் போய்விட்டதே?**

அது அவர்களே அவர்களுக்கு செய்துகொண்டது. நாங்கள் எதுவும் செய்யவில்லை. குடும்ப அரசியலில் ராஜபக்ஷக்களுக்கு இருக்கும் தீரா பேராசையினால் ஏற்படப் போகும் விளைவுகளையும் சமூகம் எவ்வாறு பார்க்கும் என்பது தொடர்பில் சிந்திக்காமலும் செயற்பட்டதாலேயே இன்று அவர்களுக்கு இந்த நிலைமை.

**நாமல் ராஜபக்ஷவுக்கு சிறந்த அரசியல் வட்டாரமொன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருப்பதாக கருத்து வெளியிடப்படுகிறது. அன்றும் அவருக்கு இந்த நிலைப்பாடு இருந்ததா?**

நாமலின் அரசியல் செயற்பாடுகள் குறித்து என்றும் எங்களுடன் பேசியதில்லை. நாமல் இவ்வாறான பாதையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை. நாமல் இன்னும் இந்த சமூகத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவர் எதிர்காலத்தில் புரிந்துகொள்வார் என்றும் நம்பவில்லை.

நாமலுக்கு அரசியல் அனுபவமும், முதிர்வும் கிடைப்பதற்கு முன்னரே அரசியலில் ஈடுபடுத்திவிட்டார்கள். சிறந்த தந்தை என்றால் படிப்படியாக அவருக்கு ஒவ்வொரு விடயங்களையும் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். திடீரென நாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்து அமைச்சுப் பதவியை வழங்கியதும் தந்தையே ராஜாவென்ற ஆணவமும் ஏற்பட, அவரின் அரசியல் கலாசாரம் முழுமையாக மாறிவிட்டது.

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்டபோதும் அவருக்கு அரசியல் அனுபவம் இல்லை என்ற நிலைப்பாடு எதிர்த்தரப்பு மட்டத்தில் இருந்தது. அதன்போது உங்களின் நிலைப்பாடு எப்படியிருந்தது?**

கோட்டாபய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர், நான் உள்ளிட்ட மேலும் எம்.பிக்கள் நால்வர் அவரை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம். அதன்போது, "நீங்கள் நம்பும் அரசியல்வாதிகள் உங்களை சிறந்தவர் என்று நம்புகிறார்கள். நீங்கள் அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு முன், அரசியல்வாதிகள் நால்வரையாவது அருகில் வைத்துக்கொள்ளுங்கள். யாராக இருந்தாலும் பரவாயில்லை. அரசியல் தீர்மானங்களை எடுக்குமுன் அவர்களுடன் கலந்துரையாடுங்கள்" என்று நான் தனிப்பட்ட ரீதியில் கோரியிருந்தேன்.

அதனைக் கூறியதும் கேட்காததுபோல் இருந்தார். மேலுமொரு சந்தர்ப்பத்தில் இரண்டாவது முறையும் அதனை அவருக்கு கூறியிருந்தேன். ஆனாலும், கற்சிலைக்கு கூறியதுபோன்றதொரு உணர்வே என்று தோன்றியது. அதன்பின்னர் நானும் அவருடன் இணைந்து செயற்பட விரும்பி கோருகிறேன் என்று எண்ணினாரோ என்னவோ என்று நினைத்து, எனக்கு அப்படியொரு விருப்பம் இல்லாவிட்டாலும் மூன்றாவது முறையாகவும், அதனை அவருக்கு நினைவுபடுத்தினேன்.

அரசியல் தொடர்பில் இவருக்கு தூரநோக்கான அனுபவமே இருக்கிறது என்பதை புரிந்துகொண்டோம்.

(07ஆம் பக்கம் பார்க்க)



# எடப்பாடியின் பிடிவாதத்தால்

# பாரதீய ஜனதாவுக்கு சிக்கல்

சசிகலாவையும், ஓ.பன்னீர்செல்வத்தையும் கடுமையாக எதிர்த்த எடப்பாடி பழனிசாமி, மத்திய அமைச்சர் அமித் ஷாவையும் தூக்கி எறிந்துள்ளார். தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும்போது பாரதீய ஜனதாவைத் தூக்கித் தலையில் வைத்த எடப்பாடி இப்போது எட்டி உதைக்கிறார். ஓ.பன்னீர்ச்செல்வத்திடம் இருந்த முதல்வர் பதவியை பறித்து எடப்பாடியின் தலையில் சூட்டிய சசிகலாவையே யாரென்று கேட்ட எடப்பாடி, மீண்டும் தனது சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த வாரம் அமித் ஷா தமிழ்நாட்டுக்குச் சென்றபோது அவரை எடப்பாடி பழனிசாமி சந்திக்கவில்லை. ஓ.பன்னீர்செல்வம் சென்று சந்தித்தபோது எடப்பாடி பழனிசாமி மட்டும் அமித் ஷாவை சென்று சந்திக்கவில்லை. இதுதான் அரசியல் வட்டாரத்தில் புயலைக் கிளப்பியுள்ளது. இந்த விவகாரம் பெரிதாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதீய ஜனதாக் கட்சி இரண்டும் வெவ்வேறு கட்சிகள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் மிகப் பெரிய கட்சி, பாரதீய ஜனதா தேசியக் கட்சி. அமித் ஷா தமிழ்நாடு வரும் போதெல்லாம் அமித் ஷாவை சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் ஒவ்வொருமுறை வரும்போதெல்லாம் போய் சந்திக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

பாரதீய ஜனதா தமிழகத்தில் சிறிய கட்சி. நான்தான் தமிழகத்தின் பெரிய தலைவர் எனச் சொல்லாமல் சொல்வதுபோல் இருக்கிறது. உள்துறை அமைச்சர் அமித் ஷா சென்னை வந்தால் அவரை பார்த்தாக வேண்டுமா என்று எடப்பாடி பழனிசாமி கேட்ட கேள்வி தமிழ்நாடு அரசியலை உலுக்கியுள்ளது. எடப்பாடி பழனிசாமியா இப்படி



பேசினார். வியப்பாக இருக்கிறதே என்று அரசியல் விமர்சகர்கள் சொல்லும் அளவிற்கு எடப்பாடி பழனிசாமியின் பேச்சு அமைந்துள்ளது.

முதல்வர் பதவியைத் தக்கவைப்பதற்காக பாரதீய ஜனதாவின் கட்டளைக்கிணங்க பன்னீர்செல்வத்துடன் கட்சித் தலைமையைப் பகிர்ந்துகொண்ட எடப்பாடியா இப்படிச் சொல்கிறார் என ஆச்சரியப்படவேண்டியுள்ளது. முதல்வர் ஸ்டாலினை விமர்சிப்பதை விட அதிகமாக பன்னீர்செல்வத்தைத் தூஷிப்பதையே எடப்பாடி தினமும் செய்கிறார்.

தமிழகத்தில் 11 அரச மருத்துவக் கல்லூரிகளைக் கட்டுவதில் முறைகேடு நடைபெற்ற புகாரில் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான குற்றசாட்டுகளுக்கு முகாந்திரம் இருக்கிறது என்கிறது சென்னை உயர்நீதிமன்றம். ஏற்கனவே கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு எடப்பாடி பழனிசாமிக்கு எதிரானதாக இருக்கிறது. அதிமுகவுக்கு உரிமை கோரி தொடரப்பட்டிருக்கும் வழக்கும் நிலுவையில் இருக்கிறது. இவை அனைத்துமே எடப்பாடி பழனிசாமியின் எதிர்காலத்தை தீர்மானிக்கிற தலைக்கு



மேலே தொங்குகிற கத்திகள்.

ஆனால், இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் பாரதீய ஜனதாவைக் கை கழுவ வேண்டும் என்பதில் குறியாகவே இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அவருக்கு மிக நெருக்கமான குறிப்பாக, வழக்குகளில் சிக்கியிருக்கும் சில மாஜி அமைச்சர்களின் வயிற்றில் புளியை கரைத்துக்கொண்டிருக்கிறதாம். ஏனெனில், சில ஆண்டுகளுக்கு முன்னர் சசிகலாவுக்கு நேர்ந்தது நமக்கு வர எவ்வளவு நேரமாகும் என்கிற பீதிதானாம். அது பாரதீய ஜனதாவுடன் கூட்டணி சேரக்கூடாது என நினைப்பவர்கள் எடப்பாடியின் முடிவை விரும்புகிறார்கள். அமித் ஷாவையே எடப்பாடி தூக்கி எறிந்தது பாரதீய ஜனதா எதிர்ப்பாளர்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது. சி.வி.சண்முகம், ஜெயக்குமார், முனுசாமி ஆகியோர் பாரதீய ஜனதாவை மிக மூர்க்கமாக எதிர்க்கிறார்கள். மூன்று தேர்தல்களிலும் பாஜகவுடன் கூட்டணி வைத்ததால்தான் ஆட்சியை இழந்தோம் என்ற மனநிலையில் இவர்கள் உள்ளவர்கள் எனத் தெரிகிறது. அந்தவகையில், எடப்பாடியின் அடுத்தடுத்த துணிச்சல் பேச்சுகள், இதுபோன்றோருக்கு புதுத் தெம்பை தந்து வருகிறதாம். ஒருவேளை உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டி என்பதுபோல் பாஜக முடிவு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, இனியும் எடப்பாடியிடம் அமைதியாகப் போகாது என்கிறார்கள் அதிமுகவில் ஒருசாரார்.

மதுரை கல்லூரி நிகழ்ச்சியொன்றில் பிரதமர் மோடி கலந்துகொண்டபோது அவரைச் சந்திப்பதற்கு பன்னீர்செல்வத்துக்கும், எடப்பாடிக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இருவரையும் அருகருகே மோடி நிற்க வைத்தார். இது எடப்பாடியை சீற்றங்கொள்ளச் செய்தது. அப்போது அதனை வெளிக்காட்டாத எடப்பாடி, அமித் ஷாவைப் புறகணித்ததன் மூலம் வெளிப்படுத்தினார்.

தமிழகத்தில் வலுவாகக் காலூன்றுவதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவு பாரதீய ஜனதாவுக்கு இன்றியமையாதது. பாரதீய ஜனதாவின் தலைமையில் தமிழகத்தில் கூட்டணி அமையும் என அண்ணாமலை அறிவித்தார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தமிழகத்தில் வலுவான கூட்டணி உருவாகும் என எடப்பாடி தெரிவித்தார். அண்ணாமலை அதற்கு ஆமாம் போட்டார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் இருந்த கட்சிகள் அனைத்தும் வெளியேறி விட்டன. இந்நிலையில், வலுவான கூட்டணியை எடப்பாடி எப்படி கட்டமைக்கப் போகிறார் எனத் தெரியவில்லை.

ஒரே கட்சியில் இருந்த பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி, சசிகலா, தினகரன் ஆகிய நால்வரும் ஆளுக்கொரு திசையில் நிற்கின்றனர். இவர்கள் நான்கு பேரையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதில் பாரதீய ஜனதா உறுதியாக இருக்கிறது. ஆனால், இந்த நான்கு பேரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உரிமை கோருகிறார்கள். ஒன்றரைக் கோடி தொண்டர்கள் தமக்குப் பின்னால் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், கட்சியின் முக்கிய நிர்வாகிகளும், தொண்டர்களும் வேறு கட்சிக்குச் சென்றுவிட்டார்கள், இவர்கள் இப்போதும் தூக்கத்தில் இருக்கிறார்கள்.

## கோட்டா விரட்டப்பட்டமை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் ஜனாதிபதியின் செயலாளராக்கிக் கொண்டதும் அவ்வாறானதொரு நபரையே. மறுபுறம் பெசில் ராஜபக்ஷவின் அரசியல் கொள்கைத்திட்டத்தில், கோட்டாவையும் உள்ளீர்த்துக்கொண்டு அரசியல் செய்யும் தனியான திட்டங்களே இருந்தன. இதனை விட்டால் நிலைமை நெருக்கடிக்குள்ளாகும் என்று எண்ணியே மூன்று முறையும் இந்த யோசனையை முன்வைத்தேன்.

அதன் பின்னரே பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை ஏற்குமாறு கோட்டாவைக் கோரினோம். கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றால்தான் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாடு, அவர்களின் தன்மையை புரிந்துகொள்ள முடியும்.

ஜனாதிபதி செயலாளராக பி.பீ.ஜெயசுந்தர இருந்தபோது பெரமுன உறுப்பினர்கள் அவரை 'சேர்' என்று அழைப்பார்கள். பி.பீ.ஜெயசுந்தர கௌரவ உறுப்பினர் என்று அழைப்பார். தற்போது, ரணிலின் செயலாளர் எம்.பிக்களை சேர் என்று அழைக்க, எம்.பிக்கள் அவரை ஜனாதிபதியின் செயலாளரே என்கிறார்கள். அதாவது, கோட்டாவின் காலத்தில் அவரின் செயலாளருடன் எம்.பிக்களால் இலகுவில் உரையாட முடியாது. ஆனால், தற்போது எம்.பிக்களுக்கும் ஜனாதிபதி செயலாளருக்கும் இடையிலான புரிந்துணர்வு தன்மை இலகுவாக்கப்பட்டுள்ளது. இதனை கோட்டாபய ராஜபக்ஷ புரிந்துகொள்ளவில்லை.

**அவ்வாறெனில், தற்போதுள்ள முறை சிறந்தது என்கிறீர்களா?**

மக்கள் பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அவர்களை ஓரங்கட்டிவிட்டு எவ்வாறு நாட்டை நிர்வகிப்பது.

**இவரால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை நீங்கள் ஆரம்பத்திலேயே புரிந்துகொள்ளவில்லையா?**

எதிர்த்தரப்பில் இருந்த காலத்தில், கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாங்கள், 'பெசில் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளரானால் நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று கேட்டோம். டிரான் அலெஸிடம் அவர், ''டிரான் உங்களின் கட்சியை அவ்வாறே வைத்துக்கொள்ளுங்கள். அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்பட்டால் உங்களின் கட்சியில் போட்டியிடுவேன்" என்று கூறினார்.

எனவே, இது சவாலுக்குரிய விடயம். அதனைக் கடந்துசெல்ல தான் தயாராக இருக்கிறார் என்பதை அன்றே அவர் ஒப்புக்கொண்டார். அந்த இடத்தில் குடும்ப ரீதியில் சவால் வந்தாலும் அதனையும் மீறிச் செல்லும் மனநிலை கொண்டவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த காலத்தில் பெசிலுக்கும் கோட்டாவுக்கும் முரண்பாடுகளும் இருந்தன. அதன்பின்னர், சவால் ஏற்பட்டால் குடும்ப ஆட்சியை மீறி புதிய அரசியலுக்குப் பிரவேசம் செய்யவும் கோட்டா தயாராக இருக்கிறார் என்று எதிர்பார்த்தோம்.

**கோட்டா வந்தால் நாமல் போன்றவர்களால் விளையாட முடியாது. குடும்ப ஆட்சி நிறைவுக்கு வந்துவிடும் என்றல்லவா அனைவரும் நம்பினார்கள்?**

அதனை அடிப்படையாகக்கொண்டே 69 இலட்சம் மக்கள் கோட்டாவுக்கு வாக்களித்தார்கள். ராஜபக்ஷக்கள் குடும்பத்திலுள்ள ஏனையவர்கள் தொடர்பில் இருந்த நிலைப்பாடுகளுக்கும் அப்பால், கோட்டா தொடர்பில் ஒரு மாற்று நிலைப்பாடு இருக்கிறது. நாங்கள் அவரை சந்தைப்படுத்தவில்லை. பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றிய விதம், நகர அபிவிருத்தி அதிகாரசபையினூடாக செய்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியிலும் அவர் தொடர்பில் வரவேற்கத்தக்க நிலைப்பாடுகள் இருந்தன. பாதுகாப்புப் பிரிவை எடுத்துக்கொண்டாலும் குடும்பத்துவம் தென்படவில்லை.

அவரின் மாற்றுத்தன்மையின் காரணமாகவே மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள்.

**பாதுகாப்புச் செயலாளராகவும், நகர அபிவிருத்தி அதிகாரசபை செயலாளராகவும் வெற்றிகரமாக செயற்பட்ட கோட்டா, 69 இலட்சம் மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவியும் முப்படை அதிகாரமும் கிடைத்து ஏன் தோல்வியை சந்தித்தார்?**

அதற்கு ஒரு காரணம் இல்லை. பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம், குடும்ப கட்டுப்பாடு. மற்றையது பெசில் ராஜபக்ஷவின் அரசியல் கொள்கைகளுக்கேற்ப அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டமையாகும். அதேபோன்று, ஓய்வுபெற்றதும் மிகுதி காலத்தை அமெரிக்காவிலுள்ள தனது பிள்ளைகளின் குடும்பத்துடன் வாழவேண்டும் என்ற ஆசையும் அவருக்கு இருந்தது. அதனால், அமெரிக்காவின் தரப்பில் எதிர்ப்பை சந்தித்துவிடக் கூடாது என்ற ஓர் எண்ணமும் அவருக்கு இருந்திருக்கிறது. இருந்தபோதும், மிலேனியம் செலேஞ் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படக்கூடாது என்பதற்காக அமைச்சரவைப்பத்திரத்தை சமர்ப்பித்து அதற்கு அனுமதியையும் பெற்றுக்கொண்டார்.

இந்தத் தீர்மானத்தின் பின்னர் சற்று அவதானமாக செயற்பட ஆரம்பித்துவிட்டார். மிரிஹானை பிரதேசத்தில் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து, கோட்டாவை சந்திப்பதற்காக அமெரிக்கத் தூதுவர் எலெயினா டெப்லிட்ஸ் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற இரவு, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அமெரிக்கத் தூதுவர் கோட்டாவுக்காக ஜெபம் செய்துள்ளார். ''மதிப்புக்குரிய ஜனாதிபதி அவர்களே நீங்கள் பௌத்தர். நானொரு கத்தோலிக்கர். நீங்கள் இப்போது நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ளீர்கள். எனவே, உங்களுக்காக நான் ஜெபம் செய்ய வேண்டும்'' என்று கூறி கடவுளிடம் தூதுவர் பிரார்த்தனை செய்துள்ளார்.

இந்த விடயத்தை கோட்டா, மிகவும் காதல் வயப்பட்டு சொல்லிக்கொண்டிருந்துள்ளார். அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் கோட்டாவை அமெரிக்கத் தூதுவர் சந்தித்தும் வந்துள்ளார்.

அதுமாத்திரமல்லாமல், அமெரிக்கத் தூதுவர், பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி, புலனாய்வுப் பிரிவினர் என சகலரையும் சந்தித்து இரவுநேர விருந்துகளிலும் கலந்துகொண்டுள்ளார். எனவே, அந்தப் பக்கத்திலிருந்து மனநிலை ரீதியான தடுப்பொன்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்துள்ளது.

இதற்கு சிறந்த உதாரணம், நீண்டநாட்கள் ஜனாதிபதி செயலகத்தின் பிரதான நுழைவாயில் மூடப்பட்டிருந்தது. ஜனாதிபதி செயலகத்தில் பிரதான வாயிலை மூடுவதற்கு எந்த ஜனாதிபதியும் இடமளிக்க மாட்டார்கள். ஆனால், அங்கிருந்தவர்களை தகர்த்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை.

அதற்குக் காரணம், ''இந்தப் போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறையை பிரயோகித்தால் நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் தோல்வியடையும். அதனூடாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும். அது உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்" என்று அமெரிக்கத் தூதுவர் கோட்டாவுக்கு மனநிலை ரீதியான தடுப்புகளை விதித்துள்ளார்.

**நீங்கள் கூறுவதைப் பார்த்தால், கோட்டாவை தோல்வியடையச் செய்வதற்கு சூழ்ச்சியொன்று செய்யப்பட்டுள்ளது என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவ்வாறெனில், இந்த சூழ்ச்சியில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நீங்கள் எண்ணவில்லையா?**

ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்யும் ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கான திட்டம் கூட வகுக்கப்பட்டிருந்தது. மக்கள் பேரணியாக வந்து பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷவும், அவரின் குடும்ப உறுப்பினர் ஒருவரும் இராணுவத்தினரின் கெமரா பதிவுகளைப் பார்த்து நிலைமையை கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள். கோட்டாவும், அவரின் குடும்ப அங்கத்தவர் ஒருவரும் என்ன நிலைமை என்று கேட்க, அங்கிருந்த இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் "நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது சேர். பிரதான வாயிலுக்கு வெளியில் இருக்கும் எவரும் உள்நுழைய முடியாது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது" என்று கூறி ஒரு சுமுகமான சித்திரத்தை வரைகிறார்கள்.

நேரத்துக்கு, கோட்டா அங்கிருந்த ரிமோட் கன்ரோலை எடுத்து தொலைக்காட்சியை இயக்குகிறார். அதன்போது, ஒரு தொலைக்காட்சியின் காட்சிகளில் அங்கிருந்த போராட்டக்காரர்கள் தடுப்பை உடைத்துக்கொண்டு உள்நுழைவதை அவதானிக்கிறார். அவ்வாறென்றால் அது தெரியாமலா அதிகாரிகள் அவ்வாறு கூறினார்கள். அதிகாரிகளும் கோட்டாவுக்கு பொய்யே கூறியுள்ளார்கள். இந்த விடயங்கள் நாட்டில் முறையாக விமர்சனப்படுத்தப்படுவதில்லை.

**அந்த சந்தர்ப்பத்தில் கோட்டா தொலைக்காட்சியை இயக்கி இருக்காவிட்டால்?**

வெளியில் நடப்பது எதுவும் தெரிந்திருக்காது. அதனைக் கண்டதுமே அவசரமாக பின்புறத்தில் அங்கிருந்து வெளியேறினார். முஹம்மத் கடாபிக்கு நடந்த சூழ்ச்சியே இங்கும் இடம்பெற்றிருக்கிறது. இதுவே திட்டம்.


**அவ்வாறெனில், கோட்டாவை பதவியிலிருந்து துரத்துவதற்கப்பால், அவரை கொலை செய்வதே திட்டம்?**

அந்தத் திட்டத்தில் கோட்டாவை கொலை செய்வதும் ஒரு பகுதியாகும். அன்புடன் பேசிய அமெரிக்கத் தூதுவர் தீர்மானமிக்க தினத்தன்று பதவி விலகுகிறார்.

ஊஸைட் நிறுவனம் எவ்வாறு நிதி செலவிட்டது என்று நாடாளுமன்றத்தில் விளங்கப்படுத்தியிருந்தேன். ஈ.டி. என்ற நிறுவனம் எவ்வாறு பணம் செலவழித்தது என்றும் விளக்கமளித்துள்ளேன். எரிபொருள், எரிவாயு இல்லா சூழ்நிலையில் மக்கள் நெருக்கடிக்குள்ளானார்கள். அது உண்மை. மக்களை இவர்களின் தேவைக்காக பயன்படுத்திக்கொண்டார்கள்.

**இந்தத் திட்டத்துக்குள், யார் யார் இருந்தார்கள்?**

இந்தக் குழப்பகர சூழ்நிலையை பொலிஸாரும் இராணுவத்தினரும் எதற்கு பொறுமையாக பார்த்துக்கொண்டிருந்தார்கள். எனவே, அவர்களின் பங்கும் இதில் இருக்கிறது.



# ராஜீவ் கொலை வழக்கின் கைதிகளை அனுப்புமா பாரதம் ஏற்குமா இலங்கை?

**“என் பிள்ளை என்னிடம் வரும்வரை உயிரை கையில் பிடித்துக்கொண்டிருக்கிறேன். என் பிள்ளையை பார்க்கவேண்டும், கட்டிப்பிடித்து கொஞ்ச வேண்டும். எண்ட கையால பச்ச தண்ணீர் கூட இல்லாமல் 30 வருஷமா என்பிள்ளை கஷ்டப்படுகிறது.... ஒரு தடவையாவது மூன்று நேர உணவையும் வயிறார உண்ணக் கொடுக்க வேண்டும். அதற்காகவே உயிரை கையில் பிடித்துக்கொண்டிருக்கிறேன்”** என தள்ளாத வயதிலும் தளராத மனதுடன் மகன் சாந்தனின் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறாள் தில்லையம்பலம் மகேஸ்வரி அம்மா...

இற்றைக்கு 31 ஆண்டுகளுக்கு முன்னர்...

இனவழிப்புப் போர் ஈழநாட்டை சூறையாடிக் கொண்டிருந்தவேளை...

இருபது வயதேயான இளைஞன் சாந்தன். கடின உழைப்பால் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு, காலைவேளையில் அப்பம் சுட்டு வீடு வீடாகச் சென்று காலை உணவு விற்று வீட்டு வறுமையைப் போக்கிக்கொண்டிருந்த சமயம், லண்டனுக்கு போகவென முடிவெடுக்கவே, இலங்கையிலிருந்து நேரடியாக லண்டனுக்குப் போக முடியாத சூழ்நிலை. அயலவர்களின் ஆலோசனைக்கமைய இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து லண்டனுக்கு போகவென முடிவெடுக்கிறார்.

1990களில் சாந்தனின் லண்டன் கனவு பயணம், சட்டவிரோத படகினூடாக தமிழகத்தின் தரையைத் தட்டி நின்றது... கனவில் பாதி நிறைவேறியிருந்தது.

இந்தியாவில் காந்தி குடும்பத்தின் ஆட்சி நடைபெற்றுகொண்டிருந்தது. இந்தியாவுக்கு இரண்டு பிரதமர்களை கொடுத்த புகழ்பெற்ற அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்டவராகிய - பிரிட்டனில் படித்துவிட்டு நாடு திரும்பிய ராஜீவ் காந்தி, இந்தியன் எயார்லைன்ஸில் விமானியாக பணிக்குச் சேர்ந்தார்.

1968ஆம் ஆண்டு தான் படிக்கும்போது காதலித்த இத்தாலியைச் சேர்ந்தவரான சோனியா காந்தியை திருமணம் செய்துகொண்டார். தன்னுடைய தாயார் இந்திரா காந்தி நாட்டின் பிரதமராகவும், சகோதரர் சஞ்ஜய் காந்தி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தபோதும் ராஜீவ் அரசியலிலிருந்து விலகியே இருந்தார்.

இந்நிலையில், 1980ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக விமான விபத்தொன்றில் சகோதரர் சஞ்சய் காந்தி உயிரிழந்தார். இதனையடுத்து தாய் இந்திரா காந்தியின் விருப்பத்தின்பேரில் ராஜீவ் அரசியலில் நுழையவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனையடுத்து இடம்பெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு தமது தமயனின் அரசியல் இடைவெளியைப் போக்கி, அதே காலப்பகுதியில் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

1984ஆம் ஆண்டு தாய் இந்திரா காந்தி அவரது பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தாயின் மறைவு தன்னை நிலை குலைய வைத்திருந்தபோதும் தாய் நாட்டைக் காக்க அன்றைய தினமே இந்தியப் பிரதமராக பொறுப்பேற்றுக்கொண்டார் ராஜீவ் காந்தி. தொடர்ந்து ஐந்து வருடங்களாக பிரதமராக நீடித்த காலத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில், 1989ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியைத் தழுவுகிறார் ராஜீவ். ஆட்சி அதிகாரம் கைநழுவிப் போனது.

இதற்கிடையே ஈழநாடு, விடுதலை வேங்கைகளின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பி விடுதலைப் புலிகளின் பகையை சம்பாதித்துக்கொண்டார் ராஜீவ் காந்தி.

**அமைதிப்படையின் இலங்கை வருகை**

‘சுதந்திரமான அரசு வேண்டும்’ என்ற விடுதலைப் புலிகளின் வேட்கைக் கொண்டிருந்த காலப்பகுதி அது.

வடக்கில் வசித்த தமிழ்ச் சமூகம், பெரும்பான்மை சிங்கள சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக உணர்ந்தனர். ‘இலங்கையின் ஆட்சிமொழி சிங்களம் மட்டுமே’ என்ற சட்டத்தை இலங்கை அரசு அப்போது நிறைவேற்றியிருந்தது.

இது, தமிழ்ச் சமூகத்தினரின் வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதுடன், அரச துறையில் பணிபுரிந்த தமிழ் மக்களின் நிலையையும் கேள்விக்குறியாக்கியிருந்தது. இந்நிலையில், தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தன.

இந்நிலையில், இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பும் ஒப்பந்தம் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும் இடையே கைச்சாத்தானது.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்தவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஆயுதங்களை கைவிடச்செய்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும் இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஜூலையில் பெரிய விமானங்கள் மூலம் இந்திய அமைதிகாக்கும் படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பலாலி விமானத்தளத்தில் வந்து இறங்கினர். இந்தியப் படை தங்களை பாதுகாக்கும் என்ற நோக்கில் இலங்கை இராணுவம் ஆயுதங்களைக் கைவிட்டது. இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பினரிடம் உயர்தர தொழில்நுட்பங்கள் பொருந்திய ஆயுதங்களும், தகவல் தொடர்புச் சாதனங்களும் இருந்தன.



சாந்தன்



நளினி



முருகன்



ரொபர்ட் பயஸ்



ஜெயக்குமார்



ரவிச்சந்திரன்

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட மறுத்த நிலையில், ஈழப் போராளிகளுக்கும் - இந்திய அமைதிப்படைக்குமிடையே மோதல் வெடித்தது. விடுதலைப் புலிகள் கொரில்லாப் போர் முறையை கையாண்டனர்.

அமைதிகாக்கும் படையாக இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம், பாலியல் துஷ்பிரயோகம், சித்திரவதை, கொலை உட்பட பலவித மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் 21ஆம் திகதி யாழ்ப்பாண மருத்துவமனையில் மிகவும் கொடூரமான சம்பவங்களையும் அரங்கேற்றியிருந்தது. இருதரப்பு மோதலில் அமைதிப்படையைச் சேர்ந்த சுமார் 1,200 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் நிலையில், மோதலில் சிக்கிய இந்தியப் படை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளும் பதியப்படுகின்றன.

அத்தோடு 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதியாக அறியப்படும் தியாக தீபம் திலீபன் என அறியப்படும் பார்த்தீபன் இராசையா உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார். அவரின் உயிரிழப்புக்கும் இந்தியாவே காரணம் என்ற சினம் புலிகள் தரப்பில் இருந்தது.

இதுவே, ராஜீவ் கொலைக்கு அத்திவாரம் இட்ட சம்பவமாக பார்க்கப்படுகிறது.

இந்நேரத்திலேயே இந்தியாவில் அடுத்த தேர்தலுக்கான அச்சாரமும் இடப்படுகிறது. தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்துக்கு வருகிறார் ராஜீவ் காந்தி. சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது கடைகோடியில் இருந்த தமிழனும் ராஜீவை காண காத்திருந்த வேளை, ஆடம்பர காரில் வந்திறங்குகிறார் ராஜீவ். மாலை மரியாதையுடன் பிரசார மேடை நோக்கி ராஜீவ் காந்தி நடந்து சென்றுகொண்டிருந்தவேளை, தற்கொலை குண்டுதாரியொருவர் ராஜீவிடம் ஆசீர்வாதம் வாங்குவதுபோல் பாசாங்கு செய்து தன்னுடம்பில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்கிறார்.

ஆட்சி பலம் வேண்டி அடியவர்களை நாடிவந்த ராஜீவ் காந்தி மற்றும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள், பொதுமக்கள் உட்பட 18 பேர் உடல் சிதறி பரிதாபகரமாக கொல்லப்பட்டனர்.

1991 மே 21ஆம் திகதி ராஜீவ் காந்தியின் மறைவுநாள் வரலாற்றின் கறுப்பு எழுத்துகளால் பதியப்படுகிறது. சாட்சியங்கள் திரட்டப்படுகின்றன. கைதுகள் தொடர்கின்றன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள் அடிப்படையில் ராஜீவ் கொலை வழக்கில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ் ஆகிய எழுவர் சிறைப்படுகின்றனர். முதலில் மரணதண்டனை பின்னர் ஆயுள்தண்டனையென தண்டனை குறைப்பு செய்யப்பட்டு ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன.

31ஆண்டுகள்... வாழ்நாளின் அரைவாசி விட்டில்பூச்சிகளாய் இருட்டறைக்குள் கழித்துவிட, விடியல் பொழுது விரைகிறது விடுதலை செய்தி. எழுவருக்கும் அல்ல ஒருவருக்கு.

ஆம். 31ஆண்டுகளுக்குப் பின்னர் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நடத்திய



பாச, சட்டப் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்தது. 2022 மே மாதம் 18ஆம் திகதி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை பெற்றுவந்த எழுவருள் ஒருவரான பேரறிவாளனை இந்திய உச்ச நீதிமன்றம் தமது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்தது. அண்ணன் பேரறிவாளனின் விடுதலை எனும் செய்தி எஞ்சிய அறுவருக்கு ஆறுதல் அளித்தாலும், ஏக்கத்தையே கொடுத்தது.

இந்நிலையில், கடந்த வெள்ளியன்று (11ஆம் திகதி) விரைந்த செய்தி அவர்களுக்கு சாப விமோசனத்தை எட்டித்தந்துள்ளது. அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களை ஈன்றவர்களுக்குமே....

ஆம். இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை சம்பவத்தில் 31 வருடங்களுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துவந்த நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் மற்றும் ரொபர்ட் பயஸ் உட்பட அறுவரை கடந்த 11ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் விடுதலைசெய்து தீர்ப்பளித்திருக்கிறது. இதுவே அந்த சாப விமோசனச் செய்தி. விடுதலை பெற்ற அறுவரில் நால்வர் எம் ஈழநாட்டைச் சேர்ந்தவர்கள்.

நளினியின் கணவரான முருகன் என்றழைக்கப்படும் ஸ்ரீஹரன், சாந்தன் (தில்லையம்பலம் சுதேந்திரராஜா), ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரே அவர்கள்.

இவர்களில் சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் இலங்கை கடவுச்சீட்டைக் கொண்டவர்கள். ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் 1990ஆம் ஆண்டு தமிழகத்திற்கு பயணித்து, அங்கு அகதி அந்தஸ்தைப் பெற்றவர்கள்.

31 வருடங்களுக்குப் பின்னர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும், அவர்களால் தாயகம் திரும்ப முடியாத சட்டச்சிக்கலுக்குள்ளாகி தற்போது திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் தொடர்புபட்டவர்கள் என்பதால் இலங்கை அரசு அவர்களின் குடியுரிமையை அப்போதே இரத்துசெய்துவிட்டது. இதனால் அவர்களின் தாயகம் திரும்பும் கனவு தற்போது கேள்விகுறியாக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்திற்கு இலங்கை அரசு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக அறிவித்தாலும், இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தொடர்ந்து தடை அமுலிலுள்ளதுடன், சிலரை தடை செய்யப்பட்டோர் பட்டியலிலும் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்களால் இந்தியப் பிரதமர் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு, விடுதலையான இலங்கைப் பிரஜைகளால் நாட்டிற்கு மீள வர முடியுமா? ஒருவேளை, இலங்கைக்கு வருகை தரும் இவர்களை, விடுதலைப் புலிகளாக கருதி இலங்கை அரசு அவர்களை மீள கைது செய்யுமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள நால்வரும் விடுதலை பெற்றாலும் விசா இன்றி அந்நாட்டில் சுதந்திரமாக நடமாட முடியாது மீண்டும் சிறப்பு முகாமில் சிறைப்பட்டே இருக்கின்றனர்.

இந்நிலையில், விடுதலையான முருகன் இந்தியாவைச் சேர்ந்த நளினியை மணமுடித்துள்ள நிலையில், அவர் இந்தியாவிலோ அல்லது லண்டனிலுள்ள தனது மகளுடன் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எஞ்சிய சாந்தன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகிய மூவரும் இலங்கைக்கு வர விரும்புவதாக அறிவித்துள்ளனர். அவர்கள் தொடர்பான ஆவணங்கள் இந்திய அரசு சார்பில் இலங்கை அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதற்கு ஆவனஞ்செய்யுமா இலங்கை அரசு?

1991ஆம் ஆண்டு ராஜீவ் கொலை வழக்கில் கைதாகும்போது சாந்தன் என அறியப்படும் யாழ். உடுப்பிட்டியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜாவுக்கு 21 வயதே. வாழ்வில் விடியலைநோக்கி கடல்கடந்து சென்று கொலை வழக்கில் சிக்குண்டவர் 31 வருடங்கள் ஆயுளின் அரைவாசியை சிறைக்குள்ளேயே கழித்து, சிறையில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறுகதை, கவிதை, ஆய்வுக்கட்டுரைகள் என பல்வேறு நூல்களை எழுதியுள்ளதுடன், ஓர் எழுத்தாளனாகவும் தமிழ் பட்டதாரியாகவும் 52 வயதில் சிறை மீண்டுள்ளார்.

சாந்தன், கொலை வழக்கில் சிக்குண்டு சிறைப்பட்டார் என்ற செய்தியறிந்த அன்றிலிருந்து தூக்கம் மறந்து மூன்று வேளை உணவை ஒருவேளையாக்கிக்கொண்டு, மகன் மீண்டும் தன்னிடம் வந்து சேரவேண்டும் என கடவுளின் திருவடியில் சரணாகதியானார் தற்போது 75 வயதான தாய் தில்லையம்பலம் மகேஸ்வரி.

இன்று மகனின் விடுதலை செய்தி கேட்டு பூரித்துப்போயிருந்தாலும் பெற்றமகனின் உரு காண உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறாள் அந்த அப்பாவித் தாய்.

***“சாந்தன் அம்மாவுடன் இருந்த நாட்களில் ஒரு நாள் கூட 3 நேரமும் உணவு உண்டதில்லை.***

***வீட்டின் வருமானமே காலைவேளைகளில் வீடு வீடாகச் சென்று காலை உணவு விற்பதே.***

***அம்மாவுக்கு இருப்பது ஒரேயொரு ஆசை...***

***ஒரு தடவையாவது தன் பிள்ளைக்கு, மூன்றுவேளை உணவையும் வயிறார உண்ணக் கொடுக்க வேண்டும் என்பதே....”*** எனக் கூறும் மதிசுதா (சாந்தனின் சகோதரர்) அண்ணன் சாந்தனை நாட்டுக்கு மீள அழைப்பதற்கான கடிதமொன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

பதிலளிக்குமா இலங்கை அரசு? அந்த அப்பாவித் தாயின் 31 வருட தவம் கலையுமா? காத்திருப்போம்!!

**• கே.சுபானி**



# மாவீரர் நாளும் மறைக்கப்படும் உண்மைகளும்!

பா. அரியநேத்திரன்



எதிர்வரும் 2022, நவம்பர் 27 மாவீரர் நாளாகும், கடந்த 2020, 2021 ஆண்டுகளில் மாவீரர் தினத்தை நடத்த விடாமல் அப்போதைய ஜனாதிபதி பலத்த தடைகளையும் நீதிமன்ற தடை உத்தரவுகளையும் வழங்கி அச்சுறுத்தியது போலன்றி, இந்த வருடம் அவ்வாறில்லாமல் தற்போது துயிலும் இல்லங்களில் எல்லாம் சிரமதானப் பணிகளை பொதுமக்களும், தமிழ்த் தேசிய அரசியல் பிரமுகர்களும் முன்னெடுத்து வருகின்றனர்.

1960, ஜூன் 19இல் கம்பர் மலை, வடமராட்சி, யாழ்ப்பாணத்தில் பிறந்து 1978இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடிய செ.சத்தியநாதன் என்ற இயற்பெயரைக்கொண்ட சங்கர் ஈழப் போராட்டத்திலிருந்து முதலாவது வீரச்சாவை கடந்த 1982ஆம் ஆண்டு கார்த்திகை 27இல் தழுவிய தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் போராளியாவார்.

இவர் இறந்த நாளையே மாவீரர் நாளாக அறிவித்து ஒவ்வோராண்டும் அனைத்து இறந்த போராளிகளும் விடுதலைப் புலிகளால் நினைவுகூரப்படுகின்றார்கள். இவர் இறந்தது 27.11.1982 அன்று மாலை 6.05 ஆகும். சங்கர் என்பவரின் நினைவுநாளையே ஏழு வருடங்களின் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகன் மாவீரர் நாளாக கடந்த 1989 கார்த்திகை 27ஆம் திகதி பிரகடனப்படுத்தினார்.

முதலாவது மாவீரர் தினம் 1989, நவம்பர், 27இல் நினைவுகூரப்பட்டது.

அன்றைய தினமே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் முதலாவது மாவீரர் தின உரையும் உத்தியோகபூர்வமாக நிகழ்த்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து. 1989, கார்த்திகை 27ஆம் திகதியிலிருந்து மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஆனால், கடந்த 2008 கார்த்திகை 27 வரை இருபது வருடங்கள் மாவீரர் தினம் வடக்கு, கிழக்கிலுள்ள சகல துயிலும் இல்லங்களிலும் இடம்பெற்றதுடன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் 20 மாவீரர் தின உரைகள் இடம்பெற்றும் இருந்தன.

2009, மே 18இல் முள்ளிவாய்க்கால் போர் மௌனித்த பின்னர் 2009, நவம்பர் 27 தொடக்கம் எதிர்வரும் 2022, நவம்பர் 27 வரை 14 வருடங்கள் விடுதலைப் புலிகளால் மாவீரர் தினம் நினைவுகூரப்படாவிட்டாலும் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அந்த நிகழ்வை உணர்வுபூர்வமாக செய்து வருகின்றனர் என்பது உண்மை.



தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களின் கல்லறைகள் மற்றும் நினைவுக்கற்கள் போன்றனவற்றைன உள்ளடக்கிய பிரதேசம் மாவீரர் துயிலும் இல்லம் எனப்படும். இவற்றுள் 62 சதவீதமானவை விடுதலைப் புலிகளின் நிர்வாகம் இருந்த பகுதிகளிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 சதவீதமும், மட்டு., அம்பாறையில் 18 சதவீதமும், வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் 4 சதவீதமும் 2009, மே 18இற்கு முன்னர் இருந்தன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் தினமான நவம்பர் 27ஆம் திகதியன்று மாவீரர்களின் பெற்றோர் நினைவுக்கற்களுக்கும், கல்லறைகளுக்கும் ஈகைச்சுடர் ஏற்றுவர். அதேவேளை, அங்கு அமைந்திருக்கும் பொதுச் சுடரை இயக்கத் தளபதிகள் ஏற்றி வந்தனர். நவம்பர் 27 மாலை 6.05 மணிக்கு வணக்கத்தலங்களிலும் மணி ஒலி எழுப்பப்பெற்று சுடர் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் ஈகைச்சுடர் ஏற்றுவர். 2009, மே 18இல் முள்ளிவாய்க்கால் போரில் மௌனித்த பின்பு இந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் பெரும்பாலானவை இலங்கை படைத்துறையால் அழித்தொழிக்கப்பட்டன.

இதுவரை வடக்கு, கிழக்கு நிலப்பரப்பில் மொத்தமாக 33 மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்தன. 2008, நவம்பர் 27இற்கு முன்னர் 27 துயிலும் இல்லங்கள் மட்டுமே இருந்தன ஆனால், 2008, நவம்பர் 27 தொடக்கம் 2009, மே 18 வரையும் உக்கிரமான போர் வன்னி நிலப்பரப்பில் ஏற்பட்டபோதே மேலதிகமாக 06 துயிலும் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**மாவீரர் துயிலும் இல்லங்கள் விபரம்**

**யாழ்ப்பாணம் மாவட்டம் (05)**

சாட்டி தீவகம் மாவீரர் துயிலும் இல்லம், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம், எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம், உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய ஐந்து துயிலும் இல்லங்களும்,

**கிளிநொச்சி மாவட்டம் (03)**

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களும்,

**முல்லைத்தீவு மாவட்டம் (05)**

முள்ளியவளை துயிலும் இல்லம், அளம்பில் துயிலும் இல்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், களிக்காடு (நெடுங்கேணி) மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய ஐந்து துயிலும் இல்லங்களும்,

**மன்னார் மாவட்டம் (02)**

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய இரண்டு துயிலும் இல்லங்களும்,

**வவுனியா மாவட்டம் (01)**

ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லமும்



**மணலாறு பிரதேசம் (2)**

உதயபீடம் (டடி முகாம்) மாவீரர் துயிலும் இல்லம், இதயபீடம் (ஜீவன் முகாம்) மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய இரண்டு துயிலும் இல்லங்களும்,

**திருகோணமலை மாவட்டம் (4)**

ஆழங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், தியாகவனம் மாவீரர் துயிலும் இல்லம். பெரியகுளம் மாவீரர் துயிலும் இல்லம், உப்பாறு மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய நான்கு துயிலும் இல்லங்களும்,

**மட்டக்களப்பு மாவட்டம் (4)**

தரவை மாவீரர் துயிலும் இல்லம், தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம், வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லம், மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய நான்கு துயிலும் இல்லங்களும்,

**அம்பாறை மாவட்டம் (1)**

கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலும் இல்லமுமாக மொத்தம் 27 துயிலும் இல்லங்கள் மட்டுமே 2008 இறுதிவரை இருந்தது. இருந்தன.

**போர் உக்கிரமானபோது அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் (6) விபரம் வருமாறு;**

தர்மபுரம் மாவீரர் துயிலும் இல்லம், சுதந்திரபுரம் மாவீரர் துயிலும் இல்லம், இரணைப்பாளை மாவீரர் துயிலும் இல்லம், பச்சைப்புல்வெளி மாவீரர் துயிலும் இல்லம், கரையா முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம், வெள்ளா முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய ஆறு துயிலும் இல்லங்களும் இறுதிப்போர் 2009, மே,18 வரை அமைக்கப்பட்டன. எல்லாமாக மொத்தம் 33 துயிலும் இல்லங்களில் இதுவரை ஏறக்குறைய ஐம்பதாயிரம் மாவீரர்களின் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதாக அறியமுடிகிறது.

அதேவேளை, வடக்கு, கிழக்கிற்கு வெளிமாவட்டங்களிலும், கடல் சமர்களில், கரும்புலிகள் என மரணித்தவர்களின் நினைவுக்கற்களும் இந்தத் துயிலும் இல்லங்களில் அவர்களின் பெயர் குறிப்பிட்டு நடப்பட்டிருந்தமையையும் அப்போது காணமுடிந்தது.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கடந்த 27/11/1982 தொடக்கம் 30/09/2001 வரை உயிர்நீத்த மாவீரர்கள் 17,648 பேர் என விடுதலைப் புலிகளால் கடந்த 2001, செப்டெம்பர் 30இல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், 2009, மே 18 வரை உத்தியோகபூர்வமாக உயிர்நீத்தவர்களின் விபரம் வெளியிடப்படாதபோதும் ஏறக்குறைய ஐம்பதாயிரம் பேர் எனக் கூறப்படுகிறது.

தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி, இஸ்லாமிய இளைஞர்களும் 1990இற்கு முன்னர் 45 பேர் அப்போது விடுதலைப் புலிகளால் மாவீரர்களாக அறிவிக்கப்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகளால் அவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டன. இந்த 45 பேரை விடவும் இன்னும் சிலர் இருந்திருக்கலாம்.

| | பெயர் | இடம் | இறப்பு |
|---|---|---|---|
| 01 | ஜுனைதீன் | ஓட்டமாவடி | 30.11.1985 |
| 02 | லத்தீப் முகமது அலியார் | காத்தான்குடி | 24.12.1986 |
| 03 | நசீர் முகமட் நசீர் | காங்கேயன்ஓடை | 30.12.1987 |
| 04 | சாபீர் சரிபுதீன் முகமட் சாபீர் | தியாவெட்டுவான் | 13.05.1988 |
| 05 | முகமது உசைதீன் | ஓட்டமாவடி | 05.08.1989 |
| 06 | ஆதம் எஸ்.எம்.ஆதம்பாவா | சாய்ந்தமருது | 03.01.1990 |
| 07 | அகமட் றியாஸ் | மருதமுனை | 04.05.1990 |
| 08 | கபூர் முகமதுஅலியார் முகமதுசலீம் | காங்கேயனோடை | 11.06.1990 |
| 09 | தாகீர் முகைதீன்பாவா அன்சார் | பொலன்னறுவை | 01.06.1990 |
| 10 | கரீம் முஸ்தபா | ஓட்டமாவடி | 12.06.1990 |
| 11 | தௌபீக் இஸ்மாயில் | ஓட்டமாவடி | 12.06.1990 |
| 12 | ஜிவ்றி முகம்மது இலியாஸ் | வாழைச்சேனை | 13.06.1990 |
| 13 | அகமட் | ஓட்டமாவடி | 14.06.1990 |
| 14 | ஜலீம் முகமது இஸ்மாயில் மன்சூர் | ஏறாவூர் | 01.09.1990 |
| 15 | மஜீத் முகமது இஸ்காக் கூப்சேக்அலி | மீராவோடை | 18.06.1990 |
| 16 | லெப்பைதம்பி செய்னூர் | ஓட்டமாவடி | 19.06.1990 |
| 17 | அகமதுலெப்பை முகமது கனீபா | அக்கரைப்பற்று, | 07.01.1987 |
| 18 | யுனைதீன் | அட்டாளைச்சேன | 26.06.1988 |
| 19 | சம்சுதீன் அபுல்ஹசன் | அக்கரைப்பற்று | 27.10.1988 |
| 20 | சம்சுதீன் நசீர் | ஒலுவில் | 17.02.1989 |
| 21 | நாகூர்தம்பி பாயிஸ் ஆதாம்லெப்பை | அககரைப்பற்று | 22.06.1989 |
| 22 | ஜபார் ஜாபீர் | அட்டாளைச்சேனை | 06.12.1989 |
| 23 | மீராசாகிபு காலிதீன் | சாய்ந்தமருது | 06.12.1989 |
| 24 | அகமட் லெப்பை செப்லாதீன் | அம்பாறை | 25.05.1990 |
| 25 | முகமது ரபீக் | பொத்துவில் | 15.06.1990 |
| 26 | மாப்பிள்ளை லெப்பை அல்வின் | இறக்காமம் | 16.06.1990 |
| 27 | அபுசாலி புகாரி | அக்கரைப்பற்று | 15.07.1990 |
| 28 | முகமது அலிபா முகமது ஹசன் | திருகோணமலை | 28.04.1987 |
| 29 | ஆதம்பாவா ஹசன் | திருகோணமலை | 05.11.1989 |
| 30 | நைனா முகைதீன் நியாஸ் | திருகோணமலை | 06.02.1990 |
| 31 | ஆப்தீன் முகமட் யூசுப் | திருகோணமலை | 15.06.1990 |
| 32 | நியாஸ் | மூதூர் | 17.06.1990 |
| 33 | கச்சுமுகமது அபுல்ஹசன் | திருகோணமலை | 14.06.1990 |
| 34 | கனீபா முகமதுராசீக் | திருகோணமலை | 22.06.1990 |
| 35 | அப்துல நசார் | திருகோணமலை | 27.07.1990 |
| 36 | அப்துல்காதர் சாதிக் | யாழ்ப்பாணம் | 25.08.1986 |
| 37 | ரகீம் | யாழ்ப்பாணம் | 08.05.1986 |
| 38 | ரகுமான் | யாழப்பாணம் | 08.05.1986 |
| 39 | சலீம் | யாழ்ப்பாணம் | 03.07.1987 |
| 40 | கமால் | மட்டக்களப்பு | 07.06.1990 |
| 41 | அப்துல்காதர் சம்சி | காத்தான்குடி | 13.06.1990 |
| 42 | அன்வர் | அட்டாளைச்சேனை | 15.06.1990 |
| 43 | கபீர் | அம்பாறை | 15.06.1990 |
| 44 | அப்துல்மானாப் முகம்ம துநசீம் | கிண்ணியா | 25.07.1986 |
| 45 | மொகமட் மூதூர் | திருகோணமலை | 25.07.1986 |

முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளில் இணைந்து போராடியதை சகித்துக்கொள்ளாத அரசுகள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளும் தந்திரமாகவே 1990இல் முஸ்லிம் ஊர்காவல் படையினரை உருவாக்கி தமிழர்களுக்கு எதிராக பல கொலைகள் அரங்கேறின. கிழக்கில் முஸ்லிம் - தமிழ் உறவைப் பிரித்த வரலாறு சிங்கள ஆட்சியாளர்களாலேயே அரங்கேற்றப்பட்டதென்பது மறுதலிக்க முடியாத உண்மை. இதன் எதிரொலிகளாகவே காத்தான்குடி பள்ளிவாசல், ஏறாவூர் என முஸ்லிம் மக்கள் படுகொலைச் சம்பவங்களும், யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

மாவீரர் தினத்தில் வடக்கு, கிழக்கிற்கு வெளியே கொழும்பு தலைநகரை அண்டிய ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே இலங்கையின் சட்டம் இயற்றும் உயர் சபையான இலங்கை நாடாளுமன்றத்தின் வளாகத்திலும் சரித்திரத்தில் முதல் தடவையாக மாவீரர்களை விளக்கேற்றி அஞ்சலி செய்த வரலாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு.

ஆம். கடந்த 2004, நவம்பர் 27ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்திற்கு முன்பாக அன்று 6.05 மணியளவில் 22 சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி வணக்கம் செலுத்தப்பட்டதுடன், சம்பந்தன் ஐயா மாவீரர்கள் தொடர்பாக கருத்துரையும் தெரிவித்திருந்ததார். இந்தச் செய்தி அப்போது பரப்பாக ஊடகங்களில் மறுநாள் வெளிவந்தன. இந்த நிகழ்வில் நானும் (பா.அரியநேத்திரன்) அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றினேன்.

27/11/2009 தொடக்கம் துயிலும் இல்லங்களை இராணுவத்தினர் தன்னகப்படுத்தியதால் வடக்கு, கிழக்கு தாயகத்தில் சில வருடங்கள் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றாதபோதும், மாவீரர் தின உரை இடம்பெறாவிட்டாலும் தமிழ்மக்கள் ஏதோவொரு வகையில் வணக்கம் செலுத்தி வந்துள்ளனர். இராணுவத் தடைகளை மீறியும் பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், முன்னாள் போராளிகள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தாமல் விடவில்லை. ஆனால், புலம்பெயர் தேசமெங்கும், மத்தியகிழக்கு நாடுகளிலும், எமது அயல்நாடான தமிழ்நாட்டிலும் உலகத்தில் பரந்துவாழும் உறவுகள் மிகவும் எழுச்சியாக நினைவுகூர்ந்து வருகின்றனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 27இலும் இம்முறையும் வழமைபோன்று அனுஷ்டிப்பு இடம்பெறும்.

# தலைமைத்துவத்திற்கு தகுதியில்லாதவர் ஹக்கீம்!

## ஹசன் அலி சொல்கிறார்




**நேர்கண்டவர் :**
**நூருல் ஹுதா உமர்**
*(மாளிகைக்காடு செய்தியாளர்)*


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் மிக நீண்டகாலம் செயலாளர் நாயகமாக பதவி வகித்து இப்போது ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமாக பதவி வகித்து வரும் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரீ.ஹசன் அலி 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய சமகால முஸ்லிம் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான விசேட செவ்வி பின்வருமாறு...

**Q: முஸ்லிம் தலைவர்களினால் கைவிடப்பட்ட நிலையிலுள்ள கரையோர மாவட்டக் கோரிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கரையோர மாவட்டக் கோரிக்கையை தலைவர் அஷ்ரப் முதன்மைப்படுத்தி வைத்திருந்தார். தலைவரின் மரணத்தின் பின்னர் வந்த தலைவர்கள் அந்த கோரிக்கையைப் பற்றி எங்காவது பேசினார்களா அல்லது வலியுறுத்தினார்களா என்றால் இல்லை. அது ஏட்டுச் சுரைக்காய், அது சாத்தியமாகாது என்று மக்களை மறக்கடித்ததை தவிர அவர்கள் வேறு எதுவும் செய்யவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் சம்மாந்துறையில் நடந்த கூட்டமொன்றில் இது விடயமாக நான் பேசிவிட்டு அமர்ந்தவுடன் என்னைத் தொடர்ந்து பேசிய கட்சி பிரமுகர் ஒருவர் "இது ஏட்டுச்சுரைக்காய், பயன்படுத்த முடியாது" என்றார். இப்படித்தான் இருக்கிறது இவர்களின் கரையோர மாவட்ட கோரிக்கையின் நிலைமை. இப்போது அந்த விடயம் மேலெழ ஆரம்பித்துள்ளது. காரணம் என்னவெனில் தமிழ் மக்கள் முன்வைத்திருக்கும் 'மீளப்பெற முடியாத சமஷ்டியுடன் வடகிழக்கு இணைப்பு' எனும் கோரிக்கையாகும். இவ்வாறான காய் நகர்த்தல்களின்போது முஸ்லிம்கள் என்ன செய்யவேண்டும் என்பதை தலைவர் அஷ்ரப் அப்போதே கூறி வைத்து விட்டார். இப்போதாவது கரையோர மாவட்டத்தை முஸ்லிம் தலைவர்கள் கோருவார்களா, இல்லையா என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். என்னை மு.காவிலிருந்து ஓரங்கட்டக் காரணம் இந்த கரையோர மாவட்ட தேவையை அதிகமாக பேசியதே எனலாம். எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒப்பந்தங்களில் இந்த கோரிக்கையை முன்மொழிந்து வந்தேன். தலைவர் அஷ்ரப்பும் நாட்டின் தலைவர்களுடன் இது விடயமாக ஒப்பந்தங்கள் செய்தார். இது தொடர்பில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக மலையகத் தலைவர் தொண்டமானுடனும் ஒப்பந்தம் செய்தார்.

எல்லா சிங்களத் தலைவர்களினது மனதிலும் அஷ்ரப் இந்தக் கரையோர மாவட்ட எண்ணத்தை விதைத்தார். தமிழ்த் தலைவர்களும் இது தொடர்பிலான எத்தனையோ ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர். இப்படியான முக்கியமான விடயத்தை இவர்கள் முழுமையாக மறந்துவிட்டார்கள். தலைவர் அஷ்ரப் காலமானது முதல் மூன்று காங்கிரஸ்களினது தலைவர்களும் எந்த அரசாங்கம் வந்தாலும் அரசின் பக்கம் இவர்கள் இருந்து கொண்டேதான் இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு அநியாயம் நடக்கிறது என்று கூறும் இவர்கள் அநியாயம் நடக்கும்போது அரசுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள். இந்த அநியாயங்கள் நடக்க காரணம் இவர்கள்தான். இவர்களினால் முஸ்லிம் சமூகம் அடைந்த நன்மை என்ன?

**Q: 'மீளப்பெற முடியாத சமஷ்டி உடைய இணைந்த வடகிழக்கு' பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

நாட்டிலுள்ள சகல இனங்களும் தேசிய இனங்களாக நாட்டின் யாப்பை ஏற்றுக்கொண்டு உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நாட்டைப் பிரிக்க எண்ணவில்லை. இப்போது எமது நாட்டில் எல்லாமே இனவாதமாக மாறியுள்ளது. அதை யாரும் மறுக்க முடியாது. அதனால் தான் கொள்கை மாற்றம் கேட்கிறோம். அதன் பின்னர் நாடு சுமுகமானால் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி கொள்கையை மாற்றிக்கொள்வது பற்றி சிந்திக்கலாம். இப்போது இவர்கள் கூறும் கொள்கை மாற்றத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அவர்களின் கொள்கை பிரகடனத்தை முன்வைக்கிறார்கள். 'மீளப்பெற முடியாத சமஷ்டி உடைய இணைந்த வடகிழக்கு' எனும் தமிழ் மக்களின் வாதம் எவ்வளவு கடுமையானது! இந்த வடக்கு கிழக்கில் தான் நாம் செறிவாக இருக்கிறோம். எங்களின் தலைமைகள் அது பற்றி இன்னும் மூச்சுக்கூட விடவில்லை. தலைவர் அஷ்ரப் இந்த விடயத்தில் தெளிவாக இருந்தார். அதனால்தான் இணைந்த வடகிழக்கில் நிலத்தொடர்பற்ற தென்கிழக்கு அலகை கோரினார். இதில் தமிழர்களோ அல்லது சிங்களவர்களோ பாதிக்கப் போவதில்லை.

இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் எங்களின் தேவைகளை நாங்களே பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக் கிட்டும். இப்போது இருக்கும் தலைவர்கள் கரையோர மாவட்டம், முஸ்லிம் உரிமைகள், தனியலகு என்றெல்லாம் பேச முன்வர மாட்டார்கள். கண்டியை சேர்ந்த தலைவருக்கு சிங்கள வாக்குகளே வெற்றியை தீர்மானிக்கும். அதனால் வாய்திறக்க மாட்டார். நாங்களும் உரிமைசார் அரசியலை செய்ய வேண்டும். உரிமைசார் அரசியலில் தமிழ் சமூகம் எங்கயோ போய்விட்டது. நாங்கள் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. கிழக்கு முஸ்லிம்கள் ஒன்றிணைந்து மாமூல் அரசியலை ஓரங்கட்டி அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டும். பெருந்தேசிய கட்சிகளின் 'அஜந்தாக்களுக்கு' (நிகழ்ச்சி நிரலுக்கு) ஆடும் தலைவர்களின் தலைமைத்துவத்தை நாங்கள் இனியும் ஏற்க முடியாது. முஸ்லிம் வாக்குகளினால் அதிக முஸ்லிம் உறுப்பினர்களை அனுப்பும் கிழக்கைச் சேர்ந்த நாங்கள் நிலம்சார்ந்த அரசியலை முன்னெடுப்பதில் பிழையில்லை என்று கருதுகிறேன்.

**Q: முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் கிழக்கில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

இப்போதைய தலைவர்கள் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கை சேர்ந்தவர்கள் அல்ல. அதனால் அவர்களுக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் விளங்குவதில்லை. இவர்களுக்கு தலைமைத்துவத்தை 22 வருடங்கள் கிழக்கு மக்களாகிய நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறோம். அதனைக் கேட்பதால் நாங்கள் பிரதேசவாதிகளாக அடையாளப்படுத்தப்பட முடியாது. கிழக்குக்கு தரமாட்டோம் என்று விடாப்பிடியாக இருந்து கொண்டிருப்பதே பிரதேசவாதம் என்று பார்க்கிறேன். இலங்கை வாழ் வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறு. அரசியல் அதிகாரம் என்பது நிலத்தொடர்பு கொண்டது. வடகிழக்குக்கு வெளியே நிலத்தொடர்பு இல்லாத முஸ்லிம்களின் வாழ்வியலே காணப்படுகின்றது. அவர்களின் அரசியல் நிலைப்பாடு வேறு. முழுமையான முஸ்லிம்களின் வாக்குகளினால் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் கிழக்கில் மட்டும்தான் இருக்கிறது. வடகிழக்குக்கு வெளியே எங்குமில்லை. வடகிழக்கு மாகாணத்திற்கு வெளியே மு.கா. மற்றும் ம.கா. சொந்த சின்னத்தில் போட்டியிட்டு எந்த இடத்திலும் வெல்லவுமில்லை.

மலையகத் தமிழர்களை தனித்தேசிய இனமாக பிரகடனம் செய்ய வடிவேல் சுரேஷ் கோரிக்கை விடுத்திருக்கிறார். முஸ்லிம்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிக்க செய்ய எந்த தலைவர்களும் எவ்வித முயற்சிகளும் செய்யவில்லை. அஷ்ரப் அதனை தொடர்ந்தும் வலியுறுத்தினார். இப்போதைய தலைவர்கள் சிங்களவர்களுக்கு சாமரம் வீசும் வேலைகளையே செய்து வருகிறார்கள். கிழக்கில் யாராவது அமைச்சரானால் பொய்யான அல்லது ஏதாவது நாடகத்தை முன்வைத்து கட்சியை விட்டு விலக்கும் பழக்கத்தை ஹக்கீம் கொண்டுள்ளார். அதாஉல்லாஹ், பஷீர் சேகுதாவூத், ஹிஸ்புல்லாஹ், ஹாபீஸ் நஸீர் என அந்த பட்டியல் நீள்கிறது. அதில் ஹரீஸும் இணைந்துவிடுவார் என்ற பயம் அவருக்கு இப்போது வந்திருக்கிறது.

**Q: முஸ்லிம்களுக்கு உள்ள காணிப்பிரச்சினைகள் தொடர்பில் உங்கள் பார்வை என்ன?**

கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு வித்தியாசமானது. கிழக்கில் பிறந்தவர்களுக்கே கிழக்கின் பிரச்சினைகள் தெரியும். கடந்த யுத்த கால இழப்புகளில் ஒரு வீதமாவது அனுபவிக்காதவர்கள்தான் இவர்கள். அகதியாக வெளியானதாக கூறும் ரிஷாத் பதியுதீனையும் ஏனைய அகதிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள் பல உண்மைகள் விளங்கும். கிழக்கு மக்களை முதன்மைப்படுத்தி முஸ்லிம்களின் உரிமைகளை பெற வேண்டும். எம்.ஐ.எம். முஹைதீனின் ஆய்வின்படி வடகிழக்கு முஸ்லிம்கள் 62 ஆயிரம் ஏக்கர் காணிகளை இழந்துள்ளோம். இது தொடர்பிலான நிறைய தகவல்கள் என்னிடமிருக்கின்றன. இது தொடர்பில் வெளிக்கொண்டு வந்தால் தலைவர்கள் கோபிக்கிறார்கள். இனப் பிரச்சினையை தீர்க்காதோர், அகதிகளுக்கு காணி வழங்காதோர், 15 இலட்சம் வீடுகளை கட்டித்தருவோம் என்ற வாக்குறுதிகளை நிறைவேற்றாதோர், கண்டியில் முஸ்லிம் பாடசாலை பெற முடியாதோர், ஆளுநர் பாக்கீர் மாக்காருக்கு பதில் முஸ்லிமை நியமிக்காதோர், முஸ்லிம் விவாகச் சட்டத்தின் தனித்துவத்தில் கைவைக்க முனைவோர் எம்மை சேர்ந்தவர்களும் அல்ல எமது வாக்குகளும் அவர்களுக்கு அல்ல என தலைவர் அஷ்ரப் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார். அந்த நிலைப்பாட்டில்தான் நாங்களும் இருக்கின்றோம்.

**Q: கிழக்கு வாக்காளர்கள் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

கிழக்கு மக்கள் மாமூல் அரசியலிலிருந்து விலக வேண்டும். அடுத்துவரும் 10 வருடங்களுக்காவது கிழக்கு மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டும். தேசிய கட்சிகளுடன் முஸ்லிம்கள் பயணிப்பது சிறந்ததல்ல. தேசிய உணர்வுகள் முதன்மையானவைதான். ஆனால், இலங்கையிலுள்ள தேசிய உணர்வுகள் இனங்களை முன்னிலைப்படுத்தியதாக அமைந்துள்ளன. இங்கிலாந்தில் சிறுபான்மையினத்தை சேர்ந்தவர் பிரதமராக வந்துள்ளார். ஆனால், இலங்கையில் அது சாத்தியமாகுமா? இது விடயமாக பௌத்த மதகுருக்களிடமும் பேசியிருக்கிறேன். நாட்டின் தலைமைக் கதிரைகளில் சிறுபான்மையினத்தவர் எப்போது அமர வாய்ப்பு கிடைக்கிறதோ அப்போதுதான் நாடு ஒளிபெறும். யாப்பில் இன ரீதியான பாகுபாடுகள் இல்லை. ஆனால், மரபு ரீதியாக இது பயன்பாட்டில் இருக்கிறது.

பெரும் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிக்கும்போது உரிமைகளை சரியாக பெற முடியாது. அவர்கள் பெரும்பான்மை இன வாக்குகளை கவரவே முயற்சிப்பார்கள். ஜனாதிபதி வாக்கெடுப்புக்கு முன்னர் ரணிலுக்கு ஆதரவாக விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கை மக்கள் மத்தியில் விமர்சனமானது. ஆனாலும், அமைச்சரவையில் அங்கம் வகிக்கமாட்டேன் என்ற கூற்று சமூகம் சார்ந்ததாக அமைந்திருந்தது. அமைச்சரவை அமைச்சர் நாட்டின் அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அமைச்சராக இருந்து கொண்டு சிறுபான்மையினரின் உரிமைகளை பெற முடியாது என்ற அவரின் கூற்று வலிமையானது. இந்த தெளிவான பார்வை முஸ்லிம் தலைவர்களிடம் இல்லை. அவர்கள் அரசியல் செய்வதே அமைச்சர் கதிரைகளை நோக்கித்தான். அரசுடன் இணைந்து நன்மைபெறுபவர்கள் கொந்தராத்து செய்பவர்கள், அபிவிருத்தியில் சுரண்டல் செய்பவர்கள், தொழில் வாய்ப்புகளை விற்பவர்கள், மக்களின் பணத்தை சுரண்டி மக்களுக்கே கொடுத்து வாக்கு பெறுபவர்கள்தான்.


தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவென்றவர்கள் பின்னர் அது தொடர்பில் எதையும் செய்வதில்லை. மு.கா தலைவர் ஹக்கீம் நகர திட்டமிடல் அமைச்சராக இருந்து கொண்டு அம்பாறை மாவட்டத்தை அரபு நாடுகள் போல மாற்றுவதாகவெல்லாம் மேடைகளில் சூளுரைத்தார். ஆனால், இறுதியில் எல்லாம் புஸ்வாணமானது. ஒரு கல்லைக்கூட நடவில்லை. கிழக்கு மக்களை மடையர்களாக எண்ணிக்கொண்டே இவர்கள் அரசியல் செய்கிறார்கள். தமிழ் தலைவர்கள் ஜனாதிபதியின் ஆதரவுடன் காணிகளை மீட்க ஆணைக்குழு நியமிக்கும் பணியில் இறங்கியுள்ளார்கள். ஆனால், முஸ்லிம் தலைவர்கள் உறக்கத்தில் இருக்கிறார்கள்.

பிரதேச சபை தேர்தல் வரும் முன்னரே அரசியல் வியாபாரத்தை முஸ்லிம் கட்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டன. இனி மாநாடுகள் நடக்கும். அதன் பின்னால் முஸ்லிம் இளைஞர்கள் இழுபட்டு செல்வார்கள். இப்போது விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும், மேலங்கிகளும் வழங்கினால் தேர்தலுக்கு பணியாளர்கள் தயார் எனும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலை மாற வேண்டும். நாங்கள் இளைஞர்களாக இருக்கும்போதுதான் சமூக விடுதலைக்காக உயிர்களை பணயம் வைத்து மு.காவை ஆரம்பித்தோம். இப்போது உள்ள பிராந்திய தலைவர்களிடம் சமூக நோக்கு இல்லாமல் போனதாலேயேதான் இந்நிலை உருவாகியுள்ளது. இதில் மாற்றத்தை கொண்டுவர ஐக்கிய சமாதான கூட்டமைப்பை எதிர்வரும் தேர்தலில் நாட்டின் சகல பாகங்களிலும் களமிறக்க தயாராகி வருகிறோம். இந்த முயற்சி தோல்வியடைந்தாலும் பரவாயில்லை. மக்கள் மாற வேண்டும் என்று நினைக்கிறோம்.

**Q: மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

தலைமைத்துவத்திற்கு தகுதியில்லாதவர் அவர். கிழக்கு அரசியல்வாதிகளும், மக்களும் அரசியல் சக்தியாக மேலெழுந் துவிடக்கூடாது என்பதில் ஹக்கீம் எப்போதும் விடாப்பிடியானவர். கிழக்கில் உள்ள ஒவ்வொரு ஊரும் பிரதேசவாதத்தை கொண்டுள்ளதால் அது ஹக்கீமுக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது. கிழக்கிலிருந்து தலைவர் ஒருவர் வெளிப்பட்டால் அதை கிழக்கின் மற்றுமொரு ஊர் விரும்புவதில்லை இதில் தலைவர் அஷ்ரப் தனது தனிப்பட்ட ஆளுமைகளின் வெளிப்பாட்டால் பிரகாசித்தார். கிழக்கிலிருந்து ஒரு தலைமைத்துவம் பிரகாசித்தால் அவரை உடனடியாக பல்வேறு சதித்திட்டங்களை தீட்டி ஹக்கீம் வெளியேற்றிவிடுவார். அதாஉல்லாஹ், பஷீர், ஹிஸ்புல்லாஹ், நான் (ஹசன் அலி), இப்போது ஹரீஸ் எனப் பட்டியல் நீள்கிறது.




PARLIAMENT

2016.12.16

M.H.M. Salman
Member of Parliament

கட்சியிலிருந்து நான் வெளியேறக் காரணம் தேசிய பட்டியல் விவகாரமும் செயலாளர் பதவி சர்ச்சையுமே. எனக்கு வழங்கிய வாக்குறுதிகளை அப்பட்டமாக ஹக்கீம் மீறினார். அதிகாரம் பொருந்திய செயலாளர் பதவியை தருவதாக பல இடங்களிலும் வைத்து வாக்குறுதி வழங்கிவிட்டு பின்னர் வெற்றுத் தவிசாளர் பதவியை வழங்கப் போவதாக கூறினார். எனது பதவிக்கான அதிகாரங்களை பிரித்து பங்கிட்டு கட்சிக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்தார். இது உயர்பீடத்திலும் பல்வேறு முரண்பாடுகளை தோற்றுவித்தது. எனது பக்கம் நின்று நிறைய உறுப்பினர்கள் நீதிக்காக போராடினார்கள்.

நான் செய்யவேண்டிய கடமை, பொறுப்புகளை வேறொருவருக்கு தற்துணிவு அதிகாரத்துடன் வழங்கி சமாளிப்புகள் செய்தாலும், அது சட்டப்படி பிழையானதாக அமைந்தது. பின்னர் எங்களின் கட்சியை சேர்ந்த பலரும் வந்து என்னுடன் பல்வேறு விடயங்களை முன்வைத்து பேச்சுவார்த்தைகள் செய்தனர். அது தோல்வியிலேயே முடிந்தது. தேர்தல் திணைக்களத்தில் இதுதொடர்பிலான விடயம் ஆராயப்பட்டு அவர் சட்டப்படி என்னுடைய விடயத்தில் முரண்பாடாக நடந்துள்ளார் என்பது நிரூபணமானது.

அதனால் கடந்த காலங்களில் நான் செய்திருந்த அர்ப்பணிப்பு மிக்க கட்சிப்பணிகளை நன்றாக அறிந்து வைத்திருந்த தேர்தல் ஆணையாளர் எனக்கு நீதிமன்றத்தை நாட ஆலோசனை வழங்கியிருந்தும் கூட நான் கட்சியை நீதிமன்றப் படியேற்ற விரும்பவிலை.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் திணைக்கள சமரசப் பேச்சுவார்த்தைக்கு கூட நிறைய இழுத்தடிப்புகளை செய்தார். எனது பிரச்சினையினால் கட்சி தேர்தலை சந்திப்பதில் சிக்கல் இருப்பதால் இறுதியில் சமரசம் செய்ய முன்வந்து கட்சியின் பிரதித்தலைவர் யூ.டி.எம். அன்வரின் வீட்டில் வைத்து (இறைவனை தொழுது விட்டு) பல்வேறுபட்ட வாக்குறுதிகளையும், சத்தியங்களையும் செய்தார். தேர்தல் அலுவலகத்தில் வைத்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் இராஜினாமா கடிதத்தையும் என்னிடம் கையளித்தார். எனது நேர்மை, அர்ப்பணிப்பு, கட்சிப்பணி தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஹக்கீமுக்கு மிக ஆழமாக தேர்தல் திணைக்களத்திற்கு வரவழைத்து விளக்கினார். அவர் வழங்கிய வஹ்தாக்கள் ஒன்றும் இறுதியில் நடக்கவில்லை. தான் ஒரு முனாபிக் என்பதைக் காட்டினார். இதுபோல தான் நிறைய பேருக்கு அநியாயம் செய்துள்ளார். அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களே அவரது தனிப்பட்ட குண இயல்புகளில் அதிருப்தியான நிலையில் இருக்கும்போது நாங்கள் எப்படி அவரை தொடர்ந்தும் நம்ப முடியும்?

இறுதியாக உயர்பீடத்தில் ஐந்து நிமிடம் பேச வாய்ப்பை உருவாக்கி கிழக்குக்கு வரவேண்டிய அமைச்சுப் பதவி வழங்காமல் ஏமாற்றப்படும் விடயம், செயலாளருக்கு உள்ள அதிகாரங்கள், கிழக்கு மக்களின் உரிமைகள் மறுக்கப்படும் விடயங்களை சபைக்கு விளக்கினேன். உடனடியாக எழுந்த ஹக்கீம் கொந்தளித்தார். ஓர் உறையில் இரண்டு கத்திகளை வைக்கமுடியாது. மு.கா. சார்பில் நான் மட்டுமே அமைச்சராக இருக்கவேண்டும் என்ற தொனிப்பட கருத்து வெளியிட்டார். அந்த நிமிடமே சலாம் கூறி அங்கிருந்து வெளியேறினேன். உலமாக்கள் அடங்கலாக பலரையும் எனது வீட்டுக்கு அழைத்து வந்து அவர் முன்வைத்த எந்த விடயங்களையும் நான் செவியேற்கவில்லை. 76 வயதாகும் நான் சுமார் 52 ஆண்டுகள் அரசியலில் இயங்கி வருகிறேன். சமூகத்தை விற்க ஒருபோதும் துணைபோனதில்லை.

**கிழக்கு தலைமைத்துவம் தொடர்பிலும் ஹரீஸின் அரசியல் போக்குகள் தொடர்பிலும் உங்கள் பார்வை என்ன?**

அது அவர்களின் தனிப்பட்ட விடயம். பகிரங்கமாக நான் கருத்து சொல்ல முடியாது. இருந்தாலும் ஹரீஸ் என்னை சந்தித்து என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் போதெல்லாம் ஹரீஸுக்கு ஆலோசனை




வழங்கியிருந்தேன். அவரை தலைமைத்துவம் ஏற்கும்படியும் அவருக்கு பின்னால் சென்று அவரை பலப்படுத்தவும் தயாராக இருந்தேன். அதை அவரின் முகத்திற்கு நேரிலேயே கூறினேன். இன்றைய அரசியல் அரங்கில் தலைமைத்துவத்திற்கு தகுதியானவராக ஏனையோரை விட ஹரீஸை பொருத்தமானவராக காண்கிறேன். ஆனாலும், அவரிடம் தாழ்வுச்சிக்கல் இருப்பதை அவதானித்தேன். நாங்கள் தயாராக இருக்கிறோம். முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் கூட தயாராக இருக்கிறார். தலைவர் அஷ்ரப்புடன் தோளோடு தோளாக இருந்து அரசியல் செய்த எல்லோரும் கிழக்கு தலைமைத்துவத்தை உருவாக்க தயாராக இருக்கிறார்கள்.

ஹரீஸிடம் தலைமைத்துவம் தொடர்பில் அச்சநிலை இருக்கிறது. தலைமைத்துவத்தை வழிநடத்த முடியுமா, இல்லையா என்ற சந்தேகம் அவருக்கு இருக்கிறது. தலைமைத்துவ சபையொன்றை நிறுவி மக்களுக்கு தெளிவை வழங்கினால் கிழக்கில் மட்டுமல்ல, நாடுமுழுவதிலும் மக்களிடமிருந்து நிறைய வரவேற்பு கிடைக்கும். தலைமைத்துவத்தை கோரி சிரேஷ்ட அரசியல்வாதிகளும், ஹரீஸ் போன்றோர்களும் முன்வந்தால் மக்கள் பின்னால் வருவார்கள். எல்லா இடங்களிலும் ஒழுங்கான தலைமைத்துவ தாகம் இருக்கிறது.

**இலங்கை அரசியல் மற்றும் நிர்வாகத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

வெளிநாட்டுத் தலையீடுகள் பற்றி அடிக்கடி சிலாகித்துப் பேசிவரும் நமது நாட்டுத் தலைவர்கள் தங்களது கண்களை மூடிக்கொண்டு உலகம் இருண்டு கிடக்கிறது என்று வாதிடுபவர்களாவர். இவர்கள் உட்பட இந்த நாட்டில் மாறிமாறி இதுவரை ஆட்சி செய்தவர்கள் இந்த நாட்டை ஒரு தோல்வியடைந்த நாடாக பிச்சை எடுக்க வைத்ததை மறந்து விட்டார்கள் . வெளிநாடுகளிடம் கையேந்திப் பிழைக்கும் நிலைமைக்கு இந்த நாட்டை சீர்குலைத்தவர்கள் இனிமேலும் வெளிநாட்டுத் தலையீட்டை பற்றி இழிவாக பேசக்கூடாது. வெளிநாட்டுத் தலையீட்டினால் மட்டுமே இனிமேல் நாம் நிமிர்ந்து நிற்க முடியும் என்பதை இனியாவது இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் .

தேர்தல் முறை மாற்றம், அரசியல் யாப்பு மாற்றம் என்பன பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு (அரசாங்கத்துக்கு) எந்த அருகதையும் கிடையாது. மக்களை மடையர்களாக்கி அவர்களை பொய் வாக்குறுதிகளால் மயக்கி மெகா ஊழல்களை செய்து குடும்பம் கோத்திரம் என்ற குறுகிய வட்டங்களுக்குள் தம்மை வகைப்படுத்திக்கொண்டு தங்களுக்குத் தேவையான வகையில் சட்டங்களையும் யாப்புகளையும் படைத்துக் கொண்டு அவற்றை சட்டமாக்க தேவையான பெரும்பான்மையை ரெடிமேட் ஆக பெற்றுக்கொள்ள உதவிய கட்சிகளும் பிரதிநிதிகளும் இனிமேல் வெளிநாட்டு தலையீடுகள் பற்றி பேசுவதற்கும் வீரவசனங்கள் பேசி அப்பாவி வாக்காளர்களை வலை வீசுவதற்கும் வாய் திறக்கக் கூடாது.

ஏனெனில், வெளிநாட்டு உதவிகள் மூலம் மட்டும்தான் நாம் இனி எழுந்து நிற்க முடியும் என்ற நிலைமைக்கு இந்த நாட்டை இட்டுச்சென்றவர்கள் நீங்கள்தான். இனிவரப்போகும் யாப்பு மாற்றங்கள், சட்ட வரைபுகள், தேர்தல் முறை மாற்றங்கள் அனைத்தும் துறைசார்ந்த வெளிநாட்டு வல்லுநர்களின் ஆலோசனைகள் பெற்று நிரந்தர தீர்வாக அமையவேண்டும். உள்நாட்டு பொறிமுறைகள் எல்லாமே தோல்வியடைந்து விட்டதை ஏற்றுக்கொள்ளாது. 'விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற வீம்பு இனித்தேவையில்லை. ஒரு பொதுத்தேர்தலை மட்டும் நடத்தி புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களிடம் நிர்வாகத்தையும் நாட்டையும் பாரப்படுத்திவிட்டு கரை ஏறுவதை தவிர வேறு எதனையும் இந்த நாட்டு மக்கள் அரசியல் தலைவர்களிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. தோல்வியை ஏற்றுக்கொண்டு இடத்தை காலி பண்ணுவது தான் இந்த மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் சிறந்த பணியாகும்.

**மு.காவின் பேராளர் மாநாட்டில் இரு எம்.பிக்களுக்கு மன்னிப்பு வழங்கியது தொடர்பில் முன்னாள் செயலாளரான நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாட்டில் மன்னிப்பு நாடகம் அரங்கேறியது மக்கள் மத்தியில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தனியார் தொலைக்காட்சியொன்றில் தோன்றி மு.காவின் இப்போதைய செயலாளர் நிஸாம் காரியப்பர் 20க்கு ஆதரவளித்த மற்றும் கட்சிக் கட்டுக்கோப்புகளை மீறிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வகையான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறார்கள் என்பதை பகிரங்கமாகத் தெரிவித்தார். மட்டுமின்றி, அக்கட்சியின் தலைவரும் பல சந்தர்ப்பங்களில் அந்த எம்.பிக்களுக்கு எதிராக கடுமையாக கருத்துரைத்து ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை நடத்தப்போவதாகவும் கூறிவந்தார். இறுதியாக நடந்த உச்சபீடக் கூட்டத்திலும் பல உச்சபீட உறுப்பினர்கள் இவர்களை இணைக்கக் கூடாது என்றும் மன்னிப்பு வழங்க கூடாது என்றும் வாதிட்டுள்ளனர். கட்சியின் பின்னடைவுக்கு தலைவர்தான் காரணம் எனும் வாதம் அங்கும் எழுந்துள்ளது. அதையெல்லாம் தாண்டி தற்துணிவில் அவர் முடிவுகளை எடுக்கிறார் என்றால் அந்த எம்.பிக்களுக்கும் இவருக்கும் இடையில் இருக்கும் இரகசியங்கள் தொடர்பில் இவருக்கு அச்சம் இருப்பது விளங்குகிறது.

அமைச்சர் நஸீர் அஹமட் வெளிப்படையாகவே ஹக்கீமை விசாரணைக்கு அழைக்கக் கோரினார். எல்லா எம்.பிக்களும் இணைந்து ஹக்கீம்தான் எங்களை ஆதரவளிக்க சொன்னார் என்ற உண்மைகளை மக்களிடம் ஒப்புவித்தால் ஹக்கீமுக்கு எவ்வளவு அவமானமாக இருக்கும். அதனால்தான் துணிந்து எம்.பிக்களை மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கும் முடிவை எடுத்தார். இந்த துணிச்சலான முடிவை எடுக்கும் தைரியம் அவருக்கு இருப்பதாக நான் பார்க்கிறேன். இந்நிலை தலைவர் அஷ்ரப்பின் காலத்தில் இருக்கவில்லை. இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் உயர்பீடத்திற்கே இருந்தது.

தலைவர் அஷ்ரப்பின் காலத்தில் மு.காவின் உச்சபீடத்தில் 27 பேர்தான் இருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் அரசியலின் உச்சபட்ச அனுபவமும் அறிவும் இருந்தது. ஆனால், இப்போதைய மு.கா. உச்சபீடத்தில் 113 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதிலும் 58 சதவீதமானவர்களை தலைவர் தனியாக நியமிக்கலாம் என்று யாப்பில் தெரிவிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் அவரால் நியமிக்கப்பட்ட நிறைய பேர் அவர் சொல்வதெல்லாம் சரி என்று கூற எப்போதும் தயாராக இருக்கிறார்கள். வாக்காளர்கள் இப்போது முஸ்லிம் காங்கிரஸில் எதிர்பார்ப்பது மரம் ஒன்று இருக்க வேண்டும். அஷ்ரப்பின் படம் ஒன்று இருக்க வேண்டும். ஆதவன் பாட்டு இருக்க வேண்டும். அவ்வளவுதான்..! இவ்வளவும் இருந்தால் அதனை பூரண முஸ்லிம் காங்கிரஸாக ஏற்றுக் கொள்கிறார்கள். உள்ளார்ந்தமாக யாரும் சிந்திக்கிறார்கள் இல்லை. இதுவே மக்களின் பிழையான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

**உங்கள் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு யாப்பு என்ன சொல்கிறது? நிர்வாகிகள் யார் ?**

எங்களின் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் யாப்பு அஷ்ரபின் யாப்பு. தலைவர் அஷ்ரப் மரணிக்க முன்னர் ஸ்ரீல.மு.காங்கிரஸுக்கு வைத்திருந்த அதே யாப்பைத்தான் நாங்கள் எங்களின் ஐக்கிய சமாதான கூட்டமைப்புக்கு வைத்திருக்கிறோம். எங்களின் யாப்பை தேர்தல் திணைக்களத்திற்கு தகவலறியும் சட்டத்தின் மூலம் யாரும் கோரிப்பெற்று பார்வையிடலாம். அதில் தலைவர் என்ற இடத்திற்கு பதிலாக 11 பேரைக் கொண்ட தலைமைத்துவ சபை என்ற ஒன்றை மாற்றியமைத்துள்ளோம். தலைவர் அஷ்ரப்பிற்கு நிகரான தலைவர் முஸ்லிம் சமூகத்தில் இல்லாதமையினால் இந்த மாற்றத்தை செய்துள்ளோம். எங்களின் கட்சியில் தனிநபர் ஒருவர் இறுதி முடிவை எடுக்க முடியாது. பதவி வழியில் தவிசாளர் (பஷீர் சேகுதாவூத்), செயலாளர் நாயகம் (ஹஸன் அலி), பிரதித்தலைவர் (மிப்ளால் மௌலவி), நஸார் ஹாஜியார், பிரதிச்செயலாளராக ஹாரீஸ் உதுமாலெப்பை, பொருளாளராக ஹலீலுர் ரஹ்மான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.நிஜாமுதீன், முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் போன்ற பலரும் எங்களின் கட்சியில் இருக்கிறார்கள். ஐக்கிய சமாதான கூட்டமைப்பை எதிர்வரும் தேர்தலில் நாட்டின் சகல பாகங்களிலும் களமிறக்க தயாராகி வருகிறோம்.

# 'வெடி'மணியம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

*தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இப்போது இருக்கும் பல "குழப்பங்களுக்கு" காரணகர்த்தாக்கள்!*

*அப்படியிருக்க;*

*சம்பந்தர் அண்ணா் தெரிஞ்சு செய்தாரா? அல்லது வாக்குமாறிச்செய்தாரா? எண்டு புரியவில்லை.*

*இந்தளவு காலமும் செய்யாதது மிகப்பெரிய பிழை எண்டால்;*

*இந்த "ஒற்றுமைக்கான" அழைப்பை வேண்டா வெறுப்பாக ஒப்புக்கு செய்தது அதைவிட மிகப்பெரிய பிழை.*

*சணாயகப்பொன் விருது பெற்ற சம்பந்தர் அண்ணரால் ...*

*அல்லது சாணக்கியன் புழுகித்தள்ளிய "தமிழ் மக்களின் அரசியல் அடையாளமாகிய" சம்பந்தர் அண்ணரால்;*

*தமிழ்த்தேசியப்பரப்பில் இயங்கும் கட்சிகளை ஒரு பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கும் வல்லமை இல்லை என்பதுதான் கசப்பான யதார்த்தம்.*

*"ரணிலோடு பேசத்தயார்" என்று சம்பந்தர் அண்ணர் சொல்வதற்கு முன்னர் அவர் செய்யவேண்டிய கருமங்களை செய்யத்தவறுவது மிகப்பெரிய அரசியல் தவறாகும்.*

*சம்பந்தர் அண்ணர் பற்றிய விடயங்களை பேசிப்பேசி வாய் நொந்ததுதான் மிச்சம். அவரும் அவரது பரிவாரங்களும் திருந்துவதற்கான வாய்ப்புகள் மிக மிகக்குறைவு.*

*ஆனால் இறுதியாக ஒரு விடயத்தை சொல்லிப்போட்டு அடுத்த விசயத்தைப்பற்றி கதைப்பம்.*

*அண்மையில் நோர்வே மூக்கை நுழைப்பதன் பின்னணியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முக்கிய ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீடு உள்ளதாக கேள்விப்பட்டம்.*

*இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அல்லது சமாதான நடவடிக்கைகளில் நோர்வே ஒருபக்க சார்பாக நடந்துகொண்டது மட்டுமல்ல;*

*தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தின் அழிவுக்கு காரணமானவர்களில் அவர்களும் இருக்கிறார்கள்.*

*ஆக; ரணிலால் மீண்டும் கொண்டுவரப்பட்ட எரிக்சொல்ஹெய் முக்கு வெள்ளையடிச்சு சமாதான புறாவாக மீண்டும் வடக்கு கிழக்கில் பறக்கவிட எடுக்கப்படும் முயற்சிகளில் யார் துணை போனாலும் அவர்களை வன்மையாக கண்டிக்கிறோம்.*

*சமாதான பேச்சுவார்த்தையில் நோர்வே விட்ட இடத்தில் இருந்து தொடரலாம். ஆனால் மீண்டும் நோர்வேயில் இருந்து தொடரமுடியாது. இந்த நிலைப்பாட்டின் உள்ளார்ந்த அர்த்தத்தை புரிந்தவர்களுக்கு மேலதிகமாக விளங்கப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.*

*ஆக; அடுத்த வருடம் பெப்ரவரி மாத சிறிலங்கா சுதந்திர தினத்தில் ரணில் தரும் அரசியல் தீர்வை யார் போய் வாங்கி வாறது எண்ட கேள்வி பலருக்கும் எழக்கூடும்.*

*இந்த தீர்வுப்பொதி தரும் விழாவுக்கு ஒரு சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் வரலாம். முக்கியமாக கனேடிய தமிழ்க்காங்கிரஸ் வரும். அவையளை ரணில் கூப்பிடாட்டிலும் சுமந்திரன் நிச்சம் வெத்திலை பாக்குவைச்சு அழைப்பார்.*

*சாணக்கியன், சுமந்திரன் ,சம்பந்தர் அண்ணர் ஆகியோர் கோல்பேஸ் கடற்கரையில் கொண்டாடப்படும் சிறிலங்காவின் சுதந்திரதின விழாவுக்கு போய்;*

*தங்கத்தட்டில் ரணிலால் கொடுக்கப்படும் "தமிழர்களுக்கான அரசியல் தீர்வை" வாங்கிவருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இதுக்குள்ள எதுக்கு "கனேடிய தமிழ்க்காங்கிரஸ்" எண்ட அமைப்பை ஓட்டின்னியள் எண்டு கேப்பியள்.*

*அந்த அமைப்பைச்சேர்ந்த கந்தையா எண்டவர் அண்மையில் விஜயராச ராஜபக்ஸவை சந்திச்சு தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகள் அடங்கிய "கந்தையா பிளான்" எண்டு ஒண்டை குடுத்திருக்கிறாராம்.*

*இந்த பிளானில என்ன கிடக்குது ஒருத்தனுக்கும் ஒரு கோதாரியும் தெரியாது.*

*இந்த "பிளானை" அவற்ற மனிசி தயாரிச்சு புருசன்ர பேரில தலைப்பைப்போட்டு "கனேடிய தமிழ்க்காங்கிரஸ்" சார்பாக குடுத்திருக்கினம் எண்டு நக்கல் அடிக்கிறாங்கள்.*

*இப்படி சில அங்கிடு தத்தி புலம்பெயர் அமைப்புகள் கொழும்பில் அண்மையில் ரணில் அரசின் முக்கிய பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் சொல்லுகினம்.*

*ரணிலின் விசுவாசிகளான சாணக்கியன், சுமந்திரன் போன்றோர் அடிக்கடி வெளிநாடுகளுக்குப்போய் சில புலம்பெயர் அமைப்புக்களை சந்திச்சு ரகசிய பேச்சுவார்த்தை நடாத்துவதன் பின்னணி என்னண்டு இப்ப விளங்கும் எண்டு நினைக்கிறம்.*

*அண்மையில் சிறிலங்காவில் ஒரு சில முக்கிய புலம்பெயர் அமைப்புகளின் தடை நீக்கம் மற்றும் ஒரு சில தனிப்பட்ட நபர்களின் தடைநீக்கத்தின் பின்னணியில் சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் மிகக்கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.*

*தமிழ்மக்களின் இரத்தக்கறை படிந்த நோர்வே மீண்டும் தமிழ்மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் மூக்கை நுழைப்பதை தமிழ்மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.*

*2009 இக்கு முன்னும் பின்னும் நோர்வே தமிழ்மக்களின் இனப்படுகொலை விவகாரத்தில் என்ன நிலைப்பாட்டில் இருந்தது எண்டு அறிந்தவர்கள் எவரும் மீண்டும் எரிக் சோல்கெய்மின் கைகளை தொடுவதற்கு தயங்குவார்கள்.*

*இந்த தாற்பரியம் புரியாத சாணக்கியனும் சுமந்திரனும் வேண்டுமானால் எரிக் சொல்கேய்மோடு கூடிக்குலாவட்டும். அது அவர்களின் தனிப்பட்ட அரசியல் நலன் சார்ந்தவிடயம்.*

*ஆனால் தமிழ்மக்களின் அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களில் நோர்வே மீண்டும் ஆர்வம் காட்டுவது என்பது நல்ல சகுனமாக தெரியவில்லை.*

*போனகிழமையும் ரணில் அரசு வடக்கு ஆளுநர் உதவியோடு யாழ்ப்பாணத்தில் "கள்ளக்காணி" பிடிக்கும் திருகுதாளத்தை அரங்கேற்றினார்கள்.*

*மிகக்கேவலமாக அந்த "நிகழ்வு" அரங்கேறியது.*

*இந்த லட்சணத்தில் ரணில் எந்த முகத்தோடு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கபோகிறார்?*

*அல்லது மறுவழமாக எதன் அடிப்படையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை சந்திக்கப்போகிறார்கள் எண்டு "உண்ணாண" தெரியவில்லை!*

*ரணிலைச்சந்திக்கப்போகமுதல் எந்த தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினராவது நெஞ்சை நிமிர்த்தி என்ன பேசப்போறம் எண்டு சொல்லிட்டு போங்கோ!*



***சத்யா பிறந்தது நமக்காக***
***சாயி மார்க்கம் எமக்காக***
***சீரடி சாயியின் பிரசாதம்***
***சத்ய சாயி அவதாரம்***

***ஆண்டுகள் கடந்து சென்றாலும்***
***ஆண்டு வருகிறார் பர்த்தியிலே***
***சமாதி நிலையில் இருந்தாலும்***
***சமித்தியில் வருவார் பக்தியிலே***

***சேவை என்பதில் அவதானம்***
***தேவை நமக்கு அதில் கவனம்***
***பஜனை வந்தது அவர் வழியில்***
***மனதை வைப்போம் அறநெறியில்***

***போதனை யாவும் செவிமடுப்போம்***
***சாதனை புரிந்த வரலாற்றை***
***சத்தியம் சிவம் சுந்தரமாய்***
***பர்த்தியில் வாழ்கிறார் சமாதியாய்***

***காசி மக்கா ஜெரூசலம்***
***காயா யாவும் ஒரே ஸ்தலம்***
***சக்தி இருக்குது அங்குள்ளே***
***பர்த்தியில் இருப்பதும் அதுபோலே***

***சத்ய சீரடி அவதாரம்***
***சத்தியம் இரண்டும் ஒன்றாகும்***
***வேண்டாம் வேற்றுமை அதனுள்ளே***
***வேண்டும் ஒற்றுமை நமக்குள்ளே***

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பாபாவின் பிறந்தநாள் முன்னோட்டமாக நவம்பர் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, மாலை 5 மணிக்கு, பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனி இடம்பெறும். மறுநாள் நவம்பர் 23ஆம் திகதி, புதன்கிழமை பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 97ஆவது பிறந்தநாளன்று பிரசாந்தி கொடியேற்றத்துடன் அனைத்து நிகழ்வுகளும் காலை 5 மணி முதல் பகல் ஆரத்தி வரை அன்னதானத்துடன் நடைபெறவுள்ளது. சிறப்பு அம்சமாக பிறந்த நாள் கேக் வெட்டுதல், திருவூஞ்சல், திரிமங்களாராத்தியும் இடம்பெறும்.

**எஸ்.என்.உதயநாயகம்,**
**பகவான் ஸ்ரீ சத்யசாயி**
**பாபா மத்திய நிலையம்,**
**கொழும்பு.**





# வவுனியா மாவட்டமும் குடிநீர் பிரச்சினையும்



**சிவகுமார் திவியா**

இலங்கையில் அநுராதபுரம் மாவட்டத்துக்கு அடுத்ததாக உள்ள வவுனியா மாவட்டத்தில் வாழும் பெரும் எண்ணிக்கையிலான மக்களை பாதித்துள்ள ஒருவகை சிறுநீரக நோய்க்கான காரணம் இதுவரை மர்மமாக இருந்தே வந்தது. அங்கு சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் கேள்விக்குறியாக உள்ளது

கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் இந்தப் பிரதேசத்தில் 20 ஆயிரம் பேர் இந்த மர்மமான சிறுநீரக நோய்க்கு பலியாகியுள்ளதாகவும் சுமார் 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில கிராமங்களில் மாதத்திற்கு 10 பேராவது பலியாவதாகவும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு சுத்தமான குடிநீர் பிரச்சினையே காரணம் என்று ஆய்வுகள் உறுதிசெய்துள்ளதாகவும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் இரண்டாவது இடத்தில் வவுனியா மாவட்டம் காணப்படுவதாகவும் வவுனியா மாவட்டத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினையே நிறுநீரக நோய் ஏற்படுவதற்கன பிரதான காரணம் எனவும் மாகாண சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.




இதற்கு இங்கு வாழும் கிராம மக்கள் சுத்தமான குடிநீரின்றி அவதிப்படுவது காரணமாகும். வாழ்வின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக விளங்கும் நீர் என்பது நிறமோ மணமோ அற்ற தெளிவான ஒரு திரவமாகும். பொதுவாக ஆரோக்கியமான ஒருவர் உணவில்லாமல் குறைந்தது 5 நாட்கள் கூட உயிர் வாழலாம். ஆனால், (நீரில் எவ்வித கலோரிகளோ உயிர்ச்சத்துகளோ இல்லாவிட்டாலும் கூட) நீரின்றி ஒருவரால் ஒருநாள்கூட உயிர் வாழ முடியாது. மனித உடலுக்கு அன்றாடம் சராசரியாக 6–8 டம்ளர் தண்ணீர் தேவைப்படுகின்றது. வெப்பமான சூழ்நிலையில் நமது உடலுக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படுகின்றது. ஒரு மனிதனின் உடலில் 60%க்கு மேல் நீர் உள்ளது. அதில் 2.7 எனும் மிகச்சிறிய அளவு குறைந்தாலும் மனிதனின் உடலில் டிப்ரெசன், உடல் எரிச்சல், நடுக்கம், தலைவலி, மயக்கம், வயிற்றுப்புண் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதன்மூலம் நீரின் இன்றியமையாத நிலைமை தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றது. இவ்வாறு நீரின் அவசியத்தை வலியுறுத்தியே அக்காலத்தில் ஆட்சி செய்த மன்னனான பராக்கிரமபாகு "ஒரு சொட்டு மழை நீரையும் பயன்படாமல் கடலில் வீணே செல்ல விடக்கூடாது" என்ற வாசகத்தைக் கூறியிருந்தார்.

இச் சிறுநீரக நோய் ரஜரட்ட பகுதியில் முதலில் கண்டறியப்பட்டதால் ரஜரட்ட சிறுநீரக நோய் என்றும் இதற்குப் பெயர் உள்ளது. இன்று இந்த நோய் அந்தப் பகுதியையும் தாண்டி, பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற தென்னிலங்கைப் பகுதிகளிலும் பெருமளவில் காணப்படுகிறது. இப்போது இந்த நோய் மெதுவாக வடக்கு நோக்கியும் நகர்ந்து வவுனியாவில் அதிகரித்துள்ளது. கடந்த சில தசாப்தங்களாக இந்நோயானது இலங்கையில் பாரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மிக அண்மையில் இலங்கையில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையானது சடுதியாக அதிகரித்த நிலையில் பதிவாகியுள்ளது. அதன்படி வவுனியா மாவட்டத்தில், குறிப்பாக, இவ்வாய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களான ஆசிக்குளம், மகாறம்பைக்குளம், ஈச்சங் குளம்.காத்தார்சின்னகுளம், கூமாங்குளம். வவுனியா வடக்கு, அக்போபுர, ஈரப்பெரியார் குளம், நேரியகுளம், ஆண்டியாபெரியகுளம், மெனிக்பாம், பெரியஉழுக்குளம் போன்ற கிராமங்களில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இவ்வாய்வானது வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையும் அதன் போக்கும் எவ்வாறுள்ளது என்பதை கண்டறிவதை பிரதான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தால் பல்வேறு சுகாதார விழிப்புணர்வுகள், தடுப்பு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்ட போதிலும் எவ்வாறு நாட்பட்ட சிறுநீரக நோயின் வீச்சு அதிகரித்துள்ளது என்பதை இவ்வாய்வு பெறப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின்படி, வவுனியா மாவட்டத்தில் 2016 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகை வேறுபட்ட அடிப்படையில் ஒவ்வொரு பிரதேசங்களில் பதிவாகியுள்ளமையை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இந்நோயின் தாக்கம் 2011 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியில் சாதாரண வேகத்திலும் 2014இல் சடுதியான அதிகரிப்பைக் கொண்டுள்ளதுடன் 2016இன் பின்னர் தாக்கம் குறைந்துள்ளது. இந்நோயின் காரணமாக 50 - 69 வயதிற்கு உட்பட்டவர்கள் அதிகளவிலும் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் சராசரியாகவும் 14 - 49 வயதிற்குட்பட்டவர்களில் குறிப்பாக, ஊழியப்படையினர் அதிகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பிரதேச செயலகங்களான வவுனியாவில் 52%, வவுனியா தெற்கில் 27%, வெங்கல செட்டி குளத்தில் 9.4%, வவுனியா வடக்கில் 11.6% என நோய்த் தாக்கத்தின் பரம்பல் வேறுபட்டு காணப்படுகின்றது. இந்நோய்த்தாக்கத்தினால் 61.9% தமிழர்கள் 27.3%, சிங்களவர்கள் 10.7%, முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளமை இந்நோய் இன அடிப்படையில் சமனற்ற பரம்பலைக் கொண்டுள்ளமை போன்றன இந்நோயின் பரவுகை வயது, பிரதேசம், இனக்குழு, பால்நிலை எனும் மாறிகளின் அடிப்படையில் சமனற்ற பரம்பலைக் கொண்டுள்ளமை இவ்வாய்வின் மூலம் புள்ளிவிவர மற்றும் விவரண முறைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஊர்களுக்கு இடையிலும் மாவட்டங்களுக்கு இடையிலும் கிராமங்களுக்கு இடையிலும் தண்ணீருக்கான போராட்டம் அதிகரித்து வருகிறது என்கிற உண்மையையும் எல்லோரும் உணராமல் இல்லை அதேவேளை, பல வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் தொடரும் வறட்சி காரணமாக பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்திருந்தது.

வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வவுனியா பகுதிகளில் குளங்களும், நீர்நிலைகளும் வற்றிப்போயுள்ளதால் கிணறுகள் வற்றி குடிநீருக்காக பல மைல் தூரம் நடந்து சென்றே நீரைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இங்கு பல இறப்புக்களும் இடம்பெறுகின்றன . சிறுநீரக நோய் அதிகளவில் காணப்படும் பிரதேசங்களில் பெருமளவிலான பிள்ளைகள் அந்நோயினால் பெற்றோரை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா பிரதேச செயலகத்தில் 3,420 பேரும். வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் 1,266 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் 426 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் 640 பேரும் சிறுநீரகக் கொடுப்பனவு பெறுபவர்கள் உள்ளனர் என வவுனியா மாவட்ட செயலகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஆகவே, இம் மாவட்டத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினையே நிறுநீரக நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. சுத்தமான குடிநீரை இம் மக்களுக்கு வழங்கினால் இத்திட்டம் மூலம் வவுனியா மக்கள் சுத்தமான அத்துடன், பாதுகாப்பான குடிநீரை பெற முடியும். இதனால் சிறுநீரக நோயின் தாக்கம் குறையும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் இல்லையேல் நமது மாவட்டம் பாரிய பிரச்சினையை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகும் என வவுனியா மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் திருமதி மகிந்தன் சபர்ஜா தெரிவித்துள்ளார்



சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ளல் என்பது ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். ஆனால், இம் மக்களுக்கு "குதிரை கொம்பாகவே உள்ளது.'' வவுனியா மாவட்ட மக்களுக்கு அந்த உரிமை கூட இல்லை.

வவுனியா நகர் அனைத்து இயற்கை வளங்களுடனும் நீரையும் கொண்ட செழிப்பான நகரமாகும். ஆனால், எமது மக்களோ அரசனை நம்பி புருஷனை கைவிட்டதுபோல் தேசிய நீர் வழங்கல் சபையால் வழங்கப்பட ஆரம்பித்த குழாய் நீரை நம்பி தத்தமது வீடுகளில் பயன்படுத்திவந்த இயற்கை நீரூற்று கிணற்றுத் தண்ணீரையும் கைவிட்டு விட்டார்கள். இப்போது இவர்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தூர இடங்களுக்குச் சென்றே குடிப்பதற்கான நீரைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், குழாய் நீர் வழங்க ஆரம்பித்த ஆரம்ப காலங்களில் குழாய் நீர் வழங்கலில் இப்படியான நெருக்கடிகள் இருக்கவில்லை. என இம் மக்கள் தெரிவிக்கின்றனர்

இவ்வாறான சூழ்நிலையில அனைவருக்கும் நீர் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு. அமைவாக மக்களுக்கான சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு இத்திட்டத்தில் வவுனியா மாவட்டத்துக்காக 92 மில்லியன் ரூபா செலவில் வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகங்களும் உள்ளடக்கியதாக 23 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு ஒரு கிராமத்துக்கு நான்கு மில்லியன் என்ற அடிப்படையில் பயனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் அமைக்கப் பட்டுள்ளது



என பிரதேச செயலாளர் .நா.கமலதாசன் தெரிவித்துள்ளார்

தூய்மையான நீரின்றி ஆரோக்கியமான வாழ்வில்லை. இதற்கமைய வவுனியாவில் அதிகமான மக்கள் கிராமங்களில் வாழ்வதால் பொது நீர்மூலங்களைப் பாவிப்பதால் அவை பாதுகாப்பானதாக காணப்படவில்லை. பாதுகாப்பான நீர் மூலங்கள் எனும்போது அது மூடப்பட்ட கிணறுகள், குழாய்க் கிணறுகள் நீர் வழங்கல் சபையினால் வழங்கப்படும் நீர் மற்றும் சமூக கிராம மட்டங்களில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் மூலமாக வழங்கப்படும் நீர், போத்தலில் அடைக்கப்பட்ட நீர் போன்றவற்றை குறிக்கும்.

குடிநீர் தொடர்பான இரண்டு மிக முக்கிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒன்று வரட்சி காலப்பகுதியில் பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவது. மற்றையது பாதுகாப்பான குடிநீரின் தரம் நாட்டின் பல பகுதிகளில் மிக முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. வருடந்தோறும் 8,000இற்கு மேற்பட்ட உயிரிழப்புகள் சிறுநீரக நோயினால் ஏற்படுகின்றன. இதற்குரிய சரியான காரணங்கள் குடிநீர் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்

வரட்சி காலம், எல்லோரும் எதிர்நோக்கும் பிரச்சினையைத்தான் நாமும் எதிர்நோக்குகிறோம். ஆனாலும் இது ஒரு தற்காலிகப் பிரச்சினையாக இருந்திருந்தால் விட்டுவிடலாம். எனினும், இதுவொரு நீண்டகால பிரச்சினையாகும். வவுனியா மாவட்டத்தில் பல அமைச்சர்களும் மாகாண சபை, பிரதேச சபை, நகரசபை அங்கத்தவர்கள் என்று பலர் இருந்தாலும் இந்த அத்தியாவசிய தேவையான நீர் நெருக்கடி இப்பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தீர்க்க யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. இந்த அத்தியாவசிய நீரின் நெருக்கடியைத் தீர்த்து வைப்பாரும் இல்லை. பணம் செலவழித்து நீரையும் வாங்கிக்கொண்டு, நீர் வழங்கப்பட்டதோ, இல்லையோ நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் மாதா மாதம் வழங்கப்படும் ரசீதுக்குரிய கட்டணத்தையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் வேறு வரட்சியான காலநிலையின்போது, வவுனியா மக்கள் குழாய் நீருக்காக அலைந்து திரிகின்றனர். எனினும், சுத்தமான குடிநீரை பெறுவதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். கிராமத்துக்கு நீர் வழங்கும் நீர்த்தாங்கி மாசுபட்ட நிலையில் காணப்படுகின்றது எனவும், அதனை பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் அசுத்தமான நீரையே பருகவேண்டியுள்ளது எனவும் நீர் சுத்திகரிப்பு திட்டமொன்றை தமக்கு ஏற்படுத்திக்கொடுக்குமாறும் கோருகின்றனர். அரசியல்வாதிகளால் நீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டிருந்தாலும் அது புனரமைப்பின்றி காணப்படுகின்றது. எனவே, நீர் சுத்திகரிப்பு கட்டமைப்பின் ஊடாக தமது கிராமத்துக்கு சுத்தமான நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மக்களும் தேசிய நீர் வழங்கலின் பாரபட்சத்தால், தொற்று நோய் அல்லது தொற்றா நோய்களை எதிர்கொள்ளக்கூடிய அச்சம் உருவாகியுள்ளது. குறித்த பிரதேசத்திற்குப் பொறுப்பானவர்களும் முன் வந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிடாது மனிதாபிமானத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் செயற்பட்டால் பொதுமக்கள் பயனடைவர். வவுனியா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான சிறுநீரக நோயாளர்கள் ஆசிகுளம் கிராமத்திலேயே பதிவாகியுள்ளனர். இருநூறுக்கு மேற்பட்டவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன், அண்மையில் கூட இருவர் மரணமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அம்மக்கள் தெரிவித்துள்ளதாவது, வவுனியா நகரிலிருந்து சுமார் 10 தொடக்கம் 15 கிலோ மீற்றர் எல்லைக்குட்பட்ட கிராமமே ஆசிகுளம். இக்கிராமத்தில் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல வருட காலமாக குடிநீருக்காகவும் அத்தியாவசிய தேவைக்காகவும் போராடி வருகின்றனர். யுத்தம் காரணமாக கிளிநொச்சி உள்ளிட்ட வடபகுதிகளிலிருந்து 1995ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெயர்ந்த எம்மை செட்டிகுளம், பூந்தோட்டம் மற்றும் நெளுக்குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாக தங்கவைத்தனர். எம்மை மீள்குடியேற்றுவதற்காக ஆசிகுளம் பகுதி தெரிவுசெய்யப்பட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு 2006ஆம் ஆண்டு குடியேற்றப்பட்டோம். 500 குடும்பங்கள் இங்கு குடியேறி வாழ்ந்துவரும் நிலையில், இவ்வாண்டு சிறுநீரக நோயால் இருநூறுக்கும்அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் கூலிவேலை செய்து எமக்கு கிடைக்கும் கொஞ்சப் பணத்தில் கூட நிம்மதியாக சாப்பிட முடியாமல் நாளாந்தம் மருத்துவ பரிசோதனைக்காகவும், மருந்துகளைப் பெறுவதற்காகவும் அடிக்கடி வவுனியா வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலையில்தான் நாம் வாழ்கின்றோம்.

பலருடைய வீடுகளில் கிணறுகளிலும், குழாய்க் கிணறுகளும் இருக்கின்றன. இருந்தும் அந்த நீரை வாயில் வைத்து பார்க்க முடியாத நிலையே இங்குள்ளது. அந்த நீரில் கல்சியம் உள்ளிட்டவற்றின் செறிவு அதிகமாக உள்ளது. இதனால் அந்த நீரின் மூலம் சிறுநீரக நோய் பலரையும் வாட்டி எடுத்துள்ளது. இவர்கள் தமது இரண்டு பரப்பு சிறிய காணிக்குள் 200 அடி ஆழம் வரையில் பல இலடசம் ரூபா பணத்தை செலவழித்து குழாய் அடித்தும் குடிநீரை பெறமுடியாமல் உள்ளதாகவும் குறித்த குடும்பங்கள் குடிநீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு சமாளிக்கமுடியாமல் பல வருடகாலமாக பல திணைக்களங்களுக்கும், அரசியல்வாதிகளிடமும் தெரிவித்தும் இதுவரை எந்த ஒரு பலனும் கிட்டவில்லை இங்கு வாழும் பாடசாலை மாணவர்கள் கூட காலைவேளையில் பாடசாலை செல்வதற்கான வசதிகள் கூட இல்லை என்றும் பஸ் சேவைகள் கூட சீராக இல்லை என்றும் தெரிவிப்பதுடன், இதனால் பாடசாலை மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை என்பதுடன் அன்றாட கூலி வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் கூட சரியான நேர காலத்திற்கு பணிக்கு செல்லமுடியாமல் தவிக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இன்று அதிகரித்துச் செல்லும் சிறுநீரக நோயானர்கள் சுத்தமான குடிநீர் பிரச்சினையால் அதிகரித்துள்ள காரணத்தினாலும் மற்றும் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் இடையே ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் இங்கு சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை யானது வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. அந்த வகையில் எமது பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிறுநீரக நோயாளர்களாக காணப்படுகின்றார்கள். அதேநேரம் இந்த மாகாணம் மற்றும் மத்திய சமூக சேவைகள் திணைக்களத்தினால் சிறுநீரகக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய நபர்களாகவும் காணப்படுகின்றார்கள். மகாஇறம்பைகுளம் கிராமத்தில் 100 பேர் இதற்கான கொடுப்பனவுகளை பெற்று வருகின்றார்கள். இதை நாம் அவதானிக்கும்போது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன உண்மையாகவே நீரானது ஒரு நிறைந்ததாக காணப்பட்டாலும் கூட எமது மக்களின் நடவடிக்கைகள் அவர்களுடைய இரசாயன பாவனை அதிகரித்து காணப்படு வதால் மண்ணின் தன்மையும் நீரின் தன்மையும் கெட்டுப்போய் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய குடிநீராக மாறி வருகிறது என்று வவுனியா உதவி பிரதேச செயலாளர் இராசேந்திரன் பிரியதர்சினி தெரிவித்தார்.





# மனதில் நீங்கா மலையகக் கலைகள்!







**தங்கராஜா யுவராஜ்**

**ம**லையகம் தற்போது பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தைக் கண்டுவருகிறது. ஆம். கல்வித் தரம், தொழில்துறை, படித்தவர் எண்ணிக்கை என முன்னேறும் நிலை காணப்படுகிறது. மறுபுறம் வீடுகள்தோறும் டிஸ் ரிவிகள், வீட்டுக்கொரு வாகனம் என முன்னேற்றத்தை நோக்கியவண்ணம் உள்ளது. இவ்வாறு மக்கள் முன்னேற்றத்தை நோக்கிச் சென்றாலும் மறுபுறம் மலையக மக்கள் ஏனைய மக்களிடத்திலும், தத்தமது உறவுகளிடத்திலும் சிறிது இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள்.

ஏன் இந்த மாற்றம்?, ஏன் இந்த இடைவெளி என ஆராயும்போது, மக்கள் நாகரீகத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்துவிட்டதைக் காட்டுகின்றது. ஏன் இந்த நாகரீகம் தொடர்பான ஆய்வுகளை இங்கு கதைக்க வேண்டும்? அப்படி என்ன எமது மக்கள் நாகரீகத்தை கண்டுவிட்டார்கள் என நீங்கள் கேட்பது கேட்கிறது. இங்கே நாகரீகம் எனக் குறிப்பிட்டது, மக்களின் மனதளவில் வளர்ச்சியடைந்து இருப்பதையே. ஏன் நாம் இங்கு நாகரீகத்தைப் பற்றி கூறவேண்டும்? அதற்கும் இந்தத் தொடருக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு.

எமது மக்கள் நாகரீகம் கண்டுவிட்டதால் எமது பாட்டன், முப்பாட்டன் கற்றுத்தந்த கலை வடிவங்களையும் கூத்துகளையும் அடுத்த சந்ததியினருக்குக் கற்றுக்கொடுக்காமலேயே சென்றுகொண்டிருக்கிறோம். அன்றைய காலத்தில் எமது ஊரில் அன்றிரவு கூத்து என்றால் எத்தனை சனம் கூடிநிற்கும். கையில் பாயுடனும் தேத்தண்ணி போத்தலுடனும் 10 மணி கூத்துக்கு 8 மணிக்கே இடம்பிடித்திருப்போம். ''காளி வரப் போகுதப்பா கண்ண மூடிக்க'' என அம்மா சொன்ன அறிவுரையும் காணாமல்போய்விட்டது. தூதன் வரும்போது அப்பா தோலில் தூக்கிக்கொண்டு ஓடிய தருணங்களும் உள்ளன.

சரி, யார் இந்தக் காளி, தூதன் அது குறித்து விளக்குவதே இந்தத் தொடரின் நோக்கம்.

மலைகத்திற்கென சில பாரம்பரிய கலை, கூத்து வடிவங்கள் உள்ளன. காமன் கூத்து. பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு, நல்லத்தங்காள் கதை, குறவஞ்சி ஆட்டம் என பட்டியல் நீண்டு செல்கிறது. இவற்றுள் முதலில் நாம் பார்க்க இருப்பது பொன்னர் சங்கர் நாடகம்.

இந்த பொன்னர் சங்கர் நாடகம் மலையகத்தின் பல இடங்களில் நடத்தப்பட்டு வந்தாலும் மஸ்கெலியாவின் பிரவுன்ஸ்விக் பிரிவின் புளும்பில்ட் பிரிவில் 50 வயதான ஏ.சூரியன் ராஜகுமார் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இதிலிருந்து வாத்தியார் தொடருவார்.

**ஸ்ரீலனூர் நெல்லிஊர் நெல்லிவல நாடாலும்**
**சீரன் என்று குன்னுடையான் செல்வாறுமே.**
**ஆரனென்று பஞ்சி தமிழ் பாடுகின்ற பாலர்கள் எல்லோருக்கும், என்னிலும்**
**பெரியோர்கள், பாடுவதற்கு செல்வாருமே.**
**காட்டுக்கழகே கௌதாரி அம்மன் நடையழகே.**
**வீட்டுக்கழகே, செல்லாய் அம்மன் நடையழகே,**
**கூத்துக்கழகே பொன்னர் சங்கர் பொட்டழகே..**



ஏ.சூரியன் ராஜகுமார்
(மாஸ்டர்)

அனைருக்கும் எனது வணக்கம் நான் ராஜகுமார் மாஸ்டர், தற்போது மலையகத்தைப் பொறுத்தவரை பல கூத்து வடிவங்கள் மறைந்து வருகின்றன. எமது ஊரில் இந்த நாடகத்தை வருடந்தோறும் நடத்திவருகின்றோம்.

இந்த பொன்னர், சங்கர் நாடகத்தைப் பொறுத்தவரை மொத்தமாக ஐந்து பாகங்கள் உள்ளன.

**01. பிறப்பு, வளர்ப்பு**
**02. பொன்னர் சங்கரின் திருமணம்**
**03. கிளிபிடிக்கும் வனம்**
**04. பன்றி குத்தும் வனம்**
**05. படுகளம், கம்பம் ஏறி உயிரெழுப்பும் வனம்**

இதில் கிளி பிடிக்கும் வனம் மற்றும் படுகளம் கம்பம் ஏறி உயிரெழுப்பும் வனம் ஆகிய இரண்டு பாகங்களையே பிரதானமாக செய்துவருகின்றோம்.

அந்த வகையில் முதலில் கிளி பிடிக்கும் வனம் என்ற பாகத்தைப் பார்க்கலாம்.

இந்தியாவின் குன்னூரில் நடக்கும் கதையே இது, அங்கு குன்றுடையான் மற்றும் தாமுரை ஆகியோருக்கு பிறந்தவர்களே பொன்னர். சங்கர் மற்றும் தங்காள். இவர்கள் பிறந்து சிறிதுகாலத்திலேயே அவர்களின் தாய், தந்தையான குன்றுடையான், தாமுரை இறந்து விடுகிறார்கள். அதன்பின்னர் அண்ணன்களான பொன்னரும், சங்கரும் தங்கை தங்காளை பாசத்துடன் தாய், தந்தை நினைவு வரவிடாமல் வளர்த்து வருகின்றனர், இவ்வாறு அவர்கள் மூவரும் ஒருவருக்கு ஒருவர் பாசத்துடன் அரவணைப்பாக வளர்ந்துவருகின்றனர்.

**பொன்னர் சங்கர்**

**குன்றுடையான்**
**தந்தை**

**தாமுரை**
**தாய்**

**பொன்னர்**
**சங்கர்**
**தங்காள்**

**அத்தாபிள்ளை**
**மைத்துனர்**

**வீரபோகு**
**வளர்ப்பு மகன்**
**[காவலாளி]**

இவ்வாறு காலங்கள் ஓடிக்கொண்டிருக்க பொன்னரையும், சங்கரையும் விட தங்காளுக்கு அடிக்கடி தனது தாய், தந்தையின் ஞாபகம் வந்தவண்ணம் உள்ளதாக தங்காள், தனது அண்ணன்களிடம் கூற அவர்களும். தங்கை தங்காளை சமாதானப்படுத்தி வந்தனர்.

இவை எவற்றுக்கும் ஒத்துவராத தங்காள் தனது தந்தையை மறப்பதற்கு ஒரு பேசும் கிளி வேண்டும் என்றும், தனது தாயை மறக்க ஒரு தாய் கிளி வேண்டும் என்றும் தனது அண்ணன்களிடம் கேட்க, அந்தக் கிளிகள் பெரியகாண்டி (மூத்த கடவுள்) தவம் செய்யும் நாகமலையிலுள்ள வட்டப்பாறையில் இருப்பதாகவும் தங்காள் கூற, பொன்னரும், சங்கரும் அதற்கு சம்மதம் தெரிவிக்க, பொன்னர் தான் சென்று அந்தக் கிளிகளை பிடித்துவருவதாக தெரிவிக்கும்போது, தானே சென்று கிளிகளை பிடித்து வருவதாக சங்கர் தெரிவிக்க பொன்னருக்கும், சங்கருக்கும்.

இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. தன்னை அந்தக் கிளிகளை பிடித்துவர அனுப்பாவிட்டால் தன் உயிரை மாய்த்துக்கொள்வதாக சங்கர் தெரிவிக்க, அப்போது அங்கு வந்த அத்தாபிள்ளை (பொன்னர், சங்கர், தங்காளின் மைத்துனர்) தானே சென்று கிளிகளை பிடிக்கச் செல்வதாக கூறி, தங்காளிடம் சென்று வரம் வாங்கிக்கொள்ள தங்காளும். அத்தாபிள்ளையே கிளி பிடிக்க செல்லவேண்டும் என விருப்பம் கொண்டு வரத்தை வழங்கினார்.

இவர்களில் சங்கர் மிகவும் துடிப்பான வீரன் என்பதால் தான் சென்று அந்தக் கிளிகளை பிடித்து வருவதாகத் தெரிவிக்க மறுபுறம் அத்தாபிள்ளையும் அவ்வாறே கூற சங்கருக்கும், அத்தாபிள்ளைக்கும் அதிகாரப் போட்டி நிலவியது.

இதன்போது சங்கரும், அத்தாபிள்ளையும் பகடை விளையாடி அதில் வெற்றிபெறுபவரே அந்த கிளிகளை பிடிக்கச் செல்ல வேண்டும் என முடிவு செய்யப்பட்டது,

(தொடரும்)







## கங்காணியும் கலையரசியும்..

(களம்: வேலக்காடு)

**கங்காணி:** ஏன்டா தங்கவேலு பொம்பளாளுங்க வேலகாட்டு பக்கோ?

**தங்கவேலு:** இல்லங்கையா சம்சாரத்துக்கு தேத்தண்ணி குடுக்க வந்தே.

**கங்காணி:** ஆ ஆ ஏ மெடம் வச்சிட்டு வந்துட்டாங்களோ? இதுக்கு ஒரு ஆளு ..

**தங்கவேலு:** என்னாதானுங்க செய்ய. இங்கன வைச்சிட்டு போறேங்கையா அப்பரோ சொல்லிருங்க..

**கங்காணி** : சரி சரி போகலா. இன்னக்கி எங்க வேல?

**தங்கவேளு** : பத்தா நம்பர் மரத்தடிக்கங்கையா.

**கங்காணி** : சரி சரி என்னா ஓ சம்சாரோம் பொலம்பிக்கிட்டே இருக்கா. ஆயரூவா வேணுமா. கமுனிசம்லா பேசுறா..

**தங்கவேலு** : அவ அப்புடிதானுங்க. வீட்டல இருந்து முடிஞ்சி.. ஆனாளு ஒரு பக்கோ. அவ சொல்றது சரிதா.. அதவிடுங்கையா.

**கங்காணி** : என்னா சரி? வாயிருக்குனு பெரியடத்து விசயோலா பேசி திங்கிறதுக்கு சிங்கியடிக்காம இருந்தா சரி.

**தங்கவேலு** : ஆமாங்கையா. அதா நானு சொல்லுவே.. போன கெழம பார்ளிமன்டுல பச்சட் சொன்னாங்கே அத பாத்துட்டு ஒரே பொலம்பளய்யா...

**கங்காணி** : பத்துக்கு பத்து ரூம்ல இருந்துகிட்டு ஏன்டா பச்சட் பத்திலா பேசுறீங்க ?

**தங்கவேலு:** என்னாதாங்கையா செய்ய. வாங்கி வந்த வரோ அப்புடி..

**கங்காணி** : ம்ம் சரி சரி. வேல காட்டுக்கு போ. தொர வார டைம் சரி

**தங்கவேலு** : சரிங்கையா நானு கதையில நின்டுடே தேத்தணிய வைச்சிட்டு போறே சொல்லிருங்க..

**கங்காணி** : சரி சரி போ போ.. ஏ புள்ளைங்களா....தேத்தணி குடிகிறவுகளா குடிங்க, ஏய்.. கலை புள்ள தேத்தணி வந்துருக்கு...

**கலையரசி** : ஆரு கொண்டாந்தாயா?

**கங்காணி** : ஆரு கொண்டாருவா ஓனக்கு ஓ புருசேதா..

**கலையரசி** : அவரு வந்தாருங்களோ ... சரிங்கையா வாங்க தேத்தணி குடிப்போ...

**கங்காணி** : ஆ ஆ என்னமோ பார்ளிமன்ட் பச்சட் பத்தி கத போனிச்சாமே ஓனக்கு என்னா புள்ள தெரியும்?

**கலையரசி** : ஆமா பெரிய சிங்கமல ரகசியோம். ஏ யா நீங்கவேற...

**கங்காணி** : ஆமா மா.. பெரியெடத்து விசயத்துலா பேசி மெடம் வேல நிப்பாட்டையில தெரியும்

**கலையரசி** : எப்புடிங்கையா பேசாம இருக்கது. ரணில் மாத்தியா வந்தா செய்வாருனு நம்புனோ. அவரு என்னானா பச்சட்ல பெருசா. ஒன்னுமே சொல்லல. எம்மனைக்கு சும்மா ஏதோ அன்னைக்கி பச்சட் வாசிசாரு ....

**கங்காணி** : ஏன்டி ஓனக்கு என்னா எலிசபத் மகாராணினு நெனப்போ? பார்ளிமட் விசயோலா படிச்சவங்களுக்கு தா வெளங்கு ஸ்கூல் பக்கமே தலைவச்சி படுக்காத நீயல்லா அதபத்தி கேக்குற?

**கலையரசி** : நாங்கலா கைநாட்டுதாங்கையா ஆனாலு இப்ப பெரிய பெரிய ஒப்பிஸ்லகோட கைநாட்டு வைச்சாத்தா உள்ளுக்கே போகலாமாமே...

**கங்காணி** : நல்லா வக்கனையா பேசு. ஆனா ராத்தபோடாத பெரியெடத்து வெவகாரத்த பேசுறதால ஒன்னு நடக்கப் போறதில்ல...

**கலையரசி** : ஆமாங்கையா எப்புடியு கண்ணு கெட்ட பெறகு சூரிய நமஸ்காரம் செஞ்சி என்னா பண்ண? அது மாதிரி தானுங்கையா நம்ம எம்பிமாருங்கவுட்டு கத இருக்கு..

**கங்காணி** : எம்பிமாருங்கள என்னக்கி நல்லதா சொல்லிருக்கீங்க? நாய்வால நிமித்த முடியாது வாங்கி திங்கையில நல்லாருக்கு நன்றி கெட்டவங்கடி நீங்களா...

**கலையரசி** : யாருங்கையா நன்றிகெட்டவுங்க. நம்ப குடுக்குற சந்தாவ வச்சிதானேயா எம்பி மாருங்கட பொழப்பே ஓடுது?

**கங்காணி** : அப்ப நீ சந்தா குடுக்காட்டி எல்லா முடிஞ்சிருமா.ஏன்டி வாய கிண்டுற? இன்னக்கி வரைக்கு நம்மாளுங்க செத்த பிறகு பார்லிமட்ல பேசி காசு வாங்கி குடுக்கிறாங்க இதல யாருக்காக செய்றாங்க ?

**கலையரசி** : ஆமாங்கையா நம்மாளுங்க செத்து மடிஞ்சோட்டிதா நிவாரணம்.. ஏனா அப்போதா வாய்கிழிய பொய்க்கி பார்ளிமன்ல பேசலாதானே? எல்லாமே நாடகோயா.

**கங்காணி** : இந்தியாவுள இருந்து வந்த பயலுங்க நாம திங்க கூட இல்லாம சீப்பட்டு ஆனாதையா அங்கங்க செத்துமடிஞ்சி கெடந்தானுங்க கேக்க கூடநாதி இருக்கல ஆனா இப்ப செத்தாலு பேசி லெச்சோ கணக்குள காச வாங்கி குடுக்குற சாமிமார்கள னொய்யி னொய்யினு எதாவது சொல்லிகிட்டே கெடங்கடி.... அந்த தேத்தண்ணிய எடு...

**கலையரசி** : ஆ ஆ இந்தாங்கையா ... ஆனா நீங்களா பெரிய எடத்து ஆளுங்க நாங்க சொல்ல மட்டுதாயோ முடியு பொலம்பி பொலம்பிதா பொழப்பு சிரிப்பா சிரிக்குதுங்களே.. ஆனா இதலா பெருசா சொல்லி வயித்துலடிச்சிராதிங்கையா,

**கங்காணி** : அப்ப கொஞ்சம் வாய அடக்கி கிட்டு இரு, எம்பி மாருங்க தொரமாருங்களா நமக்காகதா தூக்கம் இல்லாம கூட வேலப் பாக்குறாங்க தெரியுதானே. சேவல் கூவுனு தம்பி சொல்லிருக்காரு நல்லா நெனவு வச்சிக்க.

**கலையரசி** : திண்ணையில இருந்தவனுக்கு திடுக்குனு வந்துச்சா கல்யாணம் அது மாதிதா இந்த சின்ன பொடியே ஏதோ பார்ளிமன்ட்லா போரா நல்லா படத்துலமாதிரி பேசுரா அதோட இப்பலா எங்கங்கையா சேவ கூவுது? அந்த சேவத்தா ஒரு எடத்துல இருக்கமாட்டகிதே.. சரிங்கையா அத விடுங்க அதலா பெரியெடத்து விசயோ. நேரமாச்சி தேத்தணிய குடிச்சிட்டு அடுத்த நெருவைக்கி ராத்த போடனு..

**கங்காணி** : ஒனக்கு பாரு பெரியெடத்துல இருந்து பெரச்சன வரையில இவ்வளோ கதக்கிற வாய எங்க வச்சிகிறனு பாக்குரே ஆ ஆ டக்குனு தேத்தணிய குடிங்கடி, இன்னைக்கி இருவத்தஞ்சி கிலோவுக்கு மேல எடுக்கணு..

**ம.அகிலேஸ்**

# கேள்விக்குறியாகியுள்ள மொனராகலை தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு





கொழும்பிலிருந்து 337 கி.மீ. தொலைவில் கிழக்கு நோக்கி பயணித்தால் மொணராகலை மாவட்டம். அழகான செழிப்பான அம்மாவட்டத்தில் சிரிகல எனும் யாருமே அறிந்திராத ஒரு தோட்டப் பிரதேசம். மொணராகலை வைத்தியசாலையில் இருந்து, அதனருகிலுள்ள கிரிமண்டல மாவத்தையினூடாக இடது பக்கம் திரும்பி நான்கு கிலோ மீற்றர் அந்த மலை மேலேறினால் சிரிகல எனும் அந்த குக்கிராமத்திற்கு செல்ல முடியும். தமிழர்கள் செறிந்து வாழக்கூடிய பிரதேசம் அது. பிரச்சினைகளால் சூழப்பட்ட அவர்களுக்கு அவர்களது கிராமத்தை தவிர வேறு உலகம் கிடையாது. வெளி உலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு உட்கட்டமைப்புவசதிகள் இல்லாததால் அவர்களுடைய வாழ்க்கை ஒரு வட்டமாகவே அமைந்திருக்கிறது.

இரண்டு நூற்றாண்டுகளாக தலைமுறை தலைமுறையாக சிரிகலயில் வாழ்ந்து வருவதோடு, பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர். குறிப்பாக நிலங்களுக்கான உரிமை வழங்கப்படவில்லை என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

அவர்களுடைய நிலம் தொடர்பான பிரச்சினையை அறிந்து கொள்வதற்காக அங்கு நாம் சென்றோம்,

சிரிகலயில் வசித்து வருகின்ற 58 வயதுடைய




உத்தரக்குமார் கூறுகையில்,

சிரிகலயில் சுமார் 220 குடும்பங்களும், 820 பேரும் வாழ்கின்றனர். தமிழர்களே பெரும்பான்மையாக உள்ளனர். 1836ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வந்து சிரிகல மலையின் உச்சியில் உள்ள தோட்டத்தில் குடியமர்த்தியதாக வரலாறு கூறுகின்றது. முன்பு மலை முழுவதும் இறப்பர் தோட்டங்கள் நிறைந்திருந்தன. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்து அங்கேயே தொடர்ந்து குடியேறியதாகவும் அவர் கூறினார்.

சிரிகல கிராமத்திற்கு நான்கு கிலோ மீற்றர் தூரம் மேலே செல்லவேண்டும், போக்குவரத்துப் பிரச்சினையே சிரமமாக இருப்பதாகவும், மேலே செல்லச் செல்ல பாதை குழியாகவும் புனரமைக்கப்படாமலும் ஒரு சில இடங்களில் மாத்திரமே கொங்றீட் இடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், சாலைகளில் பெரும் பகுதி பெரிய கற்பாறைகளாக உள்ளது. அதில் நடக்கக்கூட முடியாது. சிரிகல தோட்டத்தில் சரஸ்வதி தமிழ் பாடசாலை அமைந்துள்ளது. அங்கு குழந்தைகள் தரம் ஒன்று முதல் சாதாரண தரம் வரை கல்வி கற்கின்றனர். கிட்டத்தட்ட 120 குழந்தைகள் படிக்கின்றனர். கிராமத்தில் உள்ள ஒரு ஆசிரியரைத் தவிர ஏனையோர் அந்த கடினமான பாதையைக் கடந்து பாடசாலைக்கு செல்ல வேண்டும். இங்கு குடிநீர் மற்றும் மின்வசதிகள் இருக்கின்றன. இளம் சமூகத்தினர் வேலைக்காக நகைக் கடைகள், வணிக வளாகங்கள், ஆடைத்தொழில் போன்றவற்றில் வேலை தேடி கிராமத்தை விட்டு நாளுக்கு நாள் சென்று கொண்டே இருக்கின்றனர். சிலர் மதுபானக் கடைகளிலும் வேலை செய்கின்றனர். ஏனையோர் கரும்புத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மொனராகலையிலிருந்து சிரிகல கிராமத்துக்கு வருகின்ற முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் 800 ரூபாவிற்கும் அதிகமாக பணம் அறவிடுகின்றனர். இருமுறை - அதாவது முச்சக்கரவண்டியில் மேலேறிக் கீழிறங்க 1,600 ரூபாவுக்கும் அதிகம் செலவாகின்றது என அவர் கூறினார். அவசர நிலையிலும் நோயாளிகளை மலையிலிருந்து இறக்கி விடமுடியாது. அதற்காக பெரியளவு கஷ்டங்களை அம்மக்கள் எதிர்நோக்குவதாக அவர் கூறினார். இந்தப் பாதை ஒழுங்காக இல்லாததன் காரணமாக மூன்று கர்ப்பிணித் தாய்மார் கடந்த வருடம் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால் பிரசவத்திற்காக பெண்கள் ஒரு மாதத்துக்கு முன்பே சிரிகல வைத்தியசாலையில் தங்கிவிடுவதாக அவர் கூறினார். இதுவரை 7 அரசியல்வாதிகள் கிராமத்துக்கு வந்து பாதைகளைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளித்தனர். எனினும், இதுவரையில் அவை புனரமைக்கப்படாது இருக்கின்றன. இதேபோன்று வீடுகள் அமைந்துள்ள காணிகள் எங்களுக்கு சொந்தமில்லை. காணிப்பதிவுத் திணைக்களத்துக்கு சொந்தமானதாகும். காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படவேண்டுமாயின் அதிகாரிகள் பெருந்தொகை பணத்தை கேட்கின்றனர். கிட்டத்தட்ட 8 வீடுகளும் ஒரு கோயிலும் காணப்படுகின்றன. காணி உரிமை இல்லை என்ற காரணத்தைக் காட்டி தேர்தல் வாக்காளர் பட்டியலின் பெயர்ப் பதிவிற்காக பிரதேச செயலகத்துக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளிடம் இருந்து எந்த உதவிகளும் குறிப்பிட்ட சில காலமாக எமக்கு கிடைக்கவே இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல பேச்சுவார்த்தைகளுக்குப் பின் எமக்கு காணிகள் வழங்குவதாக கூறி அழைக்கப்பட்டாலும் காணிகளை அடையாளம் காட்டவோ அல்லது காணிகள் எங்களுக்கு வழங்கப்படவோ இல்லை. காணிகள் அளப்பதற்கு ஒருவருக்கு 750 ரூபா வீதம் நாம் பணம் செலுத்தினோம். ஆனால், அதற்குரிய எந்தச் செயற்பாடுகளும் நடக்கவில்லை என்று அவர் மிகுந்த கவலையுடன் தெரிவித்தார். எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நாம் நாளுக்கு நாள் எதிர்பார்த்தவர்களாகவே இருக்கிறோம் என உத்தரக்குமார் தெரிவித்தார்.

மேலும், அம்பலந்தையில் கரும்பு வெட்டுவதற்காக போய்வரும் சாந்திதேவி எனும் இளம் பெண் கூறுகையில்,

"கிராமம் மிகவும் உயரமான பகுதியில் அமைந்திருப்பதாலும் அங்கு வாழ்வது தமிழர்களாக இருப்பதாலும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் எமக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

நாங்கள் தமிழர்கள், அதுவும் வடக்கில் உள்ளவர்களைப் போல எம்மை யாரும் கண்டு கொள்வதில்லை. பிறந்த குற்றதிற்காக வாழ்கின்றோம்" என சாந்திதேவி கூறினார். "எங்களுக்குப் பாதை வசதிகள் இல்லை. நில உரிமைகளையும் இன்னும் பெற்றுத்தரவில்லை" என்று கவலையுடன் மேலும் தெரிவித்தார்.

சிரிகல கிராமத்தின் சமூக செயற்பாட்டாளரான கோகுல் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

1972ஆம் ஆண்டு பகுதி பகுதியாக இந்த இடங்கள் பிரிக்கப்பட்டு முதலாளி வர்க்கத்தினருக்கு வழங்கப்பட்டன. இதில் பெரும்பான்மையாக இந்தக் காணிகளை பெற்றுக் கொண்டவர்களாக ஆஜியார், உபாலி கோப்பரேஷன், சிவில் கோப்பரேஷன் என சிலருக்கு வழங்கப்பட்டது. 1990ஆம் ஆண்டுக்குப் பின் இவர்களால் இந்தப் பகுதி கைவிடப்பட்டது. அதன்பின் அங்கிருந்த மக்கள் கூலி வேலைக்காக வெளியில்



செல்ல ஆரம்பித்தனர். 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் IRDP மற்றும் LRC இணைந்து காணிகளை மக்களுக்கு (125 குடும்பங்களுக்கு) வழங்குவதற்காக இரண்டிரண்டு ஏக்கர்களாகப் பிரித்தனர். எனினும், அந்த இடங்களுக்கான உறுதிப்பத்திரமோ அல்லது பிரிக்கப்பட்ட இடப் பகுதிகளோ இதுவரை சிரிகல மக்களுக்கு காட்டப்படவில்லை என்கிறார். இது சம்பந்தமான தெளிவுள்ள சிலர் பிரிக்கப்பட்ட பகுதிக்காக 1800 ரூபா பணத்தொகையை செலுத்தினார்கள். இதுவரையில் பணம் செலுத்திய 16 பேருக்கு காணி உறுதிப்பத்திரம் வந்திருப்பதாகவும், இருப்பினும் உரிமை பத்திரத்தை மக்களுக்கு வழங்க முடியாது எனவும் LRC யினால் கூறப்பட்டது.

2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் டொனிப் பெரேரா என்ற நெதர்லாந்தை சேர்ந்த ஒருவருக்கு குறிப்பிட்ட காலத்துக்கு குத்தகை அடிப்படையில் குறிப்பிட்ட காணிகள் வழங்கப்பட்டன. டொனிப் பெரேராவுக்கு அங்கிருந்த 168 ஏக்கர் காணிகளையும் வழங்கியிருந்தனர். இருப்பினும், சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் அவர்களும் குறிப்பிட்ட பகுதியைக் கைவிட்டனர். இவர்கள் அனைவராலும்

> "2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் IRDP மற்றும் LRC இணைந்து காணிகளை மக்களுக்கு (125 குடும்பங்களுக்கு) வழங்குவதற்காக இரண்டிரண்டு ஏக்கர்களாகப் பிரித்தனர். எனினும், அந்த இடங்களுக்கான உறுதிப்பத்திரமோ அல்லது பிரிக்கப்பட்ட இடப் பகுதிகளோ இதுவரை சிரிகல மக்களுக்கு காட்டப்படவில்லை

கைவிடப்பட்ட பின்னர் இதற்கான பொறுப்புகள் LRC யின் கையில் உள்ளது. ஆரம்பத்தில் குறித்த பகுதி சிரிகல என்று அழைக்கப்பட்டாலும், தற்பொழுது அப்பிரதேசத்தை மொனராகலை எஸ்டேட் என்றே அழைக்கின்றனர். இதன் காணிகள் அனைத்துமே LRCக்கு உட்பட்டது.

மொனராகலையில் உள்ள ஒட்டுமொத்த தமிழர்களும் அரசியல் ரீதியாக அனாதையாக்கப்பட்டவர்கள். அவர்களுக்கென்றுஅரசியல் கட்சிகள் எதுவுமில்லை. இம்முறை மாத்திரமே இரண்டு பிரதேச சபை அங்கத்தவர்கள் இருக்கின்றனர். குறிப்பாக இங்குள்ள அரசியல்வாதிகள் இந்த மக்களை அடிமைகளாகவும் அரசியல் கைக்கூலியாகவும் உபயோகிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரையில் மூன்று கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளதாக உத்தரக்குமார் கூறியது பற்றி சிரிகல கிராம உத்தியோகத்தரிடம் கேட்டோம். அவர் அந்தத் தகவல் உண்மையென உறுதிப்படுத்தினார்.

மேலும், குறிப்பிட்ட வீடுகள் இருக்கும் பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வனாந்தர பிரதேசத்தினுள் உள்ளடக்கப்படுவதால் காணி உறுதிப்பத்திரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும் இதில் அரசியல் தலையீடுகள் இல்லை எனவும் சிரிகல கிராம உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.

காணி வழங்குவதில் உள்ள சட்டச்சிக்கல்கள் சம்பந்தமாக மேலதிக தகவல்களை பெறுவதற்காக LRCஐ பல தடவைகள் தொடர்புகொண்டபோது அவர்களிடமிருந்து சரியான பதில் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை.

மேலும், தமிழ் முற்போக்கு கூட்டணி - ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம் வினவியபோது,

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை நாடு தழுவிய ரீதியில் மேல்மட்டத்துக்கு கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கிறது. மலையகத் தமிழர்கள் அதிகமாக 15 இலட்சம் பேர் வாழ்கின்றனர். எல்லா மலையகத் தமிழர்களும் தோட்டத் தொழிலாளர்கள் அல்ல. தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் மலையகத் தமிழர்களே. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை மலையகத் தமிழர்களின் பிரச்சினை அல்ல. மலையகத் தமிழர்களின் பிரச்சினையில் அரசியல் பிரச்சினைகளும் இருக்கின்றன.

தோட்டத் தொழிளாளர்கள் மலையகத் தமிழர்களின் ஒரு பகுதியினரே. பின்தங்கிய பிரிவினர் எனலாம். அவர்கள் நாட்டிலும் பின்தங்கிய பிரிவினர். மலையக மக்களிடமும் பின்தங்கிய பிரிவினர்.

மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை சம்பந்தமாக, ஐ.நாவின் உணவு விவசாய நிறுவனம், ஐ.நாவின் உலக உணவு நிறுவனம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியன இரண்டும் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

நவீன அடிமைத்துவம் பற்றிய ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபாகட்டா (Tomoya Obokata) இது சம்பந்தமாக விசேட அறிக்கை ஒன்றை ஐ.நாவிற்கு வழங்கியுள்ளார்.

இந்த அறிக்கைகள் அனைத்திலும் பின்தங்கிய நலிவுற்ற பிரிவினராக பெருந்தோட்ட மக்களே அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

இன்றைய பொருளாதாரப் பிரச்சினையில் முக்கியமானது உணவில்லாப் பிரச்சினையே. அதில் கிராமியப் பகுதியில் 34 வீதமும் நகரப்புறத்தில் 43 வீதமும் பெருந்தோட்டப் பகுதியில் 51 வீதமும் காணப்படுகிறது என்பதையும் ஐ.நா. நிறுவனங்கள் பகிரங்கமாகவே கூறியிருக்கின்றன. இந்தப் பின்தங்கிய நிலைக்கு பிரதான காரணம் அவர்களுக்கான உரிய காணியில்லாமையே.

நாடாளுமன்றத்தில் இரண்டு மாதங்களுக்கு முன் நான் கதைக்கும்போது அன்றைய பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதியிடம் நேரடியாகவே கூறினேன்,

தோட்டங்களாக இருக்கலாம், மொனராகலையாக இருக்கலாம், பதுளையாக இருக்கலாம், இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, அவிசாவளை மற்றும் கண்டி என எதுவாக இருப்பினும் எல்லா தோட்டங்களிலும் பயிரிடப்படாத காணி நிலங்கள் இருக்கின்றன. அக்காணிகளை அவர்களுக்கு உடனடியாக கொடுத்து தங்களது சொந்த உணவுற்பத்திக்காகவோ வீட்டித்தோட்டங்களை மேற்கொள்வதற்காகவோ அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டேன். உடனடியாக செய்வதாக அவர் வாக்களித்தார். இன்று பிரதமர் ஜனாதிபதி ஆகியும் இதுவரையில் எந்த செயற்பாடும் நடைபெறவில்லை.

காணி உரிமை என்பது தங்களது விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து விற்று வருமானம் தேடிக்கொள்வதற்கான காணி மற்றும் வசிப்பதற்கான வீடுகள் கட்டிக்கொள்வதற்கான காணி என வகைப்படுத்தலாம். இருப்பினும், இவ்விரண்டுக்கும் உரிமை கொடுக்கப்படாமல் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து இன்னமும் முழுமையான குடிமக்களாக அங்கீகரிக்கப்படவில்லை.

1964இல் இந்தியாவுடனான ஒப்பந்தம் மூலம் கணிசமானோரை இந்தியா பொறுப்பெடுத்துக்கொண்ட பின்னர் இலங்கை அரசாங்கம் கூறியது ஏனைய எஞ்சியிருப்போருக்கு முழுமையான குடியுரிமை வழங்குவதாக கூறியது. இருப்பினும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. காணி உரிமைகளும் வழங்கப்படவில்லை.

நவீன அடிமைத்துவம் பற்றிய ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபாகட்டா கருத்து தெரிவிக்கையில், பெருந்தோட்ட மக்கள் தொழிலாளர்களால் அடிமைக் கூலிகளாக ஒடுக்கப்படுகின்றனர். மறுபுறம் பெருந்தோட்ட மக்கள் பெறும்பாலும் இன ரீதியாகவும் ஒதுக்கப்படுகின்றனர் என இரண்டு காரணங்களை குறிப்பிட்டார்.

ஆகவே, இங்கு இன ரீதியான ஒடுக்குமுறையும் அதிகரிக்கிறது. பொருளாதார ரீதியாக கூலித் தொழிலாளர்கள் எனவும் ஒதுக்கப்படுகின்றனர். இதன் காரணமாகவே இவர்களுக்கு காணிகள் மறுக்கப்படுகின்றன. சில இடங்களில் சிங்களப் பெரும்பான்மையினருக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றன. ஆனால், கடந்த 200 வருடங்களாக 1823இல் வந்த இவர்களுக்கு இதுவரையில் காணிகள் வழங்கப்படவில்லை. இதற்கு காரணம் இனவாதமே. இதை நான் பகிரங்கமாகவே கூறுகிறேன். இதை நான் மட்டும் கூறவில்லை ஐ.நா. சபையும் கூறுகிறது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் பெருந்தோட்ட மக்கள், குறிப்பாக மலையக மக்களின் காணியின்மை பிரச்சினை குறித்து அவர்களின் அதிகளவான வாக்குகளைப் பெற்று அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட தமிழ் கூட்டணிக் கட்சி என்ற அடிப்படையில் நாம் முன்னின்று பேசவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அப்ரா அன்சார்

# ஆனந்தக் காதல்

பாட்டியின் வெட்கம்
தாத்தாவை இழுத்திடும்

அருகில் செல்லவே
ஆனந்தமும் பொங்கிடும்

பொக்கை வாயால்
சிரிப்பும் மலர்ந்திடும்

மங்கலான பார்வையில்
காதலும் பூத்திடும்

தளர்ந்திடும் உடம்பும்
இருக்கையில் சரிந்திடும்

அகத்தின் ஆசைகள்
முகத்தில் தெரிந்திடும்
அள்ளியே அணைத்திடவும்
மனமும் ஏங்கிடும்

மூக்குக் கண்ணாடியும்
சுருக்கத்தைக் காட்டிடும்

தேக்கிய அன்பும்
எல்லையைத் தாண்டிடும்

இணைந்த கைகளும்
இன்னலை விரட்டிடும்..!

*-ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்-*

# மழையில் குளித்த மரங்கள்

இரவெல்லாம்
மழை பொழிந்து தணிந்த
விடிகாலை வேளை

குடைதாண்டி குளிர்ச்சி
காதோடு உரச
குடையோடு நடக்கின்றேன்

குளித்து முடித்த மரங்களை
ரசித்தபடி

மழை மேகம் சூழ்ந்து
மழைப்பூக்கள் தூவி
குளிப்பாட்டும் வேளை

பூமித்தாயின் மடிப்பங்கம்
தலை சாய்ந்து குழந்தையாய்
ஆனந்த குளியல் போட்ட
மரங்கள்

குளிப்பாட்ட வந்த குளிர்
மேகம் மறைந்த காலை

தளிர் தலை நுனியில்
முத்தாக தரித்த
நீர்த்துளியின் குளிரான
சிலிர்ப்பில் காதலாகி கூதலோடு
குளிரில் நடு நடுங்கி

கதகதப்பாய் இளஞ்சூடான
கரம் நீட்டி அன்போடு
அரவணைத்து ஆரத்தழுவி
தலை
துவட்டிட காதலன் கதிரவனின்
வரவை எண்ணி காத்திருக்கும்
மரங்கள்

சாலைக்கு வரமாய்

இருமருங்கிலும் குடைபோல
வளர்ந்த மரங்களான
இயற்கையை ரசித்தபடி
குடையோடு நடக்கின்றேன்

*-மருதமுனை மௌஜுன்-*

## தூறல்கள்

# நாணாகவே நீ!

நானாகவே நீ
ஞாலம் முழுதும் உந்தன் தீ
விழியும் நீ
விழியின் கதிராய் நீ
பொழுதும் நீ
பொழுதினில் புதைந்த
நேசம் நீ
ஞாபகம் நீ
ஞாபகத்தேனில் விழுந்த
ஈயும் நீ
கண்மணியாய் நீ
கண்திரை தாண்டும் விம்பம்
நீ
காதல் கவி நீ
காதல் சொல்லும் காதையும்
நீ
சுழல்காற்று நீ
சுருளும் குழலில் சுண்டி
இழுப்பவள் நீ
திங்கள் நீ

திங்கள் தோற்கும் தேவதை
நீ
தங்கத்தூவானம் நீ
தாமரை இதழின் மென்மை
நீ
என்னை வெல்லும் எழிலி நீ
எதிரில் ஓடும் தெளிநீரோடை
நீ
அழகுச் சிற்பம் நீ
அன்பின் தெப்பமும் நீ
நானாகவே நீ
நரம்பின் கணத்தாக்கம் நீ
நாணம் நீ
இதய நாதத்தின் பேரோசை
நீ..!

*-Dr.ஜலீலா முஸம்மில்-*
*ஏறாவூர்*

# எரிந்து செல்லும் தேசம்

காலங்கள்
என்னை
இம்சைப்படுத்துவதால்
என்னுள்ளம் கவிதையாய்
அழுது பிரலாபிக்கிறது

மானுட மனங்களில்
மனித நேயங்கள்
நிர்மூலமானதால்
வக்கிரத்தனங்கள்
வரலாற்றை
வசீகரித்துக் கொண்டன

சோக ராகங்களால்
சூழப்பட்ட
எனது தேசம்
சௌந்தர்ய தாலாட்டுக்காய்
தவமிருக்கிறது

உமரும் உதயனும்
விக்டரும் விமலும்
ஒட்டி உருவாக்கிய
இலங்கைப் பாத்திரத்தில்

இனவாத ஓட்டை விழுந்து
மனுஷத்துவக் குருதி
ஒழுகிக் கொண்டிருக்கிறது

பகுத்தறிவு
காலாவதியாகிப்
போனதால்
பாச விலாசங்கள்
தொலைக்கப்பட்டு
மனித உருவங்களில்
மிருகக் குணங்கள்
குந்தி இருக்கின்றன.

காலங்களைக் காயப்படுத்தி
ஒற்றுமையை ஊனமாக்கி
நரித்தனங்கள்
நாடாளுவதால்
வெறித்தனங்கள் இங்கே
விதைக்கப்படுகின்றன

சமுதாயத் தெருக்களில்

சமத்துவம் பரப்பிய
சமயத் தலைமைகள்
சாயம் வெளுத்த
வெறும் சருகுகளாக
சிதறிக் கிடக்கின்றன

அழிவும் ஆணவமும்
தலைக்கேறியதால்
அன்பும் பண்பும்
அங்கவீனமாகி
மனுதர்மம்
முடமாகிப் போனது
கவலை நெருப்புக்குள்
உருகி வழியும்
மனுஷத்துவ எச்சங்களும்
ஊமைகளாக
உருமாற்றப்படுகின்றன

இடியப்ப சிக்கலாய்
இனவாதத்திற்குள்
சிக்குண்ட

எனது தேசம்
முடிவு காண
முடியாமல்
மூச்சுத் திணறுகிறது

மூர்க்கத்தனங்களால்
மூளைச் சலவை
செய்யப்பட்ட
மூத்த இனம்
சுயம் இழந்து சுற்றுகிறது

தேசத்தை எரித்து
சுயநல
குளிர் காயும்
தேசத் துரோகிகளே...
ஆளுங்கள்
பரவாயில்லை
ஆனால்
ஆணவத்தால்
அடிமைப்படுத்தாதீர்கள்
அழிந்து போவீர்கள்..!

*-வரக்காமுறையூர்*
*ராசிக்-*

# இது சிரிக்க மட்டும்!




கோயிலுக்கு ஒரு சாமியார் வந்திருந்தார். பல்வேறு விடயங்களைப் பேசி, நமக்கு ஆபத்து வரும்போது அதிலிருந்து தப்பிப்பது எப்படி என்பதை சொன்னார். "யானை துரத்தினால் வளைந்து வளைந்து ஓடு... நாய் துரத்தினால் ஓடாதே... திரும்பி முறைத்துப் பார்... பாம்பு துரத்தினால் நேராக ஓடு... புலி துரத்தினால் மரத்தின் மேல் ஏறு... சிங்கம் துரத்தினால் பிணம் போல் நடி..." என்றார். இப்படி எது துரத்தினாலும் தப்பிக்க சொல்லித் தந்தார். உடனே நான் "மனைவி துரத்தினால் என்ன சாமி செய்வது?" என்று கேட்டேன். வெகுநேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்... "அப்படி துரத்தப்பட்டு தப்பி வந்தவன்தான் நான்" என்று..!

# உயரலாம்..!



கறந்த பால் இரண்டு மணிநேரம் கெடாமல் இருக்கும்.
காய்ச்சினால் மேலும் பல மணிநேரம் இருக்கும்.
தயிராக்கினால் மேலும் இரண்டு நாள் கெடாமல் இருக்கும்.
வெண்ணையாக்கினால் ஒரு வாரம் இருக்கும். நெய் பல மாதம் கெடாமல் இருக்கும்.
உருக்க உருக்க உயர்வுதான்...!
நாமும் நம்மை மாற்றிக்கொண்டால்..!



குருவிடம் சிஷ்யன் கேட்டான்: "குருவே... நல்லது, கெட்டது இரண்டையும் இறைவன்தானே படைத்தான்? நாம் நல்லதைச் செய்யாமல் கெட்டதைச் செய்தால் என்ன?"

குரு அவனுக்கு எந்த பதிலும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். அன்றிரவு அனைவரும் பால் அருந்தும் நேரம் வந்தது. கேள்வி கேட்ட சிஷ்யனுக்கு மட்டும் பாலுக்குப் பதிலாக சாணியைத் தருமாறு குரு வேலையாளிடம் சொன்னார். சிஷ்யனுக்கு பதற்றமும் கோபமும் வந்துவிட்டது. "குருவே என்ன இது..?" என்று சற்று வாய்த்துடுக்காகவே கேட்டான். குரு அமைதியாகச் சொன்னார்: "இரண்டையும் பசு தானப்பா தந்தது..!"

# புகுந்த வீடு



"மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருக்காம்மா..?"

அப்பா கேட்கும்போது "இந்த மாப்பிள்ளை வேண்டாம்பா" என்றேன்.

"நீ கவலைப்படாதே... இந்த வரனை ஒப்புக்கோ... உன் வாழ்க்கை நல்லாயிருக்கும்" என்று சொல்லிட்டு எழுந்து போயிட்டார் அப்பா..!

நான் அப்பா பேச்சை என்றுமே மறுத்துப் பேசியதில்லை என்பதால் மனசுக்கு பிடிக்காவிட்டாலும் மௌனமாக சம்மதித்தேன்.

கல்யாணம் முடிந்து புகுந்த வீட்டில் நுழைந்ததுமே திகைத்துப் போய்விட்டேன்..!

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட மாமனார், நரம்புத் தளர்ச்சியால் கை, கால் பாதிக்கப்பட்ட மாமியார், மூளை வளர்ச்சி குறைந்த 25 வயது நாத்தனார்..!

கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போலாயிற்று.

பாழுங்கிணற்றில் வந்து விழுந்து விட்டேனே என்று மனசுக்குள் கதறினேன்.

ஏனோதானோனு வீட்டு வேலைகள் செய்யறது, யார் எதை கேட்டாலும் எரிந்து விழறதுனு என்னை நானே ஒரு பழி வாங்குபவளாக மாற்றிக்கொண்டேன்.

என் இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும் அந்தக் குடும்பம் என்னை தாங்கத்தான் செய்தது.

என் கணவர் என்மேல் வைத்த அன்பில் ஒரு குறையுமில்லை.

நான் எவ்வளவுதான் எரிந்து விழுந்தாலும் என்னை அன்போடு அரவணைத்துச் சென்றார் மாமியார்.

புகுந்த வீட்டில் ஆறு மாசம், பொறந்த வீட்டில் ஆறு மாசம்னு என் வாழ்க்கை போயிட்டிருந்தது.

ஒருநாள் என் வீட்டுக்கு பெட்டி படுக்கையோடு கிளம்பும்போது என் மாமியார் "நீ உன் அம்மா வீட்டில எவ்வளவு நாள் சந்தோஷமா இருக்கனும்னு நினைக்கிறியோ அவ்வளவு நாள் சந்தோஷமா இருந்திட்டு வா. ஆனா, உன் வருகைக்காக இங்கே ஒரு குடும்பம் காத்திட்டிருக்கும் என்கிறதை எப்போதும் மறந்து விடாதே"

அப்படின்னு சொன்னதுதான் தாமதம்,

முன்னோக்கி நகர்ந்த என் கால்கள் சடாரென்று பின்னோக்கி நகர்ந்தன..!

கைகள் பெட்டி படுக்கையை பட்டென்று கீழே உதறின..!

ஏதென்று புரியாமல் பார்த்த என் மாமியாரை ஓடிச்சென்று கட்டிப்பிடித்துக் கதறினேன்.

என் தலையை வருடி முன் நெற்றியில்

ஆதரவாக முத்தமிட்டார் என் மாமியார்.

எப்பேர்ப்பட்ட குடும்பத்தை என் நடவடிக்கைகளால் கொத்திக் குதறிவிட்டேன்..!

இதற்குப் பரிகாரமாக நான் என்ன செய்வேன்..! ஆண்டவனே என்னை மன்னித்து விடு..!

இப்போது என் பார்வையில் மாமியார் அம்மாவாகத் தெரிந்தார்.

மாமனார் அப்பாவாகத் தெரிந்தார்.

நாத்தனார் உடன்பிறப்பாகத் தெரிந்தாள்.

ஒரு நிமிடம்கூட என்னிடம் கடிந்திடாத என் கணவர் தெய்வமாகத் தெரிந்தார்.

இப்போது என் புகுந்த வீடு ஒரு கோயிலாகத் தெரிந்தது..!

# கணவன் உங்கள் கைப்பிடியில் இருக்க வேண்டுமா..?



வெளியில் சென்ற கணவன் தாமதமாக வீடு திரும்பினால் எரிந்து விழக்கூடாது.

கணவன் கோபமாகப் பேசும்போது வாயைத் திறக்கக்கூடாது. உறங்கும் போதும் சாப்பிடும் போதும் எந்தக் குறைகளையும் கூறக்கூடாது.

புகுந்த வீட்டில் யாரைப் பற்றியும் குறை கூறக்கூடாது.


கணவன் கேட்பதற்கும் அவர் கூறுபவைகளுக்கும் அலட்சியமாக நடந்துகொள்வதோ, பதில் கூறுவதோ கூடாது. விடுமுறை நாட்களில் வெளியில் சுற்றாமல் ஓய்வெடுக்கச் சொல்ல வேண்டும். வெளியில் செல்லும்போது அளவோடு பணம் கொடுத்தனுப்பக் கூடாது.

கணவன் வாங்கி வரும் பொருட்கள் எப்படி இருந்தாலும் "அருமை" என்று கூறவேண்டும்..!

## தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

# வியாபார தந்திரம்



ஒரு பையன் முட்டைக் கூடைகளுடன் துவிச்சக்கர வண்டியில் சென்றான்.

கல் தடுக்கி துவிச்சக்கர வண்டியுடன் விழுந்துவிட்டான். முட்டைகள் அனைத்தும் உடைந்துவிட்டன.

கூட்டம் கூடிவிட்டது.

வழக்கம்போல் இலவச உபதேசங்கள்:

"பார்த்துப் போக கூடாதா?"

"என்னடா... கவனம் இல்லாம சைக்கிள் ஓட்டுற?"

அப்போது ஒரு பெரியவர் அங்கு வந்தார்.

"அடடா...ஒரு சின்னப் பையன் இப்படி விழுந்து விட்டானே..! அவனது முதலாளிக்கு இவன்தானே பதில் சொல்லணும்?

எதோ என்னால் முடிந்த உதவி..." என பத்து ரூபாவைக் கொடுத்தார்.

அத்துடன், "தம்பி... இங்கே இருப்பவர்கள் நல்ல மனிதர்கள். உபதேசம் மட்டுமில்ல. ஆளுக்கு கொஞ்சம் பணமும் தருவார்கள். வாங்கிகொள்" என்றார். மக்களும் இவரது செய்கை, பேச்சைக் கேட்டு பணம் தந்தார்கள்.


முட்டை உடைந்ததைவிட அதிக பணம் சேர்ந்து விட்டது. பையனுக்கு மகிழ்ச்சி. அனைவரும் கலைந்து சென்றுவிட்டனர்.

அப்போது ஒருவர் அந்தப் பையனிடம் "தம்பி... அந்த பெரியவர் இல்லேன்னா உன் முதலாளிகிட்டே என்ன பாடுபடுவியோ?" என்றார்.

பையன் சிரித்துக் கொண்டே சொன்னான். "அந்த பெரியவர்தான் ஐயா என் முதலாளி..!"



குரு: கடவுள் எல்லா வீட்டுலயும் இருக்க முடியாதுன்னு தான் அம்மாவைக் கொடுத்தார்.
சிஷ்யன்: பொண்டாட்டிய ஏன் கொடுத்தார்?
குரு: கடவுளை மறந்துடக் கூடாதுல்ல..!



காரைக்கவி



# சீத்துவக்கேடு

## 214

அவர் பத்திவள்ளி கந்தையா எண்டவர் அப்புவோட சுருட்டுக்கொட்டிலிலை ஒண்டாச் சுத்திறவர். பொதுவாச் சுருட்டுக் கொட்டில்காறர் நல்ல உழைப்பாளியள் அதோட கடும் விசயகாரர். நல்ல அறிவாளியள். அரசியல், ஆன்மிகம், இலக்கியம் ,பொருளாதாரம், சமூகம் எண்டு நல்ல பரந்த பார்வையும் ஞானமும் உள்ள ஆக்கள்.

அவை உப்பிடி அறிவோடையும் அனுபவத்தோடையும் இருக்கிறதுக்கு முக்கிய காரணம், அவை சுருட்டிக்கொண்டு இருக்கேக்கை புத்தகம், பேப்பர் வாசிக்க எண்டு ஒருத்தரை வைச்சிருப்பினம். அவர் வாசிக்க வாசிக்க இவை கேட்டுக்கொண்டே சுருட்டுவினம்.

அவர் வாசிக்கிறவருக்கு எல்லாரும் தாங்கள் சுத்தின சுருட்டுகளிலை கொஞ்சம் குடுப்பினம். அந்தச் சுருட்டுகளைச் சுத்தின கூலி அவருக்குப் போகும். அதோட ரேடியோ ஒண்டும் இறப்பில தொங்கும் எல்லாச் செய்தியளும் ஒண்டு விடாமக் கேப்பினம்.

அநேகமாக உவை சுருட்டுக்காரர் எல்லாரும் இடதுசாரியச் சிந்தனை உள்ள ஆக்களாத்தான் இருந்தவை. எங்கட அப்புவின்ரை தம்பி ஒருத்தர் இருந்தவர். அவற்றை பெயர் டிசோல் முத்தையா. லங்கா சமசமாயக் கட்சியின்ரை ஒரு முக்கிய தூண்.

அவரிட்டை அரசியல் ரீதியா வாற ஏதும் சந்தேகங்களை ஆரும் கேட்டால், முக்கியமா கட்சிக்காரர் கேட்டால் உடனை தீர்த்து வைப்பாராம். அதாலதான் அவரை டிசோல் முத்தையா எண்டு சொல்லுறது. அதமாதிரி சுருட்டுக்காரருக்கு அப்புக்காத்து பிரக்கிரசிமாருக்கு இருக்கிற அறிவை விட வழக்கு விசயங்களிலை அனுபவ அறிவு கூட எண்டுறவை ஆக்கள். எங்கட அப்புவை பிரக்கிராசி ஒருத்தர் அடிக்கடி கூப்பிட்டுக் கதைக்கிறவர்.

அதோட உவை சுருட்டுக்காறர் கடும் சண்டியர்மாரும் கூட. இப்ப உள்ள எல்லாவிதமான சண்டியர்மாரின்ரை பிதாமகர்மார் உவை சுருட்டுக்காரர்தான். சண்டை, சச்சரவு எண்டு, பொலிசு கோடு கச்சேரி எண்டு போகாத சுருட்டுக்காறர் குறைவு எண்டுதான் சொல்லவேணும். தங்களிலை ஒருத்தருக்கு ஏதும் பிரச்சினை எண்டால் அவரின்ரை நன்மை தீமையளிலை எல்லாம் முன்னுக்கு நிண்டு மாய்வினம்.

அதுமாதிரி உவை கோயில் திருவிழாக்கள் செய்யிறதிலையும் கில்லாடியள். எங்கட கோயில்வழியை சுருட்டுக்காரருக்கு எண்டு திருவிழாக்கள் இருக்கும். அவையின்ரை திருவிழா எண்டால் சின்ன மேளம், நாடகம், மேளக் கச்சேரி, வில்லுப்பாட்டு, முத்துச் சப்பரம், வாணவேடிக்கை எண்டு திருவிழா வலு அமர்க்களமா விடிய விடிய நடக்கும்.

சில சுருட்டுக்காரர் சாடையாக் கீறிப் போட்டு வெளிவீதியிலை சால்வையைச் சுழட்டிச் சுழட்டி சனத்தைக் கட்டுப்படுத்திற வேலையிலை நிப்பினம். மற்றத் திருவிழாவளியை வால்சேட்டை விடுகிற பெடியள் சுருட்டுகாரரின்ரை திருவிழா எண்டால் வாலைச் சுருட்டி வேலியுக்கை செருகிப்போட்டுத்தான் வருவினம். இல்லாட்டில் பேந்து வாலும் இருக்காது ஆளும் இருக்காது எண்டு அவைக்கு நல்ல வடிவாத் தெரியும்.

பத்திவள்ளி கந்தையாவோடை கதைச்சுப் போட்டு வந்த அப்பு பேந்து கள் எண்டு வாற மிச்சப் பாட்டுகளையும் சொல்லத் துடங்கினார்.



**கள் அணி பசும் துளவினவை கரும் குன்று அனையவை (பரி 15/54)**

**புகை என புதல் சூழ்ந்து பூ அம் கள் பொதி செய்யா (கலி 31/19)**

**தேறு கள் நறவு உண்டார் மயக்கம் போல் காமம் (கலி 147/2)**

**கள் படர் ஓதி நின் படர்ந்து உள்ளி (அகம் 39/14)**

**கள் ஆர் வினைஞர் களம்-தொறும் மறுகும் ( அகம் 84/13)**

**எழுந்த தண்ணுமை இடம் கள் பாணி (அகம் 87/8)**

**தேம் பிழி நறும் கள் மகிழின் முனை கடந்து (அகம் 105/14)**

**இளம் கள் கமழும் நெய்தல் அம் செறுவின் (அகம் 113/6)**

**கள் கொண்டு மறுகும் சாகாடு அளற்று உறின் (அகம் 116/3)**

**கள் நாறு காவியொடு தண்ணென மலரும் (அகம் 150/11)**

**கால் உற கழன்ற கள் கமழ் புது மலர் (அகம் 153/17)**

**கள் உடை பெரும் சோற்று எல் இமிழ் அன்ன (அகம் 266/14)**


**தினை கள் உண்ட தெறி கோல் மறவர் (அகம் 284/8)**

**தெண் கள் தேறல் மாந்தி மகளிர் (அகம் 336/6)**

அப்பு உப்பிடிச் சொல்லிக்கொண்டு இருக்கேக்கை தேர்முட்டிப் பக்கமா பெடியள் கூக்காட்டி விசிலடிக்கிற சத்தம் ஒண்டு வர, அப்பு சொல்லிக்கொண்டு வந்ததை நிப்பாட்டிப்போட்டு தேர்முட்டிப் பக்கமா எட்டிப் பாத்தார்.

(இன்னும் ஆடுவம்)

---



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகம் தரும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய உறவினர்கள் மூலம் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சாமர்த்தியமாக சரிசெய்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதை சற்று ஒத்திப்போடவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். பணவசதி ஓரளவு திருப்தி தரும்.

### மிதுன ராசி அன்பர்களே!

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணவரவு அதிகரிக்கும். வாரத் தொடக்கத்தில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்கவேண்டி வரும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

### கடக ராசி அன்பர்களே!

ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். பணவரவைப் பொறுத்தவரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு இடமாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். புதிய முதலீடுக்கான பண உதவி கிடைக்கும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

### சிம்ம ராசி அன்பர்களே!

வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படும். கணவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

### கன்னி ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்புண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். பிறந்தவீட்டிலிருந்து சுபச்செய்தி ஒன்று கிடைக்கக்கூடும்.

### துலா ராசி அன்பர்களே!

கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள நேரிட்டு, அதனால் உடல் அசதி உண்டாகக் கூடும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். செலவுகள் ஏற்பட்டாலும் பணவரவு இருப்பதால் சிரமம் எதுவும் இல்லை. அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்புத் தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. கணவர்வழி உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

### தனுசு ராசி அன்பர்களே!

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டுவந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இடமாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

### மகர ராசி அன்பர்களே!

பணவரவுக்குக் குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன், சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவால் நீண்டநாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பது சாதகமாக முடியும். நீண்டநாட்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

### மீன ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிட வருமானம் கூடுதலாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். உறவினர்களால் சிலருக்கு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு பிள்ளைகள் வழியில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். அலுவலகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கடன் கிடைக்கும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சி ஒன்று புகுந்தவீட்டு உறவினர்கள் உதவியுடன் நடைபெறக்கூடும்.

தமிழன் சிறுகதை

# விஷக்கிருமிகள்

என்னுடைய ஸ்மார்ட் போனை அழுத்தி முகநூல் பக்கம் போனபோது அதில் ஒரு குறுந்தகவல் வந்திருப்பதாக அறிவிப்பு இருந்தது. அதனைக் கண்ட நான் அதனை அழுத்திப் பார்த்தபோது அதில்

"உங்களுடைய தொலைபேசி இலக்கத்தைக் கொஞ்சம் தரமுடியுமா..?" என்று கேட்கப்பட்டிருந்தது. அதனைக் கேட்டிருந்தவர் சமூகத்தில் மதிக்கப்படும் ஒருவர். முன்பு பிரதான வங்கியொன்றில் சேவையாற்றியவர் இப்போது ஓய்வூதியம் பெறுகிறார். போர் அடிக்காமலிருக்க ஒரு புத்தகக்கடை வைத்துள்ளார். அங்கு வருபவர்களிடம் அரசியல், சமூகக் கதைகளைக் கதைத்து வருவார். இவர் நல்லிணக்க சபையிலும் அங்கம் வகித்து வருகிறார்.



என்னுடைய தந்தைக்குத் தெரிந்தவர் என்பதால் எனக்கு அவர் கொஞ்சம் அறிமுகம். எனக்கு நெருங்கிய குடும்பம் ஒன்றுடன் அறிமுகமானதில் சற்று நெருக்கமானார். அக்குடும்பத்துடன் நான் சற்றுத் தள்ளியிருந்ததால் அவரை சந்திப்பது குறைந்துவிட்டது.

நாலைந்து மாதங்களுக்குப் பிறகு இப்போது இக்குறுந்தகவலை அனுப்பியிருக்கிறார். நானும் பதிலுக்கு என்னுடைய தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்துவிட்டேன். மறுநாள் அவர் எனக்கு அழைப்பை எடுத்தார்.

"தம்பி... என்னுடைய கடைக்கு கொஞ்சம் வரமுடியுமா..?" என்றார்.

அதற்கு நான் எதற்கு என்ற எந்தக் கேள்வியும் கேட்காமலேயே வருவதாக சொன்னேன். எதற்கென்று நான் யோசிக்கவுமில்லை.

மறுநாள் நான் அவரின் கடைக்குப் போனேன். என்னை கண்டதும் "வாங்க... வாங்க..." என்று வரவேற்றார்.

"என்ன அவசரமாக சந்திக்க சொன்னீங்க..? என்ன விடயம்..?" என்று அப்போதுதான் கேட்டேன். அதனைக் கேட்டவர் "அஹ்ஹஹ்ஹா..." என சிரித்தபடி

"அது ஒன்னுமில்லை தம்பி... எனக்குத் தெரிந்த ஒருவருக்கு அநியாயம் நடந்திருக்கு. அதைப்பற்றி பத்திரிகைக்கு ஒரு கதை எழுதிப் போடச் சொல்லுவோமுனுதான் கூப்பிட்டேன்" என்றார்.

நான் 30 வருடங்களுக்கு மேல் எழுத்துத்துறையில் பிரவேசித்ததிலிருந்து உண்மை நிகழ்வுகளை கருவாக வைத்தே அதிகமான படைப்புகளை எழுதுவது வழக்கம். அந்த வகையில் இதுவும் ஒரு கருவாகும் என்று நினைத்துக் கொண்டு சம்பவத்தை கேட்டேன்.

**புத்தளம் ஸாலிஹ் அஸீம்**

அவர் சொல்லத் தொடங்கினார்... அவற்றில் சில சம்பவங்கள் எனக்கு மிகவும் நெருக்கமான குடும்ப சாயலில் இருந்தன. பல விடயங்கள் அக்குடும்பத்தைப் பற்றி தப்பாக சொல்வதைப்போலிருக்க இடையில் குறுக்கிட்ட நான்

"அந்தக் குடும்பப் பின்னணியை வைத்தா சொல்றீங்க..?" என்றேன் அதனைக் கேட்டவர்

"ச்சே... ச்சே... அப்படி சொல்வேனா..? அது எனக்கு மிகவும் நெருங்கிய குடும்பம். அவர்களை இப்படி சொல்வது என்னை சொல்வதற்கு சமன். இது நான் கொழும்பில் வேலை செய்யும்போது என்னுடன் இருந்த நண்பருக்கு நிகழ்ந்த அநியாயம். அதைதான் ஒரு விழிப்புணர்வுக்காக உங்களிடம் சொல்கிறேன்" என்றார்.

அதனைக் கேட்ட நான் மீண்டும் ஒரு தடவை "இது அவர்கள் இல்லைதானே..?" என்று கேட்டேன். அதற்கு அவர்

"நான் பொய் சொல்லமாட்டேன். என்னை நம்புங்க. இதனால் உங்களுக்கு எந்த பிரச்சினையுமில்லை" என்றார்.

அவர் பொய் சொல்ல சந்தர்ப்பம் இல்லைதான். அப்படி அவர் பொய் சொல்பவராகவோ அடுத்தவருக்கு தீங்கு செய்பவராகவோ இருந்தால் அவரை நல்லிணக்க சபையில் உறுப்பினராக்கியிருப்பார்களா என்று நினைத்த நான் அந்த சம்பவத்தைக் கதையாக்கி பத்திரிகையில் பிரசுரமாகி வருடம் ஒன்றும் ஆகிவிட்டது.

நானொரு மரண வீட்டில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ஓர் அழைப்பு வந்தது. அது எந்தக் குடும்பம் பற்றிய தகவல் இல்லையென்று சொன்னாரோ அந்தக் குடும்பத்திலிருந்தே ஒருவர் எடுத்தார்.

அந்தக் கதையைப் பற்றி விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன்.

அதனைக் கேட்டவர் தனக்கு அக்கதையை உங்களிடம் எழுதச் சொன்னவர் நேற்று வட்சப்பில் அனுப்பி இது உங்களின் கதை. உங்களுடைய பெயரைச் சொல்லி நான் எழுதியுள்ளதாகவும் கேவலமாக கதைத்தார் என்றார். அவரின் சுயநலத்திற்கு உங்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன். உங்களுக்கு ஏதும் பிரச்சினையா என்றார். நான் அதற்கு

எதுவுமில்லை வேண்டியதை செய்யுங்கள் என்றேன். சமூக நலனுக்காகவே எழுதிவரும் என்னை சுயநலத்திற்கு பயன்படுத்தினாலும் நான் ஒதுங்கமாட்டேன் என்றேன். இதில் எனக்கு என்ன விந்தை என்றால் இப்படிப்பட்ட விஷக்கிருமிகளை எப்படி சமூகத்திற்கு நீதி வழங்கும் ஒருவராகத் தெரிவுசெய்தார்கள் என்பதே. அந்தக் குடும்பம் என்னை மன்னித்து விடுங்கள்.

(0 1 -080 )

## கோப்பி காட்டில்

குப்பாயி தம்பி தம்பியினு
பழனியாண்டி பய அவன
ஆசையா கூப்பிடுவா
"என்ன சாதி என்ன
எழவாருந்தா
எனக்கென்ன..."

சாதி கருமமெல்லாம்
செத்தபின்னே ஒன்னுமில்ல
சுத்தமான அன்பிருந்தா
வேர ஒன்னும்
தேவையில்லை

அந்த கோப்பிக்காட்டு
மலைதனிலே குப்பாயோட
சித்தாந்தம் இதுதா...

யாரு பெத்த புள்ளனாலும்
கூட்டிவந்து ஆதரிப்பா...
குடிக்கும் அந்த கேப்பயில
பத்தாது என்று சொல்லி
யாருச்சும் கிட்டவந்தா
பாதியா பங்கு வெய்ப்பா....

உடன் பொறந்த
பொறப்பாட்டம்
பழனியாண்டியயும்
அவ உள்ளுக்குள்ள
நெனச்சிருந்தா...
கலங்கி நிற்கும் அவே மனச
அக்கானு சொல்லும் இவ
அறியாம
இருப்பாளா...

அத்தாச்சி என்று சொல்லி
பழனியாண்டி கூப்பிடுவா...
யாருமத்த இந்தக் காட்டில்
அத்தாச்சி என்று சொல்லும்
குப்பாயி மட்டும்தான்
அவனுக்கு சொந்த
பந்தம்...

அத்தாச்சி கஞ்சி தண்ணி
கொஞ்சம் வேணும்
தொண்டத்தண்ணி
வத்திப்போச்சி...
வாசலில குந்திருக்கே
நாக்க நனப்பியாக்கா...

இப்படி அவே கேக்கயில...

என்னோட பொறந்தவனே
கஞ்சி குடிக்க நிய்யி
அனுமதி கேக்கனுமா
ஒன்னோட பொறப்பு நானு
உசுரோட இருக்கும் வர
உன் நாவ
நனைப்பேனடா...

இப்படி பதிலாக
அவளுரைப்பாள்...

கஞ்சி யேதும் இல்லாடியும்
கேப்ப சட்டியில தண்ணிவூத்தி
உப்பக்கொஞ்சம்
கூட சேத்து அவன் கையில்
கொடுத்திடுவா...

ஒரு வயிற்றில் பிறக்காட்டியும்
அழகான பந்த பாசம்...

என்னமாச்சம் செஞ்சி
சரி இவனுக்கு நல்ல
வாழ்க்கையொன்ன
அமைச்சிடனும் இப்படியே
விட்டுவிட்டா பழைய கதை
பேசி
வீணாக போவானென்று
குப்பாயி நெனச்சிக்கிட்டா...

சொக்கமுத்து யோசனையா
பனிய லயத்தில் உள்ள
பாப்பாத்தி புள்ளி பத்தி
நெனச்சி பாக்கயில

பழனியாண்டி தம்பிக்குமே
பொருத்தமாக அவளிருப்பா
ரெண்டு புள்ளகளும்
இருப்பதால
தவளைகளும் விலகிவிடும்...

என்று இரண்டு பேரும்
எண்ணிக்கிட்டே பாப்பாத்தி
புள்ளக்கிட பக்குவமா பேசி
இத
ஒத்துக்கிற வெச்சிக்கிட்டா
ரெண்டு பேரு
வாழ்க்கையிலும்
நல்ல வழி பொறந்திடுமே...

என்று குப்பாயி கூறி நிற்க
சொக்கமுத்தும்
ஆமோதிச்சான்...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் தொடர்கதை

# அசுரன்

மணிகண்டன் சுகுமாருக்கு கைபேசியில் இணைப்பை ஏற்படுத்தி தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் அவன் சட்டென,

"நீங்கள் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கீங்க.."

என்று சுகுமார் சொல்ல மணிகண்டன் அதிர்ச்சியடையவும் இல்லை. ஆச்சரியப்படவும் இல்லை. ஏனென்றால், அடுத்தடுத்து அடிபட்டதால் அவன் மனம் பக்குவப்பட்டு விட்டது. வருவது வரட்டும் என்ற தைரியம் ஏற்பட்டது.

"மிஸ்டர் சுகுமார்... நீங்க யார்னு எனக்குத் தெரியாது. உங்களை சந்தித்த ஞாபகமும் எனக்கில்லை. அப்படியிருக்கையில் எதற்காக அப்படி சொன்னீங்க..?"

"எனக்கும் உங்களைத் தெரியாது. பழக்கமும் இல்லை. மிகவும் கஷ்டப்பட்டு விசாரிச்சிட்டுத்தான் உங்களைத் தேடி வந்தேன். நான் இடைக்கிடை ஹோட்டல் 'மல்லிகை'க்கு டிரிங்ஸ் எடுக்கப் போறதுண்டு. நேத்தும் மாலை 7 மணி போல போனேன். நான் உட்கார்ந்திருந்த மேசைக்குப் பின்புறம் இரண்டு, மூணு பேர் குடிச்சிக்கிட்டிருந்தாங்க. அதுல நல்லா குடிச்சிட்டு போதை தலைக்கேறிய ஒருத்தன்தான் அந்த விஷயத்தை உளறினான்."

"டேய் சிவா... அவனைத் தொடர்ந்து கண்காணிக்கிறியா..? இல்லை நல்லா குடிச்சிட்டு குப்புற விழுந்து கிடக்கிறியா..?"

"என்னடா.. என்னை மடையன்னு நினைச்சிக்கிட்டிருகியா..? எவ்வளவு குடிச்சாலும் நான் நிதானமா இருப்பேன். அவன் பேர் என்ன..? மணிகண்டன். அவனோட வீட்லயிருந்து கைபேசிவரை என்கிட்ட இருக்கு. கைபேசி இலக்கத்தை சொல்லவா? கேட்டுக்க... அப்புறம் நம்ம தலைவரோட உத்தரவுப்படி 'பொருள்' கையில கிடைச்சவுடனேயே அவனை அடையாளம் தெரியாம அழிச்சிடணும். அதுமட்டுமில்ல... அவனோட காதலி பண்பரசியையும் பரலோகம் அனுப்புற வேலையையும் தலைவர் எனக்குத்தான் குடுத்திருக்காரு. சும்மாவா..? சுளையா 30 இலட்சம் தாராரே..! வேலையைக் கச்சிதமா முடிச்சிட வேண்டியதுதான்..!"

"இப்படித்தான் அவங்க பேசிக்கிட்டாங்க. அவன் உங்க பெயர் மட்டுமில்லை. கைபேசி இலக்கத்தையும் போதையில சொல்லிட்டான். அதுதான். ஒரு மணி போல உங்க விலாசத்தைத் தேடி கண்டுபிடிச்சி பைக்ல வந்தேன். ஆனா நீங்க இருக்கல்லை..."

"உங்களோட தகவலுக்கு ரொம்ப நன்றி. வேற ஏதும் பேச இருக்குதா..?"

"இருக்கு.. உங்க தோட்டத்துல முனி கோயில் இருக்கில்லையா..? அதைக் கட்டுறதுக்கு உதவி செஞ்சாரில்லையா குலசேகரன்... அவர் கிட்டத்தான் நான் வேலை

**அத்தியாயம்**



செய்யிறேன். கோயில் கட்டுறதுக்கான உட்கட்டமைப்புல இருந்து எல்லாத்தையும் நான் செஞ்சிக் குடுத்தேன். அப்புறம் வேலையைத் தொடங்கி அத்திவாரத்தைத் தோண்டுற சமயத்துல எனக்கு கொரோனா பாதிச்சி கொஞ்சம் கஷ்டப்பட்டுப் போயிட்டேன். வைத்தியசாலையிலயும் வீட்லயும் ஒரு மாசம் போல இருந்தேன். நான் குணமாகி வந்து பார்த்தப்ப கோயில் வேலை பாதி முடிஞ்சிருந்திச்சி. கோயிலைச் சுற்றி மறைச்சிருந்தாங்க. உள்ளூர்லயே நான் வேலைக்கு ஆட்களைப் பேசியிருந்ததேன். ஆனா, வந்து பார்த்தப்ப வெளியிலயிருந்து வேலைக்கு ஆட்களை கூட்டி வந்திருந்தாங்க. நான் இதைப்பற்றி குலசேகரன் ஐயா கிட்ட சொன்னேன். ஆனா, அவரு அதை பெரிசுபடுத்த

**பாலா சங்குப்பிள்ளை**

வேணாம்னு சொல்லிட்டாரு. மிஸ்டர் மணிகண்டன்... என்னால கைபேசியில சொல்ல முடியாத சில விஷயங்கள் இருக்கு. நீங்க முடிஞ்சா இன்றைக்கு இரவு 7 மணி போல நாணோயாவுல ஹோட்டல் 'ப்ரியா' தெரியுமா? டவுனுக்கு வெளியே அமைதியான இடத்துல இருக்கு. அங்கே வந்தா பேசலாம். எனக்கு என்னவோ உங்களுக்கு உதவி செய்யணும்னு தோணுது. என்ன வாரீங்களா?"

"ஓகே மிஸ்டர் சுகுமார். உங்களுடைய உதவிக்கு ரொம்ப நன்றி. நான் கட்டாயமா வாரேன்..."

மணிகண்டன் சுகுமார் சொல்லிய விடயங்களை உள்வாங்கிக் கொண்டான். அவன் சொல்லிய விடயங்களை வைத்து பார்க்கும்போது இங்கேயிருக்கும் முனிசாமி கோயிலுக்கும் நடக்கின்ற விடயங்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்றது. மேலும், அவர்கள் பொருள் என்று சொல்லும் தங்கயானை யாரிடமிருக்கின்றது..? என்னுடைய குடும்பத்தையே குறி வைக்கிறார்களென்றால் அந்தப் 'பொருள்' அவ்வளவு முக்கியத்துவம் மிக்கதா..?அவன் நேரத்தைப் பார்த்தான். மாலை 6 மணி சுகுமாரை சந்தித்தால் நிச்சயமாக நிறைய தகவல்கள் கிடைக்கலாம். மேலும், இனி உறக்கத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு வேகமாக செயற்பட வேண்டும். நாளை பௌர்ணமி 10 மணிவரை தான் காலக்கெடு. அதற்குள் பொருளைத்தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அவன் சுறுசுறுப்பானான். அறையை விட்டு வெளியே வரவும் அஞ்சனா தேநீர்க் கோப்பையுடன் வரவும் சரியாக இருந்தது. "நேரத்துக்கு சாப்பிடவும் மாட்டேனுறீங்க. இதையாவது குடிச்சிட்டுப் போங்க.. அப்புறம் இரவு சாப்பாடு இடியப்பமும் சம்பலும் செஞ்சி வைக்கவா..?" "இல்லையில்லை. நீங்க சாப்பிட்டு வீட்டைப் பூட்டி சாவியை எடுத்துட்டுப் போங்க. நான் எத்தனை மணிக்கு வருவேன்னு தெரியாது..." அவள் எதுவும் பேசாமல் அந்த இடத்தை விட்டு நடந்தாள். மணிகண்டன் வேறு உடை மாற்றிக் கொண்டு பக்கத்து வீட்டு நண்பன் ஸ்ரீசங்கரின் மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டு நானோயா டவுன் நோக்கிப் பயணமானான். முனிசாமி கோயிலை நெருங்கியபோது வாழைமரம் தோரணங்கள் கட்டுவதில் தோட்ட மக்கள் மும்முரமாக இருந்தார்கள். அவன் மயானத்தை அடைந்தபோது அங்கே மயான அமைதியிருந்தது. வேகமாக அந்த இடத்தை விட்டுப் பயணமானான். ஆனால், அடுத்தடுத்து அவன் வாழ்க்கையில் பயங்கரமான சம்பவங்கள் நடக்கப்போவதை அவன் அறிந்திருக்கவில்லை.

**(தொடரும்)**

ஏ.அகீல் சிஹாப்

# 32 அணிகள், 8 மைதானங்கள், 64 போட்டிகள், 28 நாட்கள், ஒரு சம்பியன்

# 22ஆவது பீபா உதைபந்து திருவிழா இன்று கட்டாரில் ஆரம்பம்

**ஜப்பான், அவுஸ்திரேலியா, தென்கொரியா போன்ற நாடுகளுடன் உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதில் போட்டியிட்டு வெற்றிபெற்று, பல விமர்சனங்களை தவிடுபொடியாக்கி இன்று எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் விதத்தில் தங்களது நீண்டநாள் கனவை நனவாக்கிக் காட்டப்போகிறது கட்டார்.**

விளையாட்டு உலகில் அதிக ரசிகர்கள் பட்டாளத்தைக்கொண்ட விளையாட்டு என்றால் அது உதைபந்து விளையாட்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு விளையாட்டில் மிக உயர்ந்ததுதான் உலகக்கிண்ணம். உதைபந்து உலகை நிர்வகிக்கும் சர்வதேச உதைபந்து சம்மேளனத்தினால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது. அதனை பீபா உலகக்கிண்ணம் என்றழைப்பர்.

**92 வருடங்களுக்கு முன்**

இற்றைக்கு 92 வருடங்களுக்கு முன்னர் கடந்த 1930ஆம் ஆண்டு முதல் முறையாக பீபா உலகக்கிண்ணம் உருகுவேயில் ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்றுவரையில் 21 உலகக்கிண்ணத் தொடர்கள் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளன. அந்தவகையில் இறுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் பீபா உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றதன் பின்னர் 22ஆவது தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை கட்டாரில் ஆரம்பமாகிறது.




**மத்திய கிழக்கில் முதல் முறை**

22ஆவது பீபா உலகக்கிண்ணத் தொடர் மத்திய கிழக்கிலுள்ள ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல் முறை. இன்றுமுதல் 28 நாட்கள், அதாவது, டிசம்பர் 18ஆம் திகதிவரை நடைபெறுகிறது. மொத்தம் 64 போட்டிகள் நடைபெறும். கோடிக்கணக்கான பில்லியன் செலவு செய்து உலகக்கிண்ணத்தை நடத்துகிறது கட்டார்.

**210 அணிகள் முயற்சி**

இந்த 22ஆவது உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க கடந்த 4 ஆண்டுகளாக 210 அணிகள் முயற்சி செய்தன. ஆனால், உலகக்கிண்ணத்தில் 32 அணிகள் மட்டுமே பங்கேற்கலாம். இதில் தொடரை நடத்தும் கட்டார் தானாகவே தகுதிபெற்றது. அவுஸ்திரேலியா, கோஸ்டா ரிகா, வேல்ஸ் ஆகிய அணிகள் இறுதியாக தகுதிபெற்றன.

**பங்கேற்கும் 32 நாடுகள்**

அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா, கெமரூன், மொரோக்கோ, துனீஷியா, செனகல், கானா, உருகுவே, ஈக்வடோர், ஆர்ஜென்டினா, பிரேஸில், போலந்து, போர்த்துக்கல், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து, செர்பியா, ஸ்பெயின், குரேஷியா, பெல்ஜியம், பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மனி, ஜப்பான், சவூதி அரேபியா, தென்கொரியா, ஈரான், கட்டார், வேல்ஸ், கோஸ்டா ரிகா, அவுஸ்திரேலியா.




**12 நாட்கள் குழுநிலை ஆட்டங்கள்**

12 நாட்கள் நீடிக்கும் குழு சுற்றுப் போட்டிகளின்போது, ஒவ்வொருநாளும் நான்கு போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றான 'ரவுண்ட் 16' சுற்றுக்கு முன்னேறும்.

**175 ஆயிரம் ஹோட்டல் அறைகள்**

கட்டாரில் நடைபெறும் இந்தத் தொடரில் சுமார் 15 இலட்சம் ரசிகர்கள் நேரில் பார்ப்பார்கள் என ஏற்பாட்டாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். இருப்பினும், அந்த நாட்டுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்காக சுமார் 1,75,000 ஹோட்டல் அறைகள் உள்ளன. 2019ஆம் ஆண்டில், கட்டார் ஒரு கப்பல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது. அதன்மூலம் மிதக்கும் ஹோட்டல்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.



**போட்டிக்காக 8 மைதானங்கள்**

பீபா உலகக்கிண்ணத் தொடருக்கென கட்டாரில் மொத்தம் 8 மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மைதானங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று ஒருமணிநேர பயணத்தில், அதிகபட்சமாக 43 மைல்கள் தொலைவில் உள்ளன.

லுசைல் ஸ்டேடியம் (கொள்ளளவு - 80,000), அல்-பேத் ஸ்டேடியம் (கொள்ளளவு - 60,000), அல்-றையான் ஸ்டேடியம் 974 (கொள்ளளவு - 40,000), எடியுகேஷன் சிட்டி ஸ்டேடியம் (கொள்ளளவு 40,000), கலீபா சர்வதேச அரங்கம் (கொள்ளளவு 45,416), அல்-துமாமா ஸ்டேடியம் (கொள்ளளவு - 40,000), டோஹா ஸ்டேடியம் (கொள்ளளவு - 40,000)

**தொடர் ஏன் குளிர்காலத்தில் நடத்தப்படுகிறது?**

பீபா உலகக்கிண்ணத் தொடர் வழக்கமாக ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறும். ஆனால், கட்டாரில் ஆண்டின் இந்த மாதங்களில் சராசரி வெப்பநிலை சுமார் 41 செல்சியஸ் மற்றும் 50 செல்சியஸை எட்டும். இத்தகைய வெப்பம் ஆபத்தானது. அதனால்தான் இறுதிப் பகுதியில் போட்டிகள் நடை பெறுகின்றன.

**மைதானத்துக்குள் குளிரூட்டும் வசதி**

அத்தகைய சூழ்நிலையில் 90 நிமிடங்கள் விளையாடுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஏலத்தின்போது, கட்டார் மேம்பட்ட ஏர் கண்டிஷனிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாக உறுதியளித்தது. இது மைதானங்கள், பயிற்சி மைதானங்கள் போன்ற இடங்களை 23 டிகிரி செல்சியஸ் வரை குளிர்விக்கும் என்று கூறப்பட்டது. இருப்பினும், 2015இல் போட்டியை குளிர்காலத்தில் நடத்த பீபா முடிவு செய்தது.

**கட்டாருக்கு ஏற்பட்ட சர்ச்சை**

இதுவரையிலான மிகவும் சர்ச்சைக்குரிய உலகக்கிண்ணம் இது என்று கூறப்படுகிறது. கட்டார் எப்படி இந்த உலகக்கிண்ண ஏலத்தை வென்றது, ஸ்டேடியம் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள், உலகக்கிண்ணத்துக்கு இது சரியான இடமா போன்ற கேள்விகள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன. திட்டத்துடன் தொடர்புடைய 30,000 புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நடத்தப்படும் விதம் குறித்தும் விமர்சனம் எழுந்துள்ளது. கட்டார் தொழிலாளர்களை வேலை செய்ய கட்டாயப்படுத்து வதாக மனித உரிமைகள் அமைப்பான அம்னெஸ்டி இன்டர்நேஷனல் 2016ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டியது. பல தொழிலாளர்கள்




மோசமான நிலைமைகளில் தங்கவைக்கப் பட்டுள்ளனர், அவர்களின் வீடுகள் வாழத் தகுதியற்றவை, அவர்களிடமிருந்து பெருமளவு ஆட்சேர்ப்புக் கட்டணம் பெறப்பட்டது, தொழிலாளர்கள் நாட்டைவிட்டுச் செல்ல அனுமதிக்கப்படவில்லை, அவர்களின் கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன என்பன போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. மைதான கட்டுமானத்துடன் தொடர்புடைய 30,000 புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் நடத்தப்படும் விதம் குறித்து கட்டார் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளது.

**ஜப்பான், ஆஸி. போன்ற நாடுகளை மிஞ்சி உலகக்கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பு கட்டாருக்குக் கிடைத்தது எப்படி?**

2022 உலகக்கிண்ணத்தை கட்டார் நடத்தும் என்று 2010இல் பீபா அறிவித்ததிலிருந்து சர்ச்சை ஆரம்பமானது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளை ஓரங்கட்டி கட்டார் இதை எப்படி சாதித்தது என்பது பலருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. இதற்காக பீபா அதிகாரிகளுக்கு கட்டார் இலஞ்சம் கொடுத்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஒரு சுயாதீன விசாரணையை பீபா நடத்தியது. குற்றச்சாட்டை நிரூபிக்கும் உறுதியான ஆதாரங்கள் எதுவும் விசாரணையில் கிடைக்கவில்லை.

பிரதிநிதிகளின் வாக்குகளை விலை கொடுத்து வாங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை கட்டார் மறுத்துள்ளது. மேலும் மூன்று பீபா அதிகாரிகள் பணம் பெற்றதாக 2020இல் அமெரிக்கா குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது.

**நடப்பு சம்பியன்**

இறுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தை பிரான்ஸ் வென்றது. ரஷ்யாவில் நடைபெற்ற இந்தப் போட்டியின் பரபரப்பான இறுதிப் போட்டியில் பிரான்ஸ் 4-2 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தியது. பிரான்ஸ் அணி உலகக்கிண்ணம் வென்றது அது இரண்டாவது முறையாகும்.

**தரவரிசையில் முதல் 10 இடங்களிலுள்ள அணிகள்**

பிரேஸில், பெல்ஜியம், ஆர்ஜென்டினா, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து, போர்த்துக்கல், டென்மார்க்.

**சம்பியனாகும் அணிக்கு 42 மில்லியன் டொலர்**

22ஆவது பீபா உலகக்கிண்ணத் தொடரின் மொத்த பரிசுத் தொகை 440 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது கடந்த 2018 உலகக்கிண்ணத் தொடருடன் ஒப்பிடுகையில் 40 மில்லியன் டொலர் அதிகமாகும். சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு 42 மில்லியன் டொலரும், 2ஆவது இடம்பெறும் அணிக்கு 30 மில்லியன் டொலரும், 3ஆவது இடத்தை பிடிக்கும் அணிக்கு 27 மில்லியன் டொலரும், 4ஆவது இடத்தை பெறும் அணிக்கு 25 மில்லியன் டொலரும் வழங்கப்படும்.

**முதல் ஆட்டம்**

இன்றைய தினம் நடைபெறும் முதல் ஆட்டத்தில் குழு 'ஏ'யில் இடம்பெற்றுள்ள தொடரை நடத்தும் கட்டார் அணியும், ஈக்வடோர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இதில் ஈக்வடோர் அணி வெற்றிபெறுவதற்கான 40 சதவீத வாய்ப்பு காணப்படுகிறது. 31 சதவீதம் சமநிலையும், 29 சதவீதம் கட்டார் அணி வெற்றிபெறும் வாய்ப்பும் காணப்படுகிறது.




FIFA WORLD CUP Qatar2022

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| QATAR | ENGLAND | ARGENTINA | FRANCE |
| ECUADOR | IRAN | SAUDI ARABIA | AUSTRALIA |
| SENEGAL | UNITED STATES | MEXICO | DENMARK |
| NETHERLANDS | WALES | POLAND | TUNISIA |
| **GROUP E** | **GROUP F** | **GROUP G** | **GROUP H** |
| SPAIN | BELGIUM | BRAZIL | PORTUGAL |
| COSTA RICA | CANADA | SERBIA | GHANA |
| GERMANY | MOROCCO | SWITZERLAND | URUGUAY |
| JAPAN | CROATIA | CAMEROON | SOUTH KOREA |

MARCA

**இதுவரையிலான சம்பியன்கள்**

பிரேஸில் (1958, 62, 70, 94, 2002) 5 தடவைகள், ஜேர்மனி (1954, 74, 90, 2014) 4 தடவைகள், இத்தாலி (1934, 38, 82, 2006) 4 தடவைகள், ஆர்ஜென்டினா (1978, 86) 2 தடவைகள், பிரான்ஸ் (1998, 2018) 2 தடவைகள், உருகுவே (1930, 50) 2 தடவைகள், ஸ்பெயின் (2010) 1 தடவை, இங்கிலாந்து (1966) 1 தடவை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளன.

**மீண்டும் பீபா தலைவராகும் கியானி**

சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் தலைவராக கியானி இன்பான்டினோ (சுவிட்சர்லாந்து) 2016ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவரும் நிலையில் இன்பான்டினோ போட்டியின்றி 3ஆவது முறையாக தெரிவுசெய்யப்படுகிறார். அவரை எதிர்த்து யாரும் போட்டியில் இல்லை என்று பிபா தெரிவித்துள்ளது. மேலும் இது தொடர்பான பிபாவின் அறிக்கையில், "மார்ச் 16 அன்று ருவண்டாவின் கிகாலியில் நடைபெறும் 73ஆவது தேர்தல் நடக்கும்போது இன்பான்டினோ மட்டுமே வேட்பாளராக இருப்பார் என்றும் வேறு எந்த வேட்புமனுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13 வயதுக்குட்பட்ட பிரிவில் சம்பியனான குருநாகல் பாலிகா




நெஸ்லே மைலோ அனுசரணையில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் 13 வயதுக்குட்பட்ட பிரிவில் குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது. கடந்த 11ஆம் திகதி வென்னப்புவ அல்பர்ட் எவ். பீரிஸ் மைதானத்தில் ஆரம்பமான குறித்த சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 13 வயதுக்குட்பட்ட பிரிவின் இறுதிப்போட்டியில் பி பிரிவில் போட்டியிட்ட குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தை 9 – 6 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7